# பழமொழிக் கதைகள்-10

கே.வி. குணசேகரம்.

## நூல் விபரம்

நூலின் பெயர் : பழமொழிக் கதைகள் 40

(கவிதை, உரை, பழமொழி, விளக்கம் , கதைகள்)

நூலாசிரியர் : கே. வி. குணசேகரம்.

பதிப்பாண்டு :

மொத்தப்பக்கங்கள் :

விலை :

விநியோகம் : லங்கா புத்தகசாலை

F.L. 1.14, டயஸ் பிளேஸ்

குணசிங்கபுர,

கொழும்பு – 12.

Tel : 011-2-341942

# அணிந்துரை

உயிர்கள் தோன்று முன்பே கடவுள் தோன்றி உலகையும், உயிர்களையும் படைத்ததாகச் சமயங்கள் கூறுகின்றன. சைவ சமயத்தை வளர்ப்பதற்காகவும், அதன் மூலம் மக்கள் நல்வாழ்வு பெற வேண்டும் என்று நினைத்தும் பண்டைய அறிஞர்கள் பல்வேறு விதமான தத்துவங்களைக் கூறும் அரிய நூல்களைப் படைத்துள்ளனர். இவை பெரும்பாலும் வடமொழியிலேயே உள்ளன. தமிழ் அறிஞர்கள், மக்கள் பயன்பெற வேண்டும் என்பதற்காக அரிய பல நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளனர். இந்த வகையில் இராமாயணம், கந்தபுராணம், மகாபாரதம் போன்ற ஒழுக்கத்தைக் கூறும் கதை வடிவிலான நூல்களும், தத்துவங்களைக் கூறும் வேத, உபநிடதங்களும், சமய சாத்திரத்தைக் கூறும் சிவஞான போதம் முதலிய நூல்களும் அடங்கும்.

கதை வடிவான நூல்கள் பெரியவர்களால் பிரசங்கம் செய்யும் போது இலகுவாக விளங்கின. அத்துடன் இவ்வகையான நூல்கள் வசன நடையில் எழுதப்பெற்ற தால் மக்கள் இரசித்தும் சுவைத்தும் வாசித்தனர். இவை நாடகங்களாக்கப்பட்டு மேடையேற்றப்பட்டன. அதனால் மக்களின் அன்றாட வாழ்வோடு அவை ஒன்றித்து விட்டன. ஆனால் சமய தத்துவ நூல்களும், சாத்திர நூல்களும் தத்துவ வடிவாகவே இன்றும் இருப்பதால் அதைப் பெருங்கல்விமான்களே உணர்ந்து பயன் பெற்றனர். அத்துடன் அவர்கள் எழுதுவதும், பேசுவதும் கூடச் சாதாரண மக்களால் புரிந்து கொள்ளப்படவில்லை. அந்தக் குறையைத் திரு. கே.வி. குணசேகரம் அவர்கள் தீர்த்து வைத்துள்ளார் என்றே எண்ணத் தோன்றுகிறது. வேத உபநிடதங்கள், திருக்குறள், திருமந்திரம், பகவத்கீதை, ஆத்திசூடி, ஆசாரக்கோவை, திருவருட்பயன், சிவஞான போதம் போன்ற தத்துவ சாத்திர நூல்களிற் கூறப்பட்ட தத்துவங்கள் யாவும் சிறுவர்களும் உணர்ந்து படிக்கக்கூடிய கதைகளாகக் குணசேகரம் அவர்கள் எழுதியுள்ளார். தத்துவக் கவிதை, அதற்கான உரை, விளக்கம், அதை விளக்கும் கதையென சுமார் நாலாயிரத்திற்கு மேற்பட்ட தத்துவங்களுக்குக் கதை எழுதியுள்ளார். இந்த வகையில் பழமொழி நானூறு என்ற பழமொழியிலான தத்துவக் கவிதைகளின் உரையும், விளக்கமும், கதையும் இலகுவானதாகவும், பொருத்தமான –தாகவும், வாசிக்கத்

தூண்டுவனவாகவும் உள்ளன.கதைகளில் மனிதப் பாத்திரங்களும், மிருகப் பாத்திரங்களும், உருவகிக்கப்பட்டுள்ளன. நீதிக்கதைகளாக எழுதப்பட்ட இக்கதைகள் மாணவர்களை மையமாக வைத்தே எழுதப்பட்டுள்ளன. குணசேகரம் அவர்கள் ஆசிரியராக, அதிபராக, கல்விப் பணிப்பாளராகக் கடமை புரிந்தமையால் பெரும்பாலான கதைகள் கல்வி சார் ஒழுக்கத்தைப் பற்றியே கூறுகின்றன. இன்றைய மாணவர்களினது தேவையை உணர்ந்து எழுதப்பட்ட இக் கதைகள் மிகவும் சிறப்பானவை. மாணவர்களும், ஆசிரியர்களும், பெற்றோரும் அறிந்து கொள்ள வேண்டியவை. நல்லதொரு எதிர்காலச் சமூகம் உருவாக வேண்டும் என்ற நோக்கில் எழுதப்பட்ட 400 கதைகளும் பொற்காசுகள் என்றே கூறுதல் வேண்டும். இப்படியான பல்லாயிரம் கதைகளைக் குணசேகரத்திடமிருந்து சமூகம் எதிர்பார்க்கிறது.

சி. கனகராசா
ஆசிரியர் ஓய்வு

# என்னுரை

'பழமொழி' என்பது பழையமொழி என்றும், நம் முன்னோரின் அனுபவமொழி என்றும் பொருள் கொள்ளப்படுகிறது. மக்களின் செம்மையான நல்வாழ்விற்கு உதவுவனவாகப் பழமொழிகள் விளங்குகின்றன. பழமொழியை 'முதுமொழி' என்றும் சொல்வர். இலக்கண இலக்கியங்களை வரையறை செய்த தொல்காப்பியர் பழமொழியையும் வரையறை செய்துள்ளார்.

**"நுண்மையும் சுருக்கமும் ஒளியுடை மையும்**
**ஒண்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்**
**குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்**
**ஏது நுதலிய முதுமொழி என்ப'**

என்பது தொல்காப்பியரது கூற்று.

அரையனார் என்ற புலவர் பாடிய கவிதையிலான இந்நூலின் முதல் இரு அடிகள் பழமொழி சம்பந்தமான தத்துவங்களைக் கூறுகிறது. பின் இரு அடிகள் முதலிரு வரிகளிற் கூறப்பட்ட தத்துவங்களைக்கான பழமொழியைக் கூறுகின்றது.

பழமொழி நானூறு என்ற இக் கவிதை நூலை முதன் முதலில் அச்சேற்றி வெளியிட்டவர் சோடசாவதானம் சுப்பிராயச் செட்டியார் அவர்கள். 1874ஆம் ஆண்டு இந்நூல் அச்சிடப்பட்டது. இதனை அடுத்து 1914 ஆம் ஆண்டு திருமணம் செல்வக் கேசவராய முதலியார் பதிப்பித்து வெளியிட்டார். 1918 – 1922ஆம் ஆண்டளவில் திரு. நாராயண ஐயங்கார் அவர்கள் 200 பாடல்களைப் பதிப்பித்து வெளியிட்டார். இதனை அடுத்துத் திரு. புலியூர்க்கேசிகன் அவர்கள் 1989 இல் செய்யுள்களை உரை நடையுடன் பதிப்பித்து வெளியிட்டார்.

வேதங்கள், உபநிடதங்கள், திருக்குறள், ஆத்திசூடி, பகவத்கீதை, திருமந்திரம், திருவருட்பயன், ஆசாரக்கோவை என்பன தத்துவங்களாகவும் உரைநடைகளாகவுமே இருந்தன.

அவற்றை முதன் முதலில் இலகுபடுத்தி உரை, விளக்கம், கதைகள் எழுதியதைப் போல பழமொழி நானூறு என்ற கவிதைகளுக்கும் உரை விளக்கம் கதை என்பன எழுதியுள்ளேன். பழமொழிகளின் பொருளைச் சிறுவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதே எனது நோக்கம்.

உரை எழுதுவதும், ஆய்வுகள் செய்வதும் மிகவும் இலகுவானது. உரையை ஆயிரக்கணக்கானோர் எழுதியுள்ளனர். அதை அப்படியே பின்பற்றி உரை எழுதலாம். ஆய்வையும் ஆயிரக்கணக்கானோர் செய்துள்ளனர். அதில் சில ஆய்வுகளைப் படித்து விட்டு அதைப் பார்த்து மொழி மாற்றம் செய்து புதிய ஆய்வொன்றைச் செய்யலாம். ஆனால் கதைகள் எழுதுவது மிகவும் சிரமமானது. அதனால் தான் யாரும் இந்நூல்களுக்குக் கதைகள் எழுதவில்லை.

காலங்காலமாக எழுதப்படும் உரைகளாலும் ஆய்வுகளாலும் சமூகம் எந்தப் பயனையும் அடையவில்லை. ஒரு சில மாணவர்கள் மட்டும் பயனடைந்தனர். உரைகளை, ஆய்வுகளை சாதாரண மாணவர்கள் விளங்கிக் கொள்ள மாட்டார்கள். அதனால் தத்துவங்களை மாணவர்கள் விளங்கிப் பின்பற்ற வேண்டு மென்பதற்காகவே அவற்றைக் கதைகளாக எழுதி வருகிறேன். இந்நூல்களை ஆராய்ந்து ஆலோசனைகள் கூறி எழுத்துப் பிழைகளைச் சீர் செய்து தந்த செல்வி. ப. இறைமகள் ஆசிரியைக்கும், இதைக் கணணி மயப்படுத்தித் தந்த திருமதி. கௌசலா நாகராஜன் அவர்களுக்கும், இந்நூலை வெளியிட்டு விற்பனை செய்து தரும் லங்கா பதிப்பக உரிமையாளர் திரு. கந்தசாமி இராசேந்திரனுக்கும் நன்றி கூறிக் கொள்கின்றேன். மீண்டும் சந்திப்போம். எனது ஆக்கங்களை www.kvkuna.com இல் பார்வையிடலாம்.

கே.வி. குணசேகரம்.
பிள்ளையார் கோவிலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.
ஸ்ரீலங்கா.

1 "அன்பானவர்களே, ஒருவனிடம் வசதி வாய்ப்புக்கள் வந்து சேரும் போது அவன் மிக மிக அவதானமாக இருத்தல் வேண்டும். அவ்வேளையில் தீயநண்பர்கள் வந்து சேர்வார்கள்; நல்லவர்கள் ஒதுங்கிக் கொள்வார்கள். இப்படியான வேளைகளில் தம்மிடம் செல்வம் இருக்கிறது என்ற நினைப்பில் பலர் தம் மனம் போனபடி நடப்பார்கள். நல்ல செயல்களைச் செய்ய மாட்டார்கள் ; தான தருமங்களில் ஈடுபடமாட்டார்கள். தமது தாய் தந்தையர், உற்றார், உறவினர்கள் துன்பப்பட்ட போதும் அவர்களுக்கு உதவ மாட்டார்கள். தனது நலனுக்காக எவ்வளவு பொருள் வேண்டுமானாலும் செலவு செய்வார்கள். இத்தகைய கீழோருக்குப் பணம் பொருள் இருக்கும் வரையும் நல்ல புத்திவராது. நல்லவற்றைக் கூறும் பெரியவர்களையும் இவர்கள் மதிக்கமாட்டார்கள். பணம் இல்லாத காலத்திலும் தாம் இன்பமாக வாழ்வோமென இவர்கள் கனவு காண்பார்கள். இவர்கள் அறியாமை மிக்கவர்கள்"

"சிவராசா ஒரு சிறுவர்த்கன். அவன் ஊரில் பலசரக்குக் கடை ஒன்று வைத்து நடத்தி வந்தான். அதிலிருந்து வரும் வருமானம். அவனது குடும்பத்தேவைகளுக்குப் போதுமானதாக இருந்தது. அவன் ஒரு நாள்ப்பட்டணத்திற்குச் சென்றபோது ஓர் அதிஷ்ட இலாபச் சீட்டை வாங்கினான். அதன் மூலம் அவனுக்குப் பல இலட்ச ரூபா பரிசு சேர்ந்தது. பரிசுத் தொகை கிடைத்ததும் அவன் கடையைப் பட்டணதிற்கு மாற்றினான். அத்துடன் பல வகையான பொருட்களை விற்பனை செய்யத்

தொடங்கினான். அதன் மூலம் அவனுக்குப் பெருந்தொகையான பணம் இலாபமாகக் கிடைத்தது”

“பணம் வந்து சேர்ந்ததும் பெரும் பெரும் நண்பர்களும் வந்து சேர்ந்தார்கள். அவர்களுக்கு அவன் வேண்டிய உதவிகளைச் செய்தான். ஆடம்பரமான விருந்துகளை வைத்தான். பல்வேறு நாட்டு உயர்குடி வகைகளை வாங்கி வந்து தானும் குடித்துத் தனது நண்பர்களுக்கும் கொடுத்தான்”

“சிவராசாவுடைய சகோதரி அருட்செல்வி. அவளது கணவன் விபத்தொன்றில் இறந்து விட்டான். அவளுக்கு இரண்டு ஆண் பிள்ளைகள். அவர்கள் பட்டணத்தில் உள்ள கல்லூரி ஒன்றில் கல்வி கற்றனர். கணவன் இறந்ததம் அருட்செல்வி தனது சகோதரனான சிவராசாவிடம் சென்று தனது பிள்ளைகளின் கல்விக்கு உதவி செய்யுமாறு கேட்டாள். சிவராசா அதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. பலமுறை அவள் சென்று இரந்து கேட்டும் சிவராசா உதவி செய்யவில்லை. அதனால் அருட்செல்வி தனது இரு பிள்ளைகளையும் பட்டணப் பாடசாலையால் மறித்து ஊரில் உள்ள ஒரு பாடசாலையில் கற்பித்தாள். அத்துடன் அவள் அவர்களைக் கற்பிப்பதற்காகக் கூலி வேலைகள் செய்தாள்”

“புகழில் மிகுந்த விருப்பமுள்ள சிவராசாவைப் புகழ்ந்து பலர் தமது காரியங்களைச் செய்து வந்தனர். தனக்கு மாலை

அணிவித்துப் பொன்னாடைபோர்த்தும்படி சிவராசா தனது நண்பர்களுக்குக் கூறி அதற்குண்டாகும் செலவுகளையும் கொடுப்பான். ஊரில் உள்ள சிலர் தாம் வாழ்வதற்காகச் சிவராசாவைப் புகழ்ந்து துதிபாடி வந்தனர்”

“ஐந்து வருடங்கள் கழிந்தன. அருட்செல்வியின் மகன் வைத்தியராகி விட்டான். அப்போது கடல் வாணிபம் செய்தான் சிவராசா. ஒரு நாள்ப் பெறுமதி மிக்க பொருட்களை ஏற்றிக்கொண்டு சிவராசாவின் கப்பல் கடலில் பயணித்த போது கடற்கொள்ளைக்காரர்கள் அக்கப்பலைக் கடத்திச் சென்று விட்டனர். அதனால் சிவராசா பெரும் பண நெருக்கடிக்குள்ளானான். அவன் தனது சொத்துக்களை விற்றுக் கடனைத் தீர்த்த போதும் பல இலட்ச ரூபா கொடுக்குமதியாக இருந்தது”

“அருட்செல்வியின் மூத்த மகன் தமது குடும்பத்திற்கு உதவிய ஏகாம்பரம் என்னும் தனவந்தரின் மகளைத் திருமணம் செய்து மிகவும் ஆடம்பரமாக வாழ்ந்தான். அருட்செல்வியும் மிகவும் வசதியாக வாழ்ந்தாள். அதனால் உதவிகோரிச் சிவராசா அருட்செல்வியிடம் வந்தான். அப்போது அருட்செல்வி சொன்னாள்; “ அண்ணா, ஒருவனிடம் செல்வமுள்ள போது அவன் கர்வங் கொண்டு தன்மனம் போன போக்கில் நடந்து கொள்வான். அவ்வேளையில் அவன் பிறரின் துன்பங்களைக் கண்டு கொள்ள மாட்டான். செல்வம் நிலைக்கும் என்று

நினைப்பான். இது முள்ளிச் செடியில் தேன் எடுத்து உண்பதைப் போன்றதென்று அவன் உணர்வதில்லை. ஆனால் நான் உணர்கிறேன். அதனால் தான் எனது மகனைத் தான தர்மங்கள் செய்யும்படி வற்புறுத்துகிறேன். எனது மகனுக்கு ஏகாம்பரம் ஐயா உதவி செய்யாது விட்டிருப்பாரானால் நாம் இன்று இந்த நிலையை அடைந்திருக்க முடியாது. அதை நினைத்துத் தான் நான் இரப்பவர்களுக்கு உதவிகள் பலவும் செய்யச்சொல்லி மகனுக்குச் சொல்லி வருகிறேன். உங்களுக்கும் உதவி செய்யச் சொல்கிறேன்" என்றாள் அருட்செல்வி. ஆகவே அன்பானவர்களே, முள்ளியிலே தேன் எடுக்கலாமென்று நினைக்கின்ற அறிவிலிகளைப் போல வாழாதீர்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

*செல்வத் துணையுந்தம் வாழ்நாட் டுணையுந்தாம்*
*தெள்ளி உணரார், சிறிதினால் செம்மாந்து*
*பள்ளிப்பால் வாழார், பதிமகிழ்ந்து வாழ்வாரே*
*முள்ளித்தேன் உண்ணு மவர்*

உடலிலே வலிமையும் பொருள் வளமும் இருக்கும் வரை சிற்றின்பத்தை அனுபவிப்போரே அதிகமானோர். இது தவிர்கப்படல் வேண்டும். **"முள்ளித்தேன் உண்ணுமவர்"** என்பது பழமொழி.

2 “அன்பானவர்களே, பெருங்கோபம் கொண்டு சண்டையிடுபவர்களிலும் பார்க்க உள்ப்பகையுள்ளவர்கள் மிகவும் மோசமானவர்கள். இவர்களுடன் மிகவும் எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும். கள்ளைக் குடித்து விட்டுப் பிதற்றுபவனிடம் இருந்து ஒரு செய்தியை அறிய வேண்டுமானால் அவனுக்குக் கள்ளு வாங்கிக் கொடுத்து அவனின் வாயாலேயே அச்செய்தியை அறிந்து கொள்வதைப் போல காலிலே முள்ளுத் தைத்தால் அதை இன்னொரு முள்ளால் தான் எடுத்தல் வேண்டும். தீயவர் ஒருவர் ஆராயாது பல்வேறு விதமான தொல்லைகளைத் தந்துகொண்டிருந்தால் அவருக்கு உபதேசம் செய்வதோ அல்லது புத்திமதிகள் சொல்வதோ சரிவராது. அவரின் கொடுமைகளை விலக்க இன்னொரு தீயவரை மிகவும் தந்திரமாகப் பயன்படுத்துதல் வேண்டும்”.

“தீயவர்கள் தம் கன்னத்தைக் குத்தி உடைக்கின்ற முரடர்களுக்குப் பயப்படுவார்களே தவிரக் கற்றுணர்ந்த பெரியவர்களுக்குப் பயப்பட மாட்டார்கள்”

“தில்லை வனம் மிகவும் செழிப்பான காடு. அங்கு மாதம் மும்மாரி பொழியும். அதனால் அங்குள்ள மிருகங்கள் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுப் பெரும் தனவந்தர்களாக வாழ்ந்து வந்தன”

“அக்காட்டில் வாழ்ந்த பன்றி ஒன்று பழத்தோட்டம் ஒன்றைச் செய்து பழங்களை விற்பனை செய்து வந்தது. மா, பலா, தோடை, மாதுளை, திராட்சை எனப் பல்வேறு வகைப்பட்ட மரங்களை அது நட்டுப் பராபரித்து வந்தது. அது மரங்களுக்குப் பசளையிட்டு நீர்ப்பாய்ச்சி கிருமி நாசினிகள் தெளித்து வந்ததால் பழமரங்கள் பெருந்தொகையாகக் காய்த்தன. அவற்றை விற்றுப் பன்றி மகிழ்வுடன் வாழ்ந்து வந்தது”

“ஒரு நாள்ப் பன்றியின் பழத்தோட்டத்திற்கு வந்த எருது பழங்களைக் கண்டு ஆசைப்பட்டு அவற்றைப் பறித்து உண்டது. அதைக் கண்ட பன்றி எருதின் அருகே சென்று ; “அண்ணா, நீங்கள் நான் மிகவும் கஷ்டப்பட்டு செய்யும் பழத் தோட்டத்தில் நுழைந்து எனக்கு முன்னால் என்னைக் கேளாது பழங்களைப் பறித்து உண்டு விட்டுப் பின் பழங்களைப் பறித்துச் சென்று சந்தையில் விற்கிறீர்கள். இது எனக்குக் கவலையைத் தருகிறது. அதனால் இனிமேல் அப்படிச் செய்யாதீர்கள்” என்றது”

அதைக் கேட்ட எருதிற்குக் கோபம் வந்தது; “இந்தக் காட்டுக்கு அரசன் நான் தான். நான் தினமும் வந்து பழங்களைப் பறிப்பேன். நீ ஏதாவது கதைத்தால் உன்னை எனது கூரிய கொம்புகளினால் குத்திக் கொன்று விடுவேன்” என்று மிரட்டியது”

“பன்றிக்குப் பயமாக இருந்தது. எருதின் நீண்ட கூரிய கொம்புகளைப் பார்க்க அதற்குப் பயமாக இருந்தது. அதனால் கொடியவனான எருதைக் கொடியவனைக் கொண்டே தந்திரமாக அடக்க வேண்டும் என்று நினைத்து அக்காட்டில் வாழும் நாகபாம்பிடம் சென்று அதை வணங்கியது. பின் தான் கொண்டு வந்த விதம் விதமான பழங்களை நாகபாம்பிற்குக் கொடுத்தது”

“நாகபாம்பும் கொடியது. அது காட்டு மிருகங்களைப் பயமுறுத்தி வைத்திருந்தமையால் அக்காட்டில் வாழும் மிருகங்கள் அதைக் கண்டதும் விலகிச் சென்று விடும். அப்படியிருக்கப் பன்றி வந்து தன்னை வணங்கியதை நினைக்க நாகபாம்பிற்கு மகிழ்ச்சியாக இருந்தது”

“நாகதம்பிரானே, நீ தெய்வம். சிவனின் கழுத்தில் இருப்பவன். இன்று நான் உன்னை வணங்குவதற்காகத்தான் பழங்களும், பாக்கு,வெற்றிலையும் தேங்காயும், பாலும் கொண்டு வந்தேன்” என்று கூறிப் பாலை வைத்து விட்டு தேங்காயை உடைத்துக் கற்பூரம் கொழுத்தி அதை விழுந்து வணங்கியது”

“பன்றியின் பேச்சும், அது நடந்து கொண்ட விதமும் நாகபாம்பிற்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது. அதனால் அது சொன்னது; “என்னைப் பற்றி முழுமையாகத் தெரிந்து

வணங்கும் உனது குறைகளை நான் தீர்ப்பேன். நான் உன்னைக் கடிக்க மாட்டேன்" என்றது"

"நாகதம்பிரானே. எனது பழத்தோட்டத்துக்குள் கொடிய மிருகமான எருது நுழைந்து பழங்களைப் பறித்துச் சென்று சந்தையில் விற்கிறது. அதை நீ தடுக்க வேண்டும். அதைத் தீண்டி விடாதே வெருட்டு" என்றது"

"பன்றி சென்ற பின் நாகபாம்பு பன்றியின் பழத்தோட்டதிற்குச் சென்று வாழை மரமொன்றின் அருகே மறைந்திருந்தது. சிறிது நேரத்தில் எருது நெஞ்சை நிமிர்தியவாறு பன்றியின் தோட்டத்திற்கு வந்து பழங்களைப் பறித்துக் கூடையில் போட்டது. நாகபாம்பு பலமாகச் சீறியபடி எருதின் முன் படமெடுத்து ஆடியது. அதைக் கண்ட எருதுக்குப் பயத்தால் உடல் நடுங்கியது"

"ஏ எருதே, பன்றி பாடுபட்டு உழைக்க நீ அதன் உழைப்பைத் திருடுகிறாய். ஒரு மாத காலமாகத் திருடி விற்றதோடு பன்றியை வெருட்டுகிறாய். பாவம் பன்றி. இன்று நான் உன்னைக் கொல்லப் போகிறேன்" என்றது நாகபாம்பு"

"எருது பயத்தால் நடுங்கியது; "நான் செய்தது பிழைதான். இனிமேல் நான் பன்றியின் தோட்டப் பக்கம் வரமாட்டேன். என்னை ஒன்றும் செய்யாதே" என்று அழுதது"

"நீ ஒரு மாதகாலமாகத் திருடி விற்ற பணம் முழுவதையும் இன்று பொழுது சாயுமுன் கொடுத்து விடல் வேண்டும். இனிமேல் இந்தப் பக்கம் வந்தால் உன்னைக் கொன்று விடுவேன்" என்று நாகபாம்பு சீறியது"

"எருது தப்பினேன் பிழைத்தேன் என்று ஓடிவிட்டது. அன்ற மாலை எருது தான் திருடி விற்ற பழங்களுக்கான பணத்தைக் கொண்டு வந்து பன்றியிடம் கொடுத்தது. அதன் பின்பு எருது பன்றியின் பழத்தோட்டத்திற்கு வருவதில்லை. அதனால் அன்பானவர்களே, பகையைப் பகையால் தான் களைய வேண்டும் என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***தெள்ளி யுணரும் திறனுடையார் தம்பகைக்***
***குள்வாழ் பகையைப் பெறுதல் உறுதியே***
***கள்ளினால் கள்ளறுத்தல் காண்டும்; அதுவன்றோ,***
***முள்ளினால் முட்களையு மாறு.***

தீயவர் ஒருவரின் கொட்டத்தை அடக்க இன்னொரு தீயவரைத் தந்திரமாகப் பயன்படுத்துதல் வேண்டும். **"முள்ளினால் முட்களையுமாறு"** என்பது பழமொழி.

**3** "அன்பானவர்களே, பழிபாவங்களுக்கு அஞ்சுகின்ற பெரியவர்கள் தினையளவாவது குற்றம் செய்தாலும் அதைப் பனையளவாக எண்ணித் தம்மைத் தாமே தண்டித்துக் கொள்வர். அத்துடன் அவ்வாறான செயல்களைச் செய்யவும் மாட்டார்கள்.

நீதி தவறுவது தான் ஒருவனுக்கு அழிவை உண்டாக்கும் காரணி. அதனால் நீதி தவறாது நடந்து கொள்ளல் வேண்டும். குற்றங்கள் செய்யாமல் வாழும் வாழ்க்கை தான் இம்மைக்கும் மறுமைக்கும் இன்பத்தைத் தருவது. குற்றம் செய்யுமுன்பே அதை உணராதவனின் வாழ்க்கை தீயின் அருகே வைத்த பஞ்சுப் பொதிபோல அழிந்து விடும். தீர்ப்புச் சொல்வோர் தம்மிடம் உள்ள குற்றங்களை நீக்கிய பின்பே மற்றவர்களின் வழக்கை விசாரித்தல் வேண்டும். பொருட்களின் மீதுள்ள அளவுக்கதிகமான ஆசையும், பொருட்களை ஈயாத தன்மையும் நீதியை வழுவச் செய்யும் என்பதை நீதி உரைப்போர் உணருதல் வேண்டும். அத்துடன் கர்வமும், பகையும் நீதியின் எதிரிகளாகும். அதனால் நீதி உரைப்போர் கர்வமும் பகையும் கொள்ளாதிருத்தல் வேண்டும். அப்படி வாழ்ந்தமையால் தான் மனுநீதி கண்ட சோழன் தனது மகனின் தேர்ச்சில்லுக்குள் அகப்பட்டு இறந்த பசுக்கன்றின் துயரைப் போக்குவதற்காகத் தனது மகனைத் தேர்ச்சில்லுள் வைத்து நெரித்துக் கொன்றான். நீதி தவறாது குற்றம் செய்தவர்களைத் தண்டித்தே தீரும். அதற்கு இளமை, மூப்பு என்பதில்லை. நமர், பிறர் என்ற பாகுபாடில்லை. அதனால் நீதி சொல்பவர் சரியாகச் சொல்லாவிட்டால் அது நீதி சொல்பவரையும் தண்டிக்கும்”

“முல்லை வனத்தில் உள்ள நீதி மன்றத்தில் யானை நீதிபதியாக இருந்தது. அது நடுவு நிலைமை தவறாதது. அயலவர், இனத்தவர், நண்பர் என எத்தரப்பினராக இருந்தாலும் அது வழக்கை நடுநிலையோடு நின்று விசாரித்துத் தீர்ப்புக்

கூறும். அதனால் அதைக் காட்டில் உள்ள அனேகமான மிருகங்கள் போற்றிப் புகழ்ந்து வந்தன. அது புகழுக்கும், பொருளுக்கும் ஆசைப்படாது தனது கடமையை உணர்ந்து செயற்படும். அதற்குக் கஜேந்திரன் என்றொரு சகோதரன் இருந்தது"

"கஜேந்திரன் பொருளாசை உள்ளது. தனது தமையனாரிடம் கூறி வழக்கைச் சாதகமாகத் தீர்த்து வைப்பதாக மிருகங்களிடம் கூறிப் பணம், பொருள் என்பவற்றைப் பெற்று ஆடம்பரமாக வாழ்ந்தது. ஒரு நாள் பன்றி ஒன்று முயலின் வீட்டில் நுழைந்து பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களைத் திருடி விட்டது. பின் அது கஜேந்திரனுக்குத் திருடிய பணத்தில் பெருந்தொகையைக் கொடுத்துத் தனக்குச் சாதகமாகத் தீர்ப்புக் கூறச் சொன்னது. கஜேந்திரன் பணத்தைப் பெறுமேதவிர தனது அண்ணனான நீதிபதிக்கு எதுவும் கூறாது. சில சந்தர்ப்பங்களில் அது கூறாமலே தீர்ப்பு அது பணம் வாங்கியவர்களுக்குச் சார்பாக இருந்து விடும்"

"இதனால் காட்டு மிருகங்கள் யானையைச் சந்தேகித்தன. நீதிவான் போல நடித்து யானை தனது சகோரனை வைத்துப் பணம் வாங்குகிறது என்று நினைத்தன"

"அன்று முயல் பன்றிக்கெதிராகப் போட்ட வழக்கு விசாரணைக்கு வந்தது. பன்றி முயலின் வீட்டில் திருடியதற்கான தடயங்கள் எவையும் சபையில் சமர்ப்பிக்கப்படவில்லை.

அதனால் பன்றி மற்றைய மிருகங்களுக்குப் பெருமையாகத் தனது கதைகளைக் கூறியது. நீதி மன்றத்தில் முயல் சோகத்துடன் நின்றது. பன்றி மிகவும் சந்தோசமாக நின்றது”

“யானை இருவரையும் மாறி மாறிப் பார்த்து விட்டுச் சொன்னது ; “பன்றியாரே, நீர் கொடுத்த பணத்தை எனது சகோதரனான கஜேந்திரன் எனக்குத் தராது தான் பெரியதொரு தென்னந்தோப்பை வாங்கி விட்டான். அதனால் அவனைப் பிடித்து வாருங்கள்” என்று யானை கட்டளையிட்டது”

“மகிழ்ச்சியாக இருந்த பன்றி திடீரென யானை அப்படிச் சொன்னதும் தடுமாற்றமடைந்து ; “கஜேந்திரன் மிருகங்களிடம் பணம் வாங்கிச் சொத்துச் சேர்க்கிறான்” என நினைத்து ; “ஐயா, நான் ஆபரணங்களும் பணமும் கொடுத்தேன்” என்றது”

“நீதிமன்றத்திற்கு வெளியே நின்று வேடிக்கை பார்த்த கஜேந்திரனைக் காவல் துறையினர் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தினர்”

“கஜேந்திரன், “பன்றியிடம் நான் பணம் வாங்கவில்லை” என்றது. பன்றி ; “கஜேந்திரனுக்குப் பணம் கொடுத்தேன்” என்றது”

“ஏன் பணம் கொடுத்தாய்?” என்று பன்றியைப் பார்த்து யானை கேட்டது”

“பன்றி பதில் சொல்லவில்லை. கஜேந்திரனையும் பன்றியையும் விடுதலை செய்யச் சொன்னது யானை. அன்று மாலை கஜேந்திரன் பன்றியைச் சந்தித்துச் சொன்னது; “பன்றியே, நீ தந்த பணத்தை நான் யானைக்குக் கொடுக்கவில்லை. யானை காசு போதாதென்று கூறுகிறது” என்றது கஜேந்திரன்”

“ஓர் இலட்சரூபா தந்தேன். அது போதாதா? நான் பன்றியின் வீட்டில் களவாடிய பொருட்களின் பெறுமதி மூன்று இலட்சம் ரூபாதான் வரும். இனித்தரக் கட்டாது திருட்டுக்கு பங்காளிகளான எருதுக்கும் எலிக்கும் கொடுத்தல் வேண்டும்” என்றது பன்றி”

“மறு நாள் நீதிமன்றம் கூடிய போது நீதிபதி பதிவு செய்யப்பட்ட நாடா ஒன்றை வானொலியில் போட்டது. ஓர் இலட்ச ரூபா தந்தேன். அது போதாதா? நான் பன்றியின் வீட்டில் களவாடிய பொருட்களின் பெறுமதி மூன்று இலட்ச ரூபா தான் வரும். இனித்தரக்கட்டாது. திருட்டுக்கு உதவிய எனது பங்காளிகளான எருதுக்கும் எலிக்கும் கொடுத்தல் வேண்டும்” என்றது வானொலி. பன்றியும் கஜேந்திரனும் எலியும் எருதும் குற்றத்தை ஒப்புக் கொண்டன. நீதிபதியான யானை சொன்னது ; “பன்றியே நான் தான் கஜேந்திரனைப் போல வேடமிட்டு உனது

வீட்டுக்கு வந்தேன்" என்றது. ஆகவே அன்பானவர்களே, நீதிக்கு இளமை, மூப்புக் கிடையாது. அது என்றோ ஒரு நாள்க் குற்றம் செய்தவரைத் தாக்கித் தண்டனை கொடுக்கும். அதனால் குற்றம் செய்யாது வாழப் பழகுங்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***சால மறைத்தோப்பிச் சான்றவர் கைகரப்பக்***
***காலை கழிந்ததன் பின்றையும் - மேலைக்***
***கறவைககன் றூர்ந்தானைத் தந்தையும் ஊர்ந்தான்***
***முறைமைக்கு மூப்பிளமை இல்.***

குற்றம் செய்தவர்கள் உடனேயும் தண்டிக்கப்படுபவர். காலம் கடந்தும் தண்டிக்கப்படுவர். அதனால் நீதிக்கு இளமை, மூப்பு என்பன இல்லை. **"முறைமைக்கு மூப்பிளமை இல்"** என்பது பழமொழி.

4

அன்பானவர்களே, தெய்வம் உதவி செய்யாவிட்டாலும், ஒருவர் தளராத ஊக்கத்துடன் முயற்சி செய்வாரேயானால் அவர் அம் முயற்சியில் வெற்றியடைவார் என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். ஆகவே தோல்வி அடுத்தடுத்து வருகிறது என்று மனம் சலியாமல் தொடர்ந்து உற்சாகத்துடன் முயற்சித்தால் வெற்றியடையலாம். ஒவ்வொருவரும் செய்யும் முயற்சிக்கமையவே அவர்கள் மேம்படுகிறார்கள். தோல்விகள் மகிழ்ச்சியை விரட்டும். மனச்சோர்வை உண்டாக்கும். வாழ்க்கையில் வெறுப்பை உண்டாக்கி விரக்தியடையச் செய்யும். அதனால் தோல்வியைக்

கண்டு அஞ்சாது மீண்டும் மீண்டும் உற்சாகத்துடன் உழைப்பதன் மூலம் தான் நினைத்ததை அடைய முடியும். மனம் தளர்பவனால் ஒரு சிறு துரும்பைக் கூட அசைக்க முடியாது. மனம் தளராதவன் மலையைக் கூட அசைப்பான்"

"வேதவனத்தில் வாழ்ந்த யானைக்குட்டி ஒன்று க.பொ.த. உயர்தர வகுப்பில் படித்துக் கொண்டிருந்தது. அது விஞ்ஞானம் கற்று வைத்தியராக வேண்டும் என்று நினைத்தது. கல்லூரி அதிபர் யானைக்குட்டி க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் விஞ்ஞானப் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றதால் அதை விஞ்ஞானம் கற்க விடவில்லை. யானைக்குட்டி பிடிவாதமாகத் தான் விஞ்ஞான பாடம் கற்க வேண்டும் என்று கூறியது. பாடசாலை அதிபர் அதை மறுத்தமையால் யானைக்குட்டி தான் படித்த தேசியப் பாடசாலையை விட்டு விலகிக் கிராமத்தில் உள்ள சிறியதொரு பாடசாலையில் சேர்ந்து விஞ்ஞானம் கற்றது. அப்பாடசாலையில் விஞ்ஞானம் கற்போர் குறைவு. அதனால் அப்பாடசாலை அதிபர் யானைக்குட்டியை விஞ்ஞான வகுப்பில் அனுமதித்தார்."

"இரண்டு வருடங்களின் பின் யானைக்குட்டி க.பொ.த. உயர்தரப் பரீட்சை எழுதியது. அது நன்றாகப் படித்திருந்தும் அதனால் சரியாகப் பரீட்சை எழுத முடியவில்லை. அதனால் அது எழுதிய மூன்று பாடங்களிலும் சித்தியடையவில்லை. அது கவலைப்படவில்லை. தொடர்ந்து உற்சாகத்துடன் படித்து

இரண்டாம் முறை பரீட்சை எழுதியது. அம்முறை அது மூன்று பாடங்களிலும் சாதாரண சித்தி பெற்றதால் மருத்துவ பீடத்திற்குத் தெரிவாகவில்லை”

“ஒரு நாள்த் தேசிய பாடசாலை அதிபர் வழியில் யானைக் குட்டியைக் கண்டு சொன்னார்; ‘விஞ்ஞானம் கற்கத்திறமை வேண்டும். நீ விஞ்ஞான பாடத்தில் திறமைச் சித்தி பெற்றதால் தான் நான் உன்னை விஞ்ஞானம் கற்க அனுமதிக்கவில்லை. நீ சித்தியடையமாட்டாய். சித்தியடையா விட்டால் எனக்கும் பாடசாலைக்கும் அவமானம். நீ கலைப்பாடங்களைப் படித்திருக்கலாம்” என்று கேலியாகச் சொன்னார். யானைக்குட்டி எதுவும் சொல்லவில்லை. தேசிய பாடசாலை அதிபரின் கேலிப்பேச்சை அது சவாலாக எடுத்துக் கொண்டது. க.பொ.த. உயர்தரப் பரீட்சை மூன்று முறைதான் எடுக்கலாம். இம்முறை சித்தியடையாவிட்டால் எனது கனவுகள் யாவும் கலைந்து விடும். அதனால் உற்சாகமாகப் படிக்க வேண்டும் என்று நினைத்து மனம் தளராமல் படித்துப் பரீட்சை எழுதியது.

“அன்று பரீட்சை முடிவுகள் வெளியாகின. யானைக்குட்டி மூன்று பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்று மருத்துவ பீடத்திற்குத் தெரிவானது. அப்பாடசாலையிலிருந்து இதுவரை யாரும் மருத்துவ பீடத்திற்குச் சென்றதில்லை. அதனால் பழைய மாணவர் சங்கமும் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் இணைந்து பெரியதொரு விழாக் கொண்டாடின.”

“யானைக்குட்டி பரிசுப் பொருட்களை வாங்கிக் கொண்டு தேசிய பாடசாலைக்குச் சென்று அதன் அதிபரைச் சந்தித்தது. அதிபர் சொன்னார்; “அறிவையும் திறமையையும் விட முயற்சிதான் பயனளிக்கும் என்பதை நிரூபித்து விட்டாய். இங்கு க.பொ.த. சாதாரண பரீட்சையில் பத்துப் பாடங்களுக்கும் அதிவிசேட சித்தி பெற்ற பலர் மூன்றாம் முறை கூட ஒரு பாடமும் சித்தியடையவில்லை. நீ வீரன்; தொடர்ந்தும் முயற்சித்து வைத்திய நிபுணனாக வா” என்று வாழ்த்தினார். ஆகவே அன்பானவர்களே, தொடர்ந்து தோல்விகள் வருகின்றனவென்று மனம் தளர்பவன் முன்னேற மாட்டான். தோல்விகளைத் தாங்கிக்கொண்டு மனம் தளராது முயற்சிப்பவன் எதிலும் வெற்றியடைவான்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்”.

***இனியாரும் இல்லாதார் எம்மிற் பிறர்யார்***
***தனியேம்யாம் என்றொருவர் தாமடியல் வேண்டா;***
***முனிவில ராகி முயல்க ; முனிவில்லார்***
***முன்னிய தெய்தாமை இல்.***

தோல்விகளால் மனம் தளராது நம்பிக்கையுடன் முயற்சிப்பவர்கள் தாம் நினைத்த காரியங்களில் வெற்றியடைவார்கள். **“முனிவில்லார் முன்னிய தெய்தாமை இல்”** என்பது பழமொழி.

5 “அன்பானவர்களே, ஒவ்வொருவரும் தத்தம் மனங்கள் கூறுவதை ஆராயாது செய்து தீமைகளை விலைக்கு வாங்கிக் கொள்கிறார்கள். மனதை அடக்கி வைத்திருப்பவர்கள் தான் பெரியவர்கள். அத்தகைய பெரியவர்களின் மன நிலையை அறிந்து தான் உலகம் இயங்குகிறது. ஆகையால் நன்மையான செயல்களையே செய்தல் வேண்டும். தீமையானவற்றைச் செய்பவனுக்கு எந்நாளும் தீமையே வந்து சேரும். ஒருவருக்குத் தீமையை முற்பகல் செய்தால் அது வட்டியோடு பிற்பகல் வந்து சேரும் என்று பெரியவர்கள் கூறுவார்கள். தீய செயல்கள் தீயைப் போன்றன. அது தீயைப் போலச் செய்பவனைச் சுட்டுப் பொசுக்கும். எமக்குத் தீங்கு செய்தவர்களுக்கும் நாம் தீங்கு செய்யக்கூடாது. ஏனென்றால் ஒருவர் மற்றவர்களுக்குத் தீமை செய்வதாக நினைத்துத் தனக்குத்தானே தீமை செய்து கொள்கிறார். தீராத வறுமை ஏற்பட்டால் இரந்துண்ணலாமே தவிரத் தீயசெயல்களைச் செய்து தீமைகளை அதிகரித்துக் கொள்ளக்கூடாது. மனதால் கூட தீய எண்ணங்களை நினைக்கக் கூடாது. ஏனென்றால் நினைவுகள் தான் செயலாகும். திரும்பத் திரும்பத் தீயசெயல்களை நினைப்பவன் காலப்போக்கில் தீயவனாக மாறிவிடுவான்”.

“முல்லைவனத்தில் ஒரு யானை வாழ்ந்து வந்தது. அது மிகவும் ஏழை. இருப்பினும் பிறரின் பொருளின் மீது ஆசை இல்லாது ஒழுக்கமாக வாழ்ந்து வந்தது. அது மிகவும் கஷ்டப்பட்டு உழைத்துத் தனது குடும்பத்தைக் காப்பாற்றி வந்தது. ஒரு நாள்

அது காட்டில் உள்ள சிவன் கோயிலுக்குச் சென்று சிவனை வணங்கி விட்டு வந்தது. அப்போது வழியின் ஓரத்தில் ஒரு சிறு பொதி இருந்தது. அது அதை எடுத்துப் பிரித்துப் பார்த்தது. அதற்குள்ப் பெறுமதியான தங்க ஆபரணங்களும் சில பத்திரங்களும் இருந்தன. காலையில் அவ்வழியால் சென்ற யாரோ அப்பொருட்களைத் தவறவிட்டு விட்டார்கள் என்று நினைத்து அதை எடுத்துச் சென்று காட்டின் மத்தியில் உள்ள வேப்பமரப் பொந்துள் வைத்தது"

"மறுநாள் அக்காட்டில் வாழும் பெருந்தனவந்தனான ஒட்டகம் காடு முழுவதும் தான் தொலைத்த பொருட்களைத் தேடியது. பொருட்களைத் தராவிட்டாலும் முக்கியமான பத்திரங்களைத் தந்துதவுமாறு அது காட்டு மிருகங்களைக் கெஞ்சியது. அப்பத்திரங்கள் இல்லாவிட்டால் தனது வாழ்வு பாழாகி விடும் என்று கூறி அழுதது"

" அன்று இரவு யானை வேப்பமரப்பொந்துள் வைத்த பொதியை எடுத்துக் கொண்டு ஒட்டகத்தின் வீட்டுக்குச் சென்றது. ஒட்டகததின் வீட்டுக்கு யானை அடிக்கடி இரக்கவும் வேலை செய்யவும் செல்வது வழக்கம். அதனால் யானையைக் கண்ட ஒட்டகம் ; "காலங்கெட்ட நேரத்திலா இரக்க வாறாய். போ" என்று கோபமாக ஏசியது. அதன் ஏச்சைப் பொருட்படுத்தாது உள்ளே சென்ற யானை தான் வைத்திருந்த பொதியைக் கொடுத்தது"

“அது தனது பொதி என்பதை உணர்ந்து கொண்ட ஒட்டகம் பொதியைப் பிரித்துப் பார்த்தது. அதற்குள்த் தான் வைத்த பொருட்களெல்லாம் இருக்கக் கண்டு மகிழ்வுடன் கூறியது ; “யானையாரே, ஆராயாமல் பேசி விட்டேன். என்னை மன்னித்துக் கொள்ளும்” என்று கூறி அதனுள் இருந்த பணத்தை எடுத்து யானைக்குக் கொடுத்தது”

“எனக்கு வேண்டாம் ஐயா, ஒழுக்கமுள்ளவன் இரந்துண்ணலாம். ஆனால் பிறரின் பொருளுக்கு ஆசைப்படலாகாது. நான் பொருளில் ஆசைப்பட்டிந்தால் முழுவதையும் எடுத்திருப்பேன். ஒழுக்கமாக வாழ்பவர்களை இறைவன் சோதிப்பானே தவிரத் துன்பம் செய்ய மாட்டான். எனக்கு இறைவன் தருவான்” என்று சொல்லி விட்டு யானை சென்றது”

“யானையின் பேச்சும் செயலும் ஒட்டகத்திற்கு வியப்பை அளித்தது. ஒட்டகம் பெரிய வர்த்தகன். வர்த்தக நிலையத்தின் முகாமையாளராக எருது பணியாற்றி வந்தது. அது பொருளாசையால் விற்பனை செய்யும் பொருட்களின் நிறையைக் குறைத்தும், கலப்படம் செய்தும் சில்லறை வியாபாரிகளுக்கு விற்பனை செய்து வந்தது. சில்லறை வியாபாரிகள் அதை ஒட்டகத்திற்கு அடிக்கடி முறையிட்டு வந்தனர். ஒட்டகம் அப்படிச் செய்ய வேண்டாம் என்று எருதுக்குப் பலமுறை கூறியும் எருது அதைச் செவிமடுக்கவில்லை.

அதனால் ஒட்டகம் எருதை நீக்கி விட்டு அப்பதவியை ஒழுக்கமாக வாழும் யானைக்குக் கொடுத்தது. சம்பளத்தையும் அதிகமாகக் கொடுத்தது. யானை ஒழுக்கமாக நடந்து ஒட்டகத்தின் வியாபாரத்தைப் பெருக்கியது. அதனால் மகிழ்ந்த ஒட்டகம் வர்த்தக நிலையத்தில் சகல பொறுப்புக்களையும் யானையிடம் ஒப்படைத்து விட்டு ஓய்வு எடுத்தது. ஆகவே அன்பானவர்களே, ஒருவர் முற்பகலில் நன்மை அல்லது தீமை செய்தால் அது பிற்பகலில் நன்மையாகவும் தீமையாகவும் வந்து சேரும்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***நெடியது காண்கிலாய் நீயெளியை நெஞ்சே !***
***கொடியது கூறினாய்; மன்ற – அடியுளே***
***முற்பகல் கண்டான் பிறன்கேடு தன்கேடு***
***பிற்பகல் கண்டு விடும்.***

பிறருக்குக் கேடானவற்றைச் செய்தால் செய்தவருக்குக் கேடுவரும். அது போலவே நன்மையும் வந்து சேரும். **"முற்பகல் கண்டான் பிறன்கேடு, தன்கேடு பிற்பகல் கண்டுவிடும்"** என்பது பழமொழி.

6 "அன்பானவர்களே, மூத்தவர்களான பெரியவர்களின் அறிவுரைகளைக் கேட்டு அதன்படி நடப்பவர்கள் வாழ்க்கையில் எப்பொழுதும் இன்பத்தையே அனுபவிப்பார்கள். அவர்களது வாழ்வில் துன்பங்கள் வரப் பெரியவர்களின் வார்த்தைகளும் ஆசியும் விடாது. பெரியவர்கள் எப்பொழுதும் நல்லவற்றையே கூறுவார்கள். அத்தகைய பெரியவர்களைப் போற்றி அவர்கள்

கூறும் அறிவுரைகளை ஏற்று அதன்படி நடப்பவர்கள் எல்லாவிதமான நன்மையையும் பெறுவார்கள். அவர்களைப் பின்பற்றி உலகம் நடக்கும். பெரியவர்களது வாய்ச்சொற்கள் ஆரம்பத்தில் பெருந்துன்பங்களையே தரும். துன்பத்தைப் பொருட்படுத்தாது அவர்களின் சொற்படி நடப்பவர்கள் இறுதியில் பெரும் இன்பங்களை அனுபவிப்பர்"

"முல்லை வனத்திலே இளம் மிருகங்கள் சில கூட்டமாகச் சேர்ந்து தீய செயல்களில் ஈடுபட்டு வந்தன. பன்றி, எருது, குரங்கு, கரடி போன்ற இளம் குட்டிகள் காட்டிலுள்ள மிருகங்களைக் கேலி செய்வது ; திருடுவது ; தர்க்கங்களில் ஈடுபடுவது ; தனது தோழர்களுக்காகச் சண்டையிடுவது போன்ற செயல்களில் ஈடுபட்டு வந்தன."

"அக்காட்டில் உள்ள நன்கு கற்றறிந்த பெரியவரான யானை அக்காட்டில் வாழ்ந்த இளைஞர்களையெல்லாம் அழைத்துப் புத்திமதி சொன்னது ; "அன்பான இளம் மிருகக் குட்டிகளே, நீங்கள் வாலிப மிடுக்கால் பல தீய செயல்களைச் செய்கிறீர்கள். கற்ற நீங்கள் கற்றபடி நடவாது வாழ்வது எனக்கு மிகுந்த கவலையை அளிக்கிறது. காரணமின்றி மூத்தவர்களையும், இளையவர்களையும் கேலி செய்கிறீர்கள். உங்களுடன் ஒத்துழைக்க மறுக்கும் இளைஞர்களைத் துன்புறுத்துகிறீர்கள் ; பெரியவர்களை மதிக்கிறீர்கள் இல்லை.

அதை விட மாலை நேரங்களில் கள் குடித்து விட்டு மதியிழந்து செயற்படுகிறீர்கள்”

“என் அன்பான பிள்ளைகளே, கள்ளுண்பவர்களுக்குப் பகைவர்கள் அஞ்சாது பல தீமைகளைச் செய்வார்கள். கள்ளுண்பவர்களை நல்லவர்கள் மதிக்க மாட்டார்கள். பெற்ற தாய் கூட அவர்களை மதிக்கமாட்டாள். அத்துடன் கள்ளுண்பவர்கள் அஞ்சாது பழிபாவங்களைச் செய்வர். இதனால் தான் பெரியவர்கள் கள்ளுண்ணக்கூடாது என்று சொல்கிறார்கள். நீங்கள் குரங்கின் தலைமையில் காட்டின் அருகே உள்ள மனிதர்களின் தென்னந் தோட்டத்துக்குள்ச் சென்று மரங்களில் ஏறிக் கள்ளை முட்டியுடன் எடுத்து வந்து குடிக்கிறீர்கள். அத்துடன் களவும் எடுக்கிறீர்கள். மனிதர்கள் இயல்பாகவே கொடியவர்கள். அவர்கள் காட்டுள் நுழைந்து மிருகங்களை வேட்டையாடி உண்கின்றனர். பழி பாவங்களுக்கு அஞ்சாத மனிதர்கள் உங்களுக்குத் தண்டனை தருவார்கள். அதனால் நீங்கள் திருடுவதையும் கள்ளருந்துவதையும் விட்டு விடுங்கள். நல்லவற்றைச் சொன்னால் உங்கள் வயதில் உள்ளவர்கள் ஏற்று நடக்கமாட்டார்கள் என்பது எனக்குத் தெரியும். உங்களுக்குத் துன்பம் வரக்கூடாது என்பதற்காகச் சொன்னேன். கேட்டு நடவுங்கள்” என்றது யானை”

“யானை சென்றதும் குரங்கு, யானை பேசியதைப் போலப் பேசிக் காட்டியது. பன்றியும் எருதும் கழுதையும், கரடியும்

பெரிதாகச் சிரித்தன. குதிரையும், மானும், முயலும், தவளையும் அவ்விடத்தில் நிற்காமல் சென்று விட்டன”

“அன்று இரவு குரங்கு தென்னை மரங்களில் ஏறிக் கள்ளு முட்டிகளைக் கழற்றிக் கொண்டு வந்து கொடுத்தது. குரங்கின் நண்பர்களான பன்றியும் எருதும் கழுதையும் கரடியும் நன்றாகக் குடித்தன. வெறி மயக்கத்தில் குரங்கு சொன்னது ; “தென்னையில் ஏறி நான் இளநீர் பறித்துப் போடுகிறேன். கொண்டு சென்றால் விற்கலாம்” என்று கூறி மரத்தில் ஏறித் தேங்காய்களையும் இளநீர்களையும் பறித்துப் போட்டது”

“வீட்டுக்கு வந்த குரங்கினது வயிறு கலக்கியது. மனிதர்கள் கள்ளில் பேதி மாத்திரைகளை அளவுக்கதிகமாகக் கலந்து விட்டமையால் குரங்கும். கரடியும் எருதும், பன்றியும் வயிற்றுப் போக்கால் கஷ்டப்பட்டன. பலமுறை வயிற்றுப் போக்கு ஏற்பட்டதால் அவை சுயநினைவை இழந்தன”

“வைத்தியசாலையில் அனுமிக்கப்பட்ட குரங்கும் பன்றியும் இறந்து விட்டன. எருதும் கரடியும் ஐந்து தினங்களுக்குப் பின் சுயநினைவடைந்தன”

“யானை, எருதையும், கரடியையும் பார்க்க வைத்தியசாலைக்கு வந்தது ; “பெரியவரே, அன்று உங்களது சொற்களைக் கேட்டிருந்தால் எமக்கு இந்த நிலை வந்திராது.

அநியாயமாகக் குரங்கும் பன்றியும் இறந்து விட்டன. நல்லவற்றைக் கேட்கவும், செய்யவும் கஷ்டமாகத்தான் இருக்கும். ஆனால் அவை வாழ்வில் துன்பத்தை ஏற்படுத்தாது என்பதை அறிந்து கொண்டேன். இனிமேல் நான் தீய செயல்களில் ஈடுபடமாட்டேன். பெரியவர்களின் சொற்களை ஏற்று நடப்பேன்” என்றது எருது. கரடி சக்தியில்லாது முனகி முனகி அழுதது. ஆகவே அன்பானவர்களே, பெரியவர்கள் சொற்படி நடந்து வாழ்வை மேம்படுத்துங்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***செயல்வேண்டா நல்லன செய்விக்கும்; தீய***
***செயல்வேண்டி நிற்பின் விலக்கும்; இகல்வேந்தன்***
***தன்னை நலிந்து தனக்குறுதி கூறலால்***
***முன்னின்னா மூத்தார்வாய்ச் சொல்.***

பெரியவர்களின் அறிவுரைகள் ஆரம்பத்தில் துன்பம் தரும். ஆனால் இறுதியில் இன்பாகவே முடியும். “**முன்னின்னா மூத்தார் வாய்ச்சொல்”** என்பது பழமொழி.

**7** “அன்பானவர்களே. ஒருவர் இரக்கமற்றவராக இருக்கலாம் ; ஆராயாது பேசுபவராக இருக்கலாம் ; தர்மம் செய்யாதவராக இருக்கலாம். ஆனால் புறங்கூறாதவராக வாழ்ந்தால் அது போற்றுதற்குரியது. ஒருவரிடம் உதவிகள் பெறும் போது புகழ்ந்து பேசி, அவர் இல்லாத இடத்து அவரிடம் பெற்ற உதவிகளைச் சிறுசிறு உதவிகள் என்று நினைத்து அவரைப் பழித்துப் பேசுவது அறத்தைப் பழித்துப் பேசுவதை

விடக் கீழானதாகும். ஒருவரிடம் உதவி பெற்று விட்டு அவரைப் பழித்துப் பேசுவதை விட உதவி பெறாமல் உயிரைவிடுவது மேலானது. சொல்ல வேண்டியவற்றை நேரிற்கூற வேண்டும். சம்பந்தப்பட்டவர் இல்லாத இடத்து அவரைப் பற்றிப் புகழ்ந்து கூறினாலும் கேட்பவர்கள் அதைத் தவறாகக் கருதிச் சம்பந்தப்பட்டவர்களுக்குக் கூறினால் உதவி செய்தவர் மனம் நோவார். அதனால் புறங்கூறாது வாழுதல் வேண்டும். புறங்கூறுபவர்களைக் கண்டால் நல்லவர்கள் ஒதுங்கிக் கொள்வார்கள். அவர்களுடன் கதைத்தாலே பாவமும் பழியும் வந்து சேர்ந்து விடும் என்று நல்லவர்கள் அஞ்சுவார்கள்"

"முருகவனத்தில் யானை ஒன்று வாழ்ந்து வந்தது. அது அறிவு தரும் நூல்களைத் தேடிக் கற்று வந்தது. மிக்க ஒழுக்கமுள்ள அது பெரும் வசதியுடையதல்ல இருப்பினும் தன்னைத் தேடி வந்து உதவி கேட்பவர்களுக்கு அது இல்லை என்று கூறாது உதவி செய்யும். பெருந் தொகையாக யாராவது கேட்டால் அது சொல்லும் ; "ஐயா, நான் பெரும் வசதி படைத்தவனல்ல. இருப்பினும் என்னாலியன்ற உதவிகளைக் கைம்மாறு கருதாமல் செய்து வருகிறேன். நீங்கள் கேட்ட தொகையை என்னால் கொடுக்க முடியவில்லை என்பதை நினைக்க எனக்கு வேதனையாக உள்ளது. பிறரிடம் இரந்து தண்ணீரைப் பெற்றுப் பசுவுக்குக் கூடக் குடிக்கக் கொடுக்கக் கூடாதென்று நீதி நூல்கள் கூறுகின்றன. அதனால் தர்மம் செய்யக்கூட என்னால் இரக்க முடியாது" என்று கூறும்"

“நரியும் குரங்கும் யானையிடம் சென்று அடிக்கடி உதவிகள் கேட்கும். யானை மனங் கோணாமல் கேட்டவற்றைத் தன்னிடமிருந்தால் கொடுக்கும். வாங்கும் போது நரியும் குரங்கும் யானையைப் புகழ்ந்து பேசும். அப்பேச்சு யானைக்குப் பிடிப்பதில்லை. அது சொல்லும் ; “என்னால் இயன்றவற்றை நான் கொடுக்கிறேன். உழைப்பவன் தர்மம் செய்தல் வேண்டும். அதற்காக என்னை நீங்கள் தேவையில்லாமல் புகழத் தேவை இல்லை”

“நரியும் குரங்கும் யானையிடம் தேவையானவற்றைப் பெற்றுக் கொண்ட பின் எருதிடம் சென்று யானையை இகழ்ந்து கூறி எருதைப் புகழ்ந்து கூறும். அது எருதிற்குப் பிடிப்பதில்லை.”

“குரங்காரே, நீர் விரும்பியதைப் பெறுவதற்காக எப்படியெல்லாமோ நடிப்பீர். ஒருவரிடம் ஓர் உதவியைப் பெற்றால் அவ்வுதவி சிறு உதவியானாலும் நன்றி மறக்கக் கூடாது. நீர் இப்பொழுது யானையை இகழ்ந்தும், என்னைப் புகழ்ந்தும் கூறுவதைப் போல இன்னொருவரிடம் சென்று அவரைப் புகழ்ந்தும் என்னை இகழ்ந்தும் கூறுவீர். அதனால் என்னிடம் வந்தால் மற்றவர்களைப் பற்றிக் கதைக்காது உமக்குத் தேவையானவற்றைப் பெற்றுச் செல்லும்” என்று எருது கூறியது. அதற்குக் குரங்கு பதில் சொல்லவில்லை.”

"ஒரு நாள் எருது யானையைக் கண்ட போது சொன்னது; "நண்பரே, நாம் உதவி செய்யும் போது உதவி செய்பவர்கள் நல்லவர்களா என்பதை அறிந்த பின்பே உதவி செய்தல் வேண்டும். உங்களிடம் உதவி பெற்ற நரியும் குரங்கும் உங்களை இகழ்ந்து பேசுவதை நான் பலமுறை கேட்டிருக்கிறேன் இப்படித் தானே என்னைப் பற்றியும் சொல்லும்" என்றது"

"யானை சிரித்தது. பின் சொன்னது ; "நண்பா, நல்லவர்கள் உதவி பெற விரும்பமாட்டார்கள். தவிர்க்க முடியாது உதவி பெற நேர்ந்தால் அவ்வுதவியிலும் பார்க்கப் பெரிதாகச் செய்ய விரும்புவர். அத்துடன் நன்றி மறாவதும், புறங்கூறாதும் இருப்பர். தீயவர்கள் உதவிகளைப் பெற்றதும் மறந்து கண்டபடி கதைப்பர். பின் தேவையான போது திரும்பி வந்து உதவிகள் கோருவர். இது அவர்களின் இயல்பு. இப்படியானவர்களுக்கு வெட்கம், ரோசம் இல்லை. அவர்களை ஏசினாலோ அல்லது அவர்களுக்குத் தண்டனை கொடுத்தாலோ திருந்த மாட்டார்கள். அப்படியானவர்களுக்கும் நாம் உதவி செய்யத்தான் வேண்டும்" என்றது யானை, எனவே அன்பானவர்களே, உங்களிடம் உதவி பெற்றவர்கள் உங்களைப் பற்றிப் புறங்கூறினால் அதைக் கவனத்தில் எடுக்காதீர்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***தாக்குற்ற போழ்தில் தமரேபோல் நன்குரைத்துப்***
***போக்குற்ற போழ்தில் புறனழீஇ மேன்மைக்கண்***
***நோக்கற்ற வரைப் பழித்தலென்? என்னானும்***
***மூக்கற்ற தற்கில் பழி.***

இழிந்த இயல்பினரான புறங்கூறும் தீயவர்களுக்குஉபதேசம் செய்தாலும், தண்டனை கொடுத்தாலும் திருந்தமாட்டார்கள். **“மூக்கற்றதற் கில் பழி”** என்பது பழமொழி.

8 “அன்பானவர்களே, ஒரு செயலைச் செய்யத் தெரியாதவனிடம் அதைச் செய்யும்படி ஒப்படைக்கலாகாது. மீறி ஒப்படைத்தால் தாமதமும் நட்டமும் அவமானமும் தான் ஏற்படும். ஒரு செயலைச் செய்யும் வழிமுறைகளை நன்றாக அறிந்து அச்செயலைச் செய்யும் போது ஏற்படும் இடையூறுகளைத் தாங்கி அவற்றை நீக்கும் வழிகளால் நீக்கி பொறுமையுடனும், அவதானத்துடனும், நீதியுடனும் முடிப்பவனை விட்டு விட்டு இலாபம் கருதி அச்செயலைப் பற்றித் தெரியாதவனிடம் செயல்களை ஒப்படைக்கக்கூடாது. செயலைச் செய்கின்றவனைப் பற்றி ஆராய்ந்து, அவன் கொடுக்கப்படும் வேலையை நல்ல முறையில் செய்து முடிப்பானா என்பதை ஆராய்ந்து அறிந்த பின்பே முடிவெடுத்தல் வேண்டும். முயற்சியும் அக்கறையும் அவதானமும் உடையவனை வேறேதாவது காரணத்தால் அவன் பொருத்தமில்லாதவன் என்று அவனை விலக்கக் கூடாது. இச்செயல் கிழட்டெருதைக் கொண்டு வயல் உழுவதைப் போன்றதாகும்”

“கைலாயபிள்ளை எச் செயலைச் செய்வதானாலும் அதற்கான கணக்கைப் பார்ப்பார். யார் அச்செயலைக் குறைந்த கட்டணத்தில் செய்து தருவேன் என்று கூறுகிறார்களோ

அவர்களின் பொறுப்பில் அச்செயலை விட்டு விடுவார். ஒரு போதும் அவர் தரத்தைப் பார்க்க மாட்டார். இலாபத்தைத் தான் பார்ப்பார். சிவசுப்பிரமணியம் எப்பொழுதும் தரத்தைத் தான் பார்ப்பார். ஒரு செயல் குறித்த நேரம் மிகவும் சிறப்பாக நடந்து முடியவேண்டும் என்பதில் அவர் மிகுந்த கவனமாக இருப்பார்"

"கைலாயபிள்ளையின் மகள் காயத்திரியும் சிவசுப்பிரமணியத்தின் மகன் செல்வேந்திரனும் ஒரே பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்கள். அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் விரும்பினர். இரு வீட்டுப் பெற்றோரும் அதை விரும்பியமையால் திருமண நாள் குறிக்கப்பட்டது"

"பெண் வீட்டாரான கைலாயபிள்ளையின் வீட்டில் பெரிய பந்தல் போட்டுத் திருமணம் நடைபெற ஏற்பாடாகியிருந்தது. சிவசுப்பிரமணியம் பெருந்தனவந்தர். அத்துடன் ஒழுக்கமானவர். குறித்த செயலைச் செய்து முடிக்க வல்லவர்களிடம் தான் செயலை ஒப்படைப்பவர். கைலாயபிள்ளை சமையலுக்கு அமர்த்தியிருந்த பணியாளர்களைப் பற்றி ஊரில் விசாரித்துப் பார்த்தார். ஊரில் உள்ளவர்கள் எவரும் அப்பணியாளர்களைப் பற்றி நல்லவற்றைக் கூறவில்லை. அவர்கள் சோம்பேறிகள். உரிய நேரத்தில் சமைத்து முடிக்கமாட்டார்கள். அதனால் பல திருமண வீடுகளில் பெரும் பிரச்சினைகள் உண்டானதாகத் தெரிவித்தனர். சிவசுப்பிரமணியம் ஊரில் பெரும் புள்ளி. நாளை ஏதாவது குறை ஏற்பட்டால் ஊரவர் தன்னை மதிக்கமாட்டார்கள்

என்பதைப் புரிந்து கொண்டார். அதனால் அவர் தனது வீட்டில் திருமணதிற்கு வந்தவர்களுக்குச் சமைத்தார்”

“திருமண நாளன்று தாலி கட்டி வைபவம் முடிந்தும் சமையல் முடியவில்லை. திருமணத்திற்கு வந்தவர்கள் பரிசுகளைக் கொடுத்துவிட்டுப் புறப்பட ஆயத்தமானார்கள். கைலாயபிள்ளை செய்வதறியாது திகைத்துப் போனார். சிவசுப்பிரமணியம் வாகனத்தில் உணவு வகைகளைக் கொண்டு வந்து இறக்கி கைலாயபிள்ளையின் வீட்டுச் சமையல் எனக் கூறிச் சபை வைத்தார். வந்தவர்கள் எல்லோரும் வயிறார உண்டு விட்டுச் சமையல் நேரஞ்சென்றாலும் பிரமாதம்” என்று கூறிவிட்டுச் சென்றனர்.”

“கைலாயபிள்ளை, சிவசுப்பிரமணியத்தின் அருகே வந்து சொன்னார்; “சம்பந்தி, நல்லவேளை எனது மதிப்பு மரியாதையைக் காப்பாற்றி விட்டீர்கள். சோம்பேறிகளையும் செயலை உரிய நேரத்தில் செய்ய முடியாதவர்களையும் நம்பிச் செயலை ஒப்படைப்பது கிழட்டு மாட்டைக் கொண்டு வயலை உழுது விதைப்பதைப் போன்றதென்று எனது மகள் கூறியும் நான் கேட்கவில்லை” என்று கண்கலங்கினார் கைலாயபிள்ளை. அதனால் அன்பானவர்களே, உள்ளத்தில் ஊக்கமில்லாத - வர்களிடம் செயல்களை ஒப்படைக்காதீர்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***மடியை வியங்கொள்ளின் மற்றைக் கருமம்***
***முடியாத வாறே முயலும் - கொடி யன்னாய்!***
***பாரித் தவனை நலிந்து தொழில்கோடல்,***
***மூரி உழுது விடல்.***

ஒரு செயலை நல்ல முறையில் செய்து முடிக்க முடியாதவர்களிடம் ஒப்படைக்கக் கூடாது ; **"மூரி உழுதுவிடல்"** என்பது பழமொழி.

9 "அன்பானவர்களே, ஒரு நல்ல பொருளை அனுபவிக்கத் தெரியாதவனிடம் ஒப்படைக்கக் கூடாது. அதனால் அப்பொருளின் பெருமையும் அதனால் வரும் நன்மைகளும் இல்லாமற் போய் விடுவதோடு அப்பொருளும் பாவனைக்குதவாததாக மாறிவிடும். கிழட்டு எருதுக்கு நல்ல புல்லைப் போட்டால் அதைச் சுவைத்து உண்ணாது வாயில் வைத்துக் குதப்பிக் குதப்பிக் கழித்து விடும். அதனால் பயன் எதுவும் வரமாட்டாததோடு புல்லின் சிறப்பும் கெட்டுவிடும். இது போன்றது தான் அனுபவிக்கத் தெரியாதவனிடம் கொடுக்கும் பொருள்"

"நாவலூரில் அரிகரன் என்றொரு கவிஞர் இருந்தார். அவர் மிகவும் வறியவர். அவரின் மனைவி கோசலை பெரும் பேராசைக்காரி. அவள் தனது கணவனைக் கவிதைகள் எழுதாது உழைக்குமாறு வற்புறுத்துவாள். பகலில் தோட்ட வேலைகள்

செய்யும் அரிகரன் இரவில் நெடுநேரம் விழித்திருந்து கவிதைகளை எழுதுவார். அவரது கவிதைகள் உள்ளூரில் உள்ள பத்திரிகைகளில் வெளிவரும். நாவலூரின் அயலூர் செங்கலடி. செங்கலடியில் தர்மராசா என்றொரு தனவந்தன் வாழ்ந்து வந்தார். அவர் இலக்கியப் பிரியர். நல்ல இலக்கியங்களை எழுதுவோரைப் பாராட்டிப் பரிசளிப்பவர். அவர் அரிகரனின் கவிதைகளை அடிக்கடி பத்திரிகைகளில் படித்து விட்டு விமர்சனங்கள் எழுதுவார்"

"தர்மராசாவிற்கு அரிகரனின் கவிதைகளென்றால் உயிர். அதனால் அவரது கவிதைகளைத் தேடித்தேடிப் படிப்பார். அவருக்கு அரிகரனைச் சந்தித்துப் பாராட்ட வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. அதனால் அவர் நாவலூருக்கு வந்தார்.

"அரிகரனின் வீடு ஒரு சிறுகுடிசை. கல்வியறிவாளர் – களில் அனேகமானோர் வறுமையில் சிக்கித் தவிப்பது அவருக்குத் தெரியும். அரிகரன் தன்னைத் தேடி வந்த தர்மராசாவை அன்புடன் வரவேற்று உபசரித்தார்."

"உங்களது கவிதைகளை நான் விரும்பிப் படிப்பேன். மிகவும் அருமையான கருத்தாளம் மிக்க கவிதைகள் அவை. அவற்றையெல்லாம் ஒன்று திரட்டி ஒரு நூலாக வெளியிடுங்கள்" என்றார் தர்மராஜா"

“அரிகரன் விரக்தியாகச் சிரித்தார். பின் சொன்னார்; “ஐயா, உங்களது யோசனை அருமையானது தான். ஆனால் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை. இலக்கியங்களை வாசித்து இரசித்துச் சுவைப்பவர்களில் பலர் பணம் கொடுத்து நூல்களை வாங்கவும் மாட்டார்கள். உங்களைப் போல மனம் திறந்து பாராட்டவும் மாட்டார்கள். எனது குருநாதரும் கற்ற நண்பர்களும் இனத்தவர்களும் கூட எனது கவிதைகளைப் பற்றிக் கதைப்பதேயில்லை. நீங்கள் தான் கதைக்கிறீர்கள்” என்றார் அரிகரன்”

“கற்றவர்களுக்கு நீங்கள் எழுதும் கவிதைகள் புரிய வேண்டும். சிலருக்குப் பாராட்ட மனம் இராது. அவைகளைப் பற்றி எழுதுவோர் கவலைப்படாது தொடர்ந்து எழுதுதல் வேண்டும். நல்ல இலக்கியங்கள் இப்போது இல்லாவிட்டாலும் என்றோ ஒரு நாள் மதிக்கப்படும். அதனால் தான் உங்களது கவிதைகளை நூலாக்குமாறு கேட்கின்றேன்.நூலை வெளியிடத் தேவையான பணத்தை நான் தருகிறேன்” என்றார் தர்மராசா”

“அதைக் கேட்டு அரிகரன் திகைத்துப் போனார். தர்மராசா சில நாட்களின் பின் அரிகரனுக்குத் தேவையான பணத்தைக் கொடுத்தார். பணத்தைக் கண்டதும் அவரது மனைவியான கோசலைக்கு ஆசை பிறந்தது. அதைச் சில காலத்திற்கு வட்டிக்குக் கொடுத்தால் அதனால் வரும் வட்டிப்பணத்தைக் கொண்டு நூலை அச்சிடலாம் என

நினைத்துத் தனது இனத்தவன் ஒருவனுக்கு அதிக வட்டிக்குக் கொடுத்தாள்”

“வருடங்கள் கழிந்தனவே தவிர வட்டிக்குப் பணம் கொடுத்தவன் பணத்தையும் வட்டிக்காசையும் கொடுக்கவில்லை. கோசலையும் அரிகரனும் பலமுறை சென்று இரந்து கேட்டும் அவன் பணம் கொடுக்கவில்லை. இறுதியாக அவன் சொன்னான்; “வட்டிக்குப் பணம் கொடுப்பது சட்டப்படி குற்றம். நீ காவல்துறையில் சென்று முறையிடு”

“அரிகரன் திகைத்துப் போனார். அவரால் எதையும் தீர்மானிக்க முடியவில்லை. ஆகையால் அன்பானவர்களே, பொன்னைப் போலப் பெறுமதியானவற்றைக் கொடுக்கும் போது மிகவும் அவதானமாகவும் பொறுப்புணர்வுடனும் செயற்படல் வேண்டும்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***தொடிமுன்கை நல்லாய்! அத்தொக்க பொருளைக்***
***குடிமகன் அல்லான்கை வைத்தல் - கடிநெய்தல்***
***வேரி கமழும் விரிதிரைத் தண்சேர்ப்ப!***
***மூரியைத் தீற்றிய புல்***

கிழட்டெருது புல்லைத் தின்னாது சேதப்படுத்தும். அதனால் பயன்எதுவும் இருக்காது. அதுபோலப் பொருளைக் கீழோரிடம் பாதுகாப்பாகக் கொடுத்தல் கூடாது. **“மூரியைத் தீற்றிய புல்”** என்பது பழமொழி.

10 “அன்பானவர்களே, அருமையான பொருட்கள் நோய் தருமானால் அவை தீயனவாகும். அதனால் அவற்றைத் தவிர்த்தல் வேண்டும். அது போல ஒருவரது சுற்றத்தவர்களும் நண்பர்களும் தீமைகள் செய்வார்களானால், அவர்களது உறவைத் தவிர்த்தல் வேண்டும். சுற்றத்தவர் என்றும், நண்பர் என்றும் நினையாது ஏதோ ஒரு காரணத்திற்காகத் தீமை செய்பவர்களால் எப்பொழுதும் ஆபத்துக்கள் வந்து சேரும். சிலர் வெளிப்படையாக எதிர்ப்பார்கள். சிலர் நண்பர்கள் போலக் கலகலகப்பாகப் பழகித் திட்டமிட்டுச் செயலாற்றுவார்கள். வெளிப்படையாக எதிர்ப்பவர்களுக்கு அஞ்சத்தேவையில்லை. ஆனால் நண்பர்களைப் போல உறவாடிக் கெடுப்பவர்களின் விடயத்தில் மிகமிக எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும். உட்பகை ஏற்படாதவாறு ஒருவன் காத்துக்கொள்ளல் வேண்டும். இல்லாவிட்டால் அரத்தால் தேய்க்கப்படும் இரும்பைப் போல சிறிது சிறிதாக உட்பகை அவனை அழிந்து விடும்.”

“நடராசா மிகவும் நேர்மையானவர். எல்லோருடனும் மிகவும் அன்பாகப் பழகுபவர். தணிகாசலம் மிகவும் மோசமானவன். தீய செயல்களைத் திட்டமிட்டுச் செய்வதில் வல்லவன். நடராசாவின் நண்பன் சிவகுரு. நடராசா சின்னத்தம்பியின் தோட்ட நிலத்தை வாங்க விரும்பினான். சின்னத்தம்பி அந்நிலத்தை நடராசாவிடம் ஈடுவைத்திருந்தான். அதை மீள முடியாததால் சின்னத்தம்பி அதை எடுத்துக்

கொண்டு மிகுதிப் பணத்தைத் தருமாறு கேட்டான். நடராசா அதற்கு ஒப்புக் கொண்டார். அந்த விடயத்தை நடராஜா சிவகுருவிற்குச் சொன்னார். சிவகுரு தணிகாசலதின் நண்பன். சிவகுருவும் தணிகாசலமும் தரகுவேலை பார்ப்பவர்கள். அதனால் நடராசா சின்னத்தம்பியின் தோட்ட நிலத்தை வாங்கும் விசயத்தைச் சிவகுரு தணிகாசலத்திற்குக் கூறினான். உடனே தணிகாசலம் வெளியூரவன் ஒருவனுக்கு அக்காணியைக் கூடுதலான விலை பேசி விற்று விட்டான். இது நடராசாவுக்கு மிகுந்த கவலையைக் கொடுத்தது. நடராசாவின் தோட்ட நிலத்திற்கு அருகே அந்தத் தோட்ட நிலம் இருந்தது. அதை வாங்கியவன் பெரும் தொந்தரவுகளைக் கொடுத்துக் கொண்டிருந்தான். அதன் பின் அவன் அந்நிலத்தை விற்கப் போவதாக அறிவித்தான். நடராசா அந்நிலத்தைப் பெறுமதியிலும் பார்க்க அதிக விலை கொடுத்து வாங்கினார்"

"அவரது மூத்த மகள் ஆரணிக்குத் திருமணம் பேசி முற்றாகியிருந்தது. அவர் அக்காணியில் ஒரு வீட்டைக் கட்டிக் கொடுக்கத் தீர்மானித்தார். ஆரணிக்குத் திருமணம் முற்றான விடயம் பற்றி நடராசா எவருக்கும் சொல்லவில்லை. சிவகுரு கல்யாணத் தரகனாகவும் வேலை பார்ப்பதால் சிவகுரு ஆரணிக்கு ஒரு வைத்தியரின் குறிப்பைக் கொண்டு வந்து நடராசாவிடம் கொடுத்தார். நடராசாவும் சிவகுருவும் நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயக் குருக்களிடம் சென்று

ஆரணியினதும் சிவகுரு கொடுத்த வைத்தியரதும் குறிப்பைக் கொடுத்தனர்”

“நடராசா முதல் நாள் குருக்களிடம் சென்று நிலைமையைக் கூறியிருந்தார். அவர் பார்த்து நிட்சயித்த மாப்பிள்ளைதான் ஆரணிக்குத் திருமணம் செய்வதாக நடராசா தீர்மானித்திருந்தார் ; “மிகவும் அருமையான பொருத்தம் செய்யுங்கோ” என்றார் குருக்கள்”

“இருவரும் நடராசாவின் வீட்டுக்கு வந்தனர்; நடரசா, பையன் வைத்தியராக இருக்கிறான். நல்ல குணசாலி. பெற்றோர் மிகவும் வசதியானவர்கள். இன்னொரு தரகன் தான் குறிப்பைத் தந்தவன். அதனால் அவன் தரகுப்பணத்தை அதிகமாகக் கேட்கிறான்.” என்றான் சிவகுரு”

“வைத்தியரென்றால் அப்படித் தான் கேட்பார்கள். இதைப்பற்றி யாருக்கும் சொல்லாதே. அவன் கேட்கும் பணத்தை நான் தருகிறேன்” என்றார் நடராசா”

“சிவகுருவுக்கு மிகுந்த மகிழ்ச்சி. அவன் வீட்டுக்குச் சென்று விட்டான். ஒரு வாரத்தின் பின் ஆரணிக்கு நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்தில் திருமணம் நடைபெற்றது. நடராசா சிவகுருவுக்குத் தனது மகளின் திருமணத்திற்குச் சொல்லவில்லை. திருமணம் முடிந்த மறுநாள் சிவகுரு நடராசாவின் வீட்டுக்கு வந்தார். நடராசா சொன்னார் ; “சிவகுரு

மாப்பிள்ளை எனது இனத்தவர். வெளிநாட்டால் வந்திருக்கிறார். அவருக்குப் பெண்ணைப் பிடித்து விட்டது. அவர் உடனடியாக தான் வேலை செய்யும் நாட்டிற்குச் செல்ல வேண்டுமாம். அவசரப்பட்டார். திருணமத்தை முடித்து விட்டேன். நீ கொண்டு வந்த வைத்தியன் மூன்றாவது மகளுக்குப் பொருத்தமாக இருக்கிறான். செய்யலாம். ஆனால் மாப்பிளை பெருங்குடிகாரன் என்று கேள்விப்பட்டேன்" என்றார் நடராசா. அதனால் அன்பானவர்களே நண்பர்களைப் போலப் பழகித் துன்பங்களைச் செய்வோரை எதிர்த்துத் தண்டனை கொடுக்காது புத்தி சாதுரியத்தால் அவர்களை விலக்கி வையுங்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***இம்மைப் பழியும் மறுமைக்கும் பாவமும்***
***தம்மைப் பரியார் தமரா யடைந்தாரின்***
***செம்மைப் பகைகொண்டு சேராதார் தீயரோ?***
***மைம்மைப்பின் நன்று குருடு.***

உறவினர்கள் போலக்காட்டி உட்பகை கொண்டு அடுத்துக் கெடுப்பவர்களை விட வன்மையான பகைவர் மேலானவர்கள். மாய்மாலக் கண்ணனாக இருப்பதை விட குருட்டுக் கண்ணனாக இருப்பது மேலானது. "**மைம்மைப் பின் நன்று குருடு**" என்பது பழமொழி.

## 11

“அன்பானவர்களே, மோரினைக் காட்டிலும் பழைய நெய் தீமைசெய்வதில்லை. மோர் ஒரு நாள்ச் சென்றால் அளவுக்கதிகமாகப் புளித்து விடும். அதற்குள் நோய்க் கிருமிகள் உற்பதியாகி விடும். ஆனால் நெய் அப்படியானதல்ல. எத்தனை நாள்ச் சென்றாலும் தன்நிலை மாறாது நல்ல உணவாகப் பயன்படும். அது போலச் சிறியவர்கள் செல்வரானால் குணம் கெட்டவர்களாகி விடுவர். பெரியவர்கள் எந்த நிலையை அடைந்தாலும் நெய்யைப் போலக் குணம் மாறாதிருப்பர்”

“அத்தியூரில் வாழும் சிவராசாவுக்கு அதிஷ்ட இலாபச் சீட்டின் மூலம் பெருந்தொகையான பணம் கிடைத்தது. அவ்வூரில் பெருந்தனவந்தர் கணபதீஸ்வரன். அவரிடம் இருக்கும் பணத்தை விடப் பெரும் பணம் சிவராசாவுக்கு கிடைத்ததால் அவன் தலை, கால் புரியாது நடந்து கொண்டான். ஊரில் உள்ள பெரியவர்கள் என்று சொல்லிக் கொள்வோர் பலர் சிவராசாவிடம் சென்று அவனைப் புகழ்ந்து அவனது தயவில் வாழ்ந்தனர். சிவராசா முன்பே குடிகாரன். ஊரில் உள்ள தீயவர்களுடன் சேர்ந்து குடித்து விட்டு வீதிகளில் கலகம் செய்பவன். இப்பொழுது பணம் வந்தமையால் பழைய நண்பர்கள் அனைவரும் வந்து சேர்ந்தனர். அவர்கள் குடித்து விட்டு அடாவடித் தனங்களில் ஈடுபட்டனர்”

“கணபதீஸ்வரன்பெருந் தனவந்தரானாலும் அடக்க – மானவர் ; ஒழுக்கசீலர். அவ்வூர்ச் சிவன் கோயிலின் தலைவர் அவர். அந்த வருடம் தலைவருக்கான தேர்தல் நடைபெற்ற

போது சிவராசா அவருடன் போட்டியிட்டான். பெரும் பாலனவர்கள் சிவராசாவுக்கு ஆதரவு அளித்தமையால் கணபதீஸ்வரன் போட்டியில் இருந்து விலகிக் கொண்டார்”

“சிவன் கோயிலின் தலைவரான பின்பும் சிவராசா குடித்து விட்டுக்கலகங்கள் செய்தான். ஊராரிடம் நிதியைப் பெறாது தனது நிதியில் கோயிற் புனருத்தாரண வேலைகளைச் செய்தான். இதனால் ஊர்ப்பெரியவர்கள் கவலைப்பட்டனர்’

“அருளம்பலம் அவ்வூரில் ஒழுக்கமாக வாழும் ஏழை. குடியிருக்கின்ற காணியே இன்னொருவரது. எனினும் அவன் ஒழுக்கமாக வாழ்வதால் அவ்வூரவர்கள் அவனை மதித்தனர். அவனுக்குக் காயத்திரி என்றொரு அழகிய மகள் இருந்தாள். அவள் பல்கலைக்கழகத்தில் படித்து விட்டு வேலைக்காகத் காத்திருந்தாள். அவளின் அழகில் சொக்கிப் போன சிவராசாவின் மகன் மகேந்திரன் அவளின் பின்னால் சென்று வந்தான். அது காயத்திரிக்குப் பிடிப்பதில்லை”

“ஒரு நாள் சிவராசாவும் நண்பர்களும் அருளம்பலத்தின் வீட்டுக்குப் பழம், பாக்கு, வெற்றிலையுடன் வந்தனர். சிவராசா தனது மகனுக்கு அருளம்பலத்தின் மகளான காயத்திரியைப் பெண் கேட்டான்”

“முன்பு நான் ஏழை. இப்போ ஊரில் நான் தான் பெரும் பணக்காரன். எனது மகனுக்குப் பெரியதொரு வர்த்தக நிலையம் வைத்துக் கொடுத்துள்ளேன். நீ சீதனமாக எதுவும் தரவேண்டாம். பெண்ணைத் தந்தால் போதும்” என்றான் சிவராசா”

“ஐயா, எனது மகளுக்குத் திருமண வயது வந்துவிட்டது. எனினும் அவள் கற்ற கல்விக்கான தொழில்கிடைக்கவில்லை. தொழில் கிடைத்த பின்பு தான் திருமணத்தைப் பற்றி எண்ண முடியும். அதைவிட ஏழையானாலும் பழைய நெய்யைப் போல தீங்கில்லாமல் வாழும் ஒரு குடும்பத்தவனையே நான் எனது மகளுக்குத் திருமணம் செய்து வைக்க விரும்புகிறேன். பெரும் பணக்காரனானாலும் பழுதடைந்த மோரைப் போன்றவனை நான் விரும்ப மாட்டேன். நீங்கள் அந்த எண்ணத்தைக் கைவிட்டு விட்டுத் தயவு செய்து இங்கிருந்து செல்லுங்கள்” என்றான் அருளம்பலம். சிவராசாவும் வந்தவர்களும் எதுவும் பேசாது எழுந்து சென்றனர். அன்பானவர்களே, நெய்யைப் போலக் குணம் மாறாதவர்களுடன் தான் உறவு வைத்தல் வேண்டும்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்”

*சிறியவர் எய்திய செல்வத்தின் மாணப்*
*பெரியவர் நல்குரவு நன்றே – தெரியின்*
*மதுமயங்கு பூங்கோதை மாணிழாய்! மோரின்*
*முதுநெய் தீதாகலோ இல்*

மோர் பழையதானால் உணவிற்கு உதவாது.நெய் பழையதானாலும் பழுதடையாது. உணவாகி உரமூட்டும். அது போலச் சிறியவர்கள் செல்வந்தர்களானாலும் அவர்களின் குணம் மாறாது. பெரியவர்கள் எவ்வேளையிலும் குணம் மாறாது ஒரு மாதிரியாகவே இருப்பர். **“முதுநெய் தீதாகலோ இல்”** என்பது பழமொழி.

12 அன்பானவர்களே, அறிவுடையவர்கள் ஒரு செயலைச் செய்யு முன் அதன் இலாப நஷ்டங்களை நன்கு ஆராய்ந்து பார்த்த பின்பே தொடங்குவார்கள். செயலைப் பொறுத்து அவர்களின் செயற்பாடுகள் அமைந்திருக்கும். பெரியவர்கள் ஒரு சாதாரண செயலென்றாலும் அதன் தார்ப்பரியத்தை ஆராயாது கடைசி வரையும் செய்ய மாட்டார்கள். ஒரு செயலால் பெரும் நன்மைகளும் வரும், பெரும் தீமைகளும் வரும். நன்மையை மட்டும் ஆராயாது அதனால் வரும் தீமைகளைப் பற்றியும் ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். செய்யப் போகும் செயலால் நன்மையை விடத் தீமைதான் கூடுதலாக வருமானானால் அதைக் கைவிடல் வேண்டும். தீமையை விட நன்மை கூடுதலாக வருமானால் அச்செயலைச் செய்யலாம்”

“இலுப்பையடி என்ற கிராமத்தில் வேதாச்சலம் கருணாகரன் என்ற இரு நண்பர்கள் வாழ்ந்தனர். வேதாச்சலத்திற்கு ஆருணி என்றொரு மகள் இருந்தாள். வேதாச்சலம் எச்செயலைச் செய்வதாக இருந்தாலும் அதைப்

பற்றி நன்கு ஆராய்ந்து தான் செய்வார். ஒரு முறை அவர் ஒரு பசுவை வாங்க விரும்பினார். அக்கிராமத்தில் பசுவளர்ப்பவன் பொன்னம்பலம். அவனிடம் நூற்றுக்கணக்கான பசுக்கள் நின்றன. வேதாச்சலம் பொன்னம்பலத்தின் பசுப்பண்ணைக்குச் சென்று பசுக்களைப் பார்த்தார். ஆனால் பொன்னம்பலம் குறிப்பிட்ட ஒரு பசுவையே விற்பனை செய்வதாகக் கூறினான். அதனால் அவருக்குச் சந்தேகமேற்பட்டது. அவர் பசு வாங்காமல் திரும்பி வந்து விட்டார். மறு நாள் காவல் துறையினர் வந்து பொன்னம்பலத்தைத் திருடர்களிடம் பசுக்கள் வாங்கியதற்காக கைது செய்தனர்"

"அதன்பின் வேதாச்சலம் முன்பை விட அவதானமாக நடந்து கொண்டார். கருணாகரன் அலட்சியப் போக்குள்ளவர். எதையும் ஆராயாது செய்பவர். அவருக்கு மீனாம்பிகை என்றொரு மகள் இருந்தாள்."

"கல்யாணத் தரகன் ஒருவன் வேதாச்சலத்தின் வீட்டுக்கு வந்து சொன்னான் ; "ஐயா, ஒவ்வொரு மாப்பிள்ளையிலும் குறைகள் கண்டு உங்கள் மகளின் திருமணத்தைச் செய்யாது விடுகிறீர்கள். ஆருணிக்கு வயது ஏறிக்கொண்டு போகிறது. சுப்பிரமணியத்தின் மகன் வெளிநாட்டில் இருந்து வந்திருக் கிறான். நல்ல குடும்பம். அவன் வெளிநாட்டில் எக்கச்சக்கமாக உழைக்கிறான். அவனில் குறைகண்டு விலக்கமால்

செய்யுங்கள். குறையில்லாதவர்கள் இங்கு யார் இருக்கிறார்கள்? என்றான்”.

“ஐயா, கலியாணம் ஆயிரங்காலத்துப் பயிர். ஆராயாமல் செய்ய முடியாது. மாணிக்கராசா மிகவும் நல்ல மனிதர். அவர் மிதித்த இடத்துப் புல்லுக்கூடச் சாகாது. அவரின் குணவியல்புகளை நம்பி அவரது மகளுக்குத் சின்னையா தனது மகளைத் திருமணம் செய்து கொடுத்து தான். திருமணம் முடிந்து பெண்ணை வீட்டில் விட்டு விட்டுப் போனவன் தான். ஆறுவருடமாச்சு இன்னும் வரவில்லை. அவன் அங்கு யாருடனோ குடும்பமாக இருப்பதாக ஊரில் பேசிக் கொள்கிறார்கள். எனவே குடும்பத்தை நம்பி வெளிநாட்டில் உள்ளவர்களுக்குப் பெண் கொடுக்கக் கூடாது. அவன் இருக்கும் நாட்டின் பெரைத் தந்து விட்டுப் போ. நான் விசாரித்த பின் வந்து சொல்கிறேன்” என்றார் வேதாச்சலம்.”

“இந்த நூற்றாண்டில் நீங்கள் உங்கள் மகளுக்குத் திருமணம் செய்ய மாட்டீர்கள்” என்று கூறிவிட்டுச் சென்றான் தரகன்”

“வேதாச்சலம் எதுவும் பேசவில்லை. தரகன் கருணாகரனின் வீட்டுக்குச் சென்று ெ சான்னான்; “ அண்ணை சுப்பிரமணியத்தாரின் இளைய மகன் வெளிநாட்டில் இருந்து வந்து நிற்கிறான். அவன் வெளிநாட்டிலை நன்றாக

உழைக்கிறான். குடும்பமும் நல்ல குடும்பம். உங்கள் மகளுக்கு அவனைச் செய்ய விருப்பமே. ஒரு மாதம் தானாம் நிற்பன். அதுக்குள்ப் பெண் பார்த்துத் திருமணம் செய்ய வேண்டுமென்று தகப்பன் அவசரப்படுகிறார். நல்ல இடம். யோசிக்கத் தேவையில்லை. முடிவைச் சொல்லுங்கோ”

“சுப்பிரமணியம் மிகவும் நல்லவர். பணக்காரன். அதனால் கருணாகரன் சம்மதித்தார்.”

“திருமணத்திற்கு நாள் குறித்து ஊரெங்கும் சொல்லப்பட்டது. கருணாகரன் மகிழ்ச்சியின் உச்சியில் இருந்தார்”

“திருமணத்திற்கு இரண்டு தினங்கள் இருந்தன. சுப்பிரமணியம் கருணாகரனின் வீட்டுக்கு வந்தார். அவரது நிலையைப் பார்த்த கருணாகரனுக்கு அதிர்ச்சியாக இருந்தது ; “கருணா, என்னை மன்னித்துக் கொள்ளடா. நான் ஊரில் மிகவும் ஒழுக்கமாக வாழ்பவன். என்னைப் போலவே எனது மகனும் இருப்பான் என்று எண்ணி நீ கல்யாணத்திற்குச் சம்மதித்தாய். நான் எனது மகனது கலியாணம் பற்றி இவனோடு வெளிநாட்டில் இருக்கும் எனது சகோதரியின் மகனுக்குச் சொன்னேன். அவன், இவன் அங்கு திருமணம் செய்து விவாகரத்துப் பெற்றவன் என்று சொல்கிறான். என்னால் உண்மையை மறைக்க முடியவில்லை” என்று கருணாகரனின் காலைப் பிடித்து அழுதார் சுப்பிரமணியம்”

"கருணாகரன் திகைத்துப் போனார். அவருக்கு வேதாச்சலம் சொன்ன வார்த்தைகள் நினைவுக்கு வந்தன; "கருணா, எச்செயலையும் செய்யுமுன் பல தடைவ யோசித்துச் செய்ய வேண்டும். திருமணம் ஆயிரம் காலத்துப் பயிர். தற்செயலைாகப் பிழைத்தால் உனது மகளின் வாழ்வு நாசமாகிவிடும். அதனால் ஆராய்ந்து செய். இதை உனது நண்பன் என்ற வகையிற் சொல்கிறேன்"

"திருமணம் குழம்பி விட்டது. நல்லவேளை அச்சம்பவம் திருணத்திற்கு முன் தெரியவந்தது. அத்துடன் ஒழுக்க சீலரான சுப்பிரமணியம் உண்மையைச் சொன்னதால் தெரிய வந்தது. எனவே அன்பானவர்களே, மிகவும் சிறிய செயலானாலும் ஆராயாமல் செய்யாதீர்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***தற்றூக்கித் தன் துணையும் தூக்கிப் பயன்தூக்கி***
***மற்றவை கொள்வ மதிவல்லார் - அற்றன்றி***
***யாதானும் ஒன்றுகொண்டு யாதானும் செய்தக்கால்***
***யாதானும் ஆகி விடும்.***

அறிவுடையவர்கள் ஒரு செயலைச் செய்யுமுன் அதன் விளைவுகளைத் தெளிவாக ஆராய்ந்த பின்பே செய்வர். **"யாதானும் செய்தக்கால், யாதானும் ஆகிவிடும்"** என்பது பழமொழி.

13 “அன்பானவர்களே, மன உறுதியுள்ளவர்கள் வாயால் தமது வீரதீரங்களைப் பற்றிப் பேசமாட்டார்கள். அவர்கள் எதையும் செயலிற் காட்டுவார்கள். மனவுறுதி இல்லாதவர்கள் செயல்களுக்கஞ்சி தமது இயலாமை பிறர்க்குத் தெரியா வண்ணம் தம்மைப் பற்றித் தாமே புகழ்ந்துரைப்பார்கள். இது போருக்கு அஞ்சும் வீரன் ஒருவன் பலமான கோட்டைக்குள் பாதுகாப்பாக இருந்து கொண்டு தனது வீரத்தைத் தானே புகழ்ந்து கொள்வதைப் போன்றது. வாய் வீரம் பேசுபவனின் தன்மையை வீரன் ஒருவன் பெரிதாக எடுக்காது அவனை முன்பை விட முழுமூச்சுடன் எதிர்கொள்ள வைக்கும்.”

“கடம்பவனத்தில் வாழ்ந்த புற்றெலிகளை காட்டுப் பூனை ஒன்று தினமும் பிடித்து உண்டு வந்தது. அதனால் புற்றெலிகள் புற்றை விட்டு வெளியே வரப் பயந்தன. சில எலிகள் புற்றின் வாசலில் நின்று பூனை வருகிறதா என்று பார்த்துக் கொண்டு நிற்க, சில எலிகள் காட்டுக்குள்ச் சென்று தானியங்களைத் தேடின. அப்பொழுது மறைந்திருக்கும் காட்டுப் பூனை சில எலிகளைப் பிடித்து விடும். அதனால் எலிகள் புற்றுக்குள்க் கூடி பூனையிடமிருந்து தப்புவது எப்படி என்று ஆராய்தன”

“ஒரு எலி சொன்னது ; “நாம் இக்காட்டைவிட்டு விட்டு இன்னொரு காட்டுக்குச் செல்வோம்”

“அந்தக் காட்டிலும் பூனைகள் இருக்கும். அதனால் நாம் பிறந்த பூமியில் எமக்கு வரும் துன்பங்களை எமது புத்திசாதுரியத்தால் நீக்கி வாழ வேண்டுமே தவிர இன்னோர் இடத்திற்குச் செல்லக் கூடாது” என்றது இன்னோர் எலி”

“கடவுள் எமது வாழ்விடமாகப் புற்றைப் படைத்தபடியால் ஓரளவு தப்பி வாழ முடிகிறது. கடவுள் தந்த மூளையைப் பயன்படுதி பூனையைக் கொல்லுதல் வேண்டும்” என்றது இன்னோர் எலி”

“புத்திசாதுரியத்தால் பூனையைக் கொல்ல முடியாது. எனது வீரத்தால் நான் அதைக் கொல்கிறேன். எனது தந்தையார் முன்பு ஒரு பூனையைக் கொன்றவர். அன்று பூனையைக் கண்ட நான் அத்துடன் போராடித் தான் தப்பி வந்தேன். வீரன் எதையும் செய்வான்” என்றது துடிப்பான ஓர் எலி”

“கிழட்டெலி ஒன்று அதைக் கேட்டுப் பெரிதாகச்சிரித்தது. “அப்பனே, பூனையை இக்காட்டில் எந்த எலியும் எவ்வேளையிலும் கொல்லவில்லை. அதைக் கொல்வது மிகவும் கஷ்டம். பெரும் வீரன் தனது வீரத்தைச் செயலில் காட்டுவானே தவிரச் சொல்ல மாட்டான். போர் வீரன் ஒருவன் எதிரியை எதிர்த்துப் போராடாது கோட்டைக்குள் மறைந்திருந்தால் அது எதிரியைப் பலமாக்குமே தவிரப் பலவீனமாக்காது. நாம் எத்தனை நாட்களுக்குப் புற்றுள் இருப்பது. எனவே பூனையை ஒழிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட வேண்டும்” என்றது”.

“எல்லாவற்றையும், எதுவும் பேசாது கேட்டுக் கொண்டிருந்த ஓர் வீரமான எலி எதுவும் சொல்லாது புற்றை விட்டு வெளியே வந்தது. அதன் நண்பனான எலியும் அதன் பின்னால் வந்தது. வீரமான எலிக்கு யானை ஒன்று நண்பனாக இருந்தது. காட்டோரமாக இருக்கும் கமத்தில் உள்ள வாழை மரங்களை உண்ண யானை செல்லும். அதனால் தோட்டக்காரர்கள் யானையைப் பிடிப்பதற்காக ஒரு பொறி வைத்தனர். அப்பொறியில் யானை சிக்குண்டது. அதைக் கண்ட வீரமான எலியும் அதன் நண்பனும் யானைக்கென வைக்கப்பட்ட பொறியின் கயிறுகளை அறுத்து அதைக் காப்பாற்றின. அதனால் மகிழ்ந்த யானை; “உனக்கு எப்போதும் உதவி செய்வேன்” என்றது”

“இரண்டு எலிகளும் யானையிடம் வந்து தமக்கேற்பட்ட துன்பத்தைக் கூறிப் பூனையைக் கொல்லும்படி கேட்டன. யானை எலிகளின் இருப்பிடத்திற்கு வந்த போது பூனை எலியொன்றைக் கதறக் கதறப் பிடித்துத் தின்று கொண்டிருந்தது. யானை தனது தும்பிக்கையால் பூனையைப் பிடிக்கப் பூனை எலியை விட்டது”

“பூனையாரே, இனிமேல் நீர் எலிகளைப் பிடிக்கக் கூடாது. மீறிப் பிடித்தால் உம்மைக் கொன்று விடுவேன்” என்றது. யானையின் இறுக்கமான பிடி பூனைக்கு வேதனையாக இருந்தது. எனினும் அதைத் தாங்கிக் கொண்டு சொன்னது ;

“எலிகள் எனது உணவு. எனக்கென்றே எலிகளைக் கடவுள் படைத்துள்ளார். இந்த விடயத்தில் நீ தலையிடாதே. மீறினால் நான் சிங்கத்திடம் சொல்வேன்” என்று திமிருடன் சொன்னது பூனை”

“அதனால் யானைக்கு மிகுந்த கோபம் வந்தது; “இனிமேல் நீ இந்தப் பக்கம் வந்தால் உன்னைக் கொன்று விடுவேன்” என்று கூறிப் பூனையைச் சுழற்றி வீசியது. பூனை தூரத்தில் போய் விழுந்தது. அதனால் எழுந்து நடக்க முடியவில்லை. வெகுநேரம் படுத்திருந்து விட்டு நொண்டி நொண்டிச் சென்றது. அதன் பின் யானை அடிக்கடி எலிகளின் இருப்பிடத்திற்கு வந்து போனது. சில நாட்கள் செல்லப் பூனைக்கு நோ மாறியது. இருந்தும் அது எலிகளைப் பிடிக்க வரவில்லை. ஆகையால் அன்பானவர்களே, வாய் வீரம் பேசாது துணிச்சலுடன் செயலாற்றப் பழகுங்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***நூக்கி அவர்வெலினும் தாம்வெலினும் வெஞ்சமத்துள்***
***தாக்கி எதிர்ப்படுவர் தக்கவர்; அஃதன்றிக்***
***காப்பின் அகத்திருந்து காய்வார் மிகவுரைத்தல்***
***யாப்பினுள் அட்டிய நீர்***

எதிரியை எதிர்த்துப் போரிடாது கோட்டைக்குள் இருந்து வீரம் பேசுபவர்கள் கோளைகள். அவர்களின் அச்செயலால் எதிரி பலமடைவான். அவ்வாறு செய்வது பகைப்பயிரை வளர்க்க

வார்க்கப்படும் நீராகவே இருக்கும் **“யாப்பினுள் அட்டிய நீர்”** என்பது பழமொழி.

14 “அன்பானவர்களே, ஒருவர் பல்வேறுபட்ட அறித்தரும் நூல்களை மிகவும் நுட்பமாகக் கற்றாலும், அதன் பொருளை உணர்ந்து நடக்கமாட்டார். சில சமயங்களில் கோபமிகுதியாலோ அல்லது வேறேதாவது காரணத்தினாலோ அவர் அறிவை இழந்து தவறாகப் பேசக் கூடும். கற்றுணர்ந்த பெரியவர்களே சில சமயம் ஆராயாது பேசி விடுவார்கள். அப்படியிருக்க இழிவான குடிகளிற் பிறந்தவர்கள் ஆராய்ந்து பேசவில்லையேயென்று யாரும் கவலை கொள்ளத் தேவையில்லை. இழிவான குடியிற் பிறந்தவர்கள் நல்லவற்றை மறந்தும் பேசமாட்டார்கள். அதனால் அவர்கள் கூறுபவற்றை ஒரு பொருட்டாக எடுத்து வருந்த வேண்டாம்”

“கதம்பவனம் என்ற காட்டில் வாழ்ந்த யானை ஒன்று சிவபெருமானில் மிகுந்த பக்தியுள்ளது. அது காலையிலும் மாலையிலும் நீராடி நீறணிந்து காட்டில் உள்ள வேப்பமரததின் கீழ்க் கோயில் கொண்டிருக்கும் சிவபெருமானைப் பூக்கள் வைத்து வணங்கும். காட்டில் உள்ள விதம் விதமான பழங்களைப் பறித்து நீரால் கழுவி விட்டுச் சிவலிங்கப்பெருமானுக்குப் படைக்கும். பின் காட்டில் உள்ள மிருகங்களுக்குக் கொடுத்துத் தானும் உண்ணும். இது தினமும் நடைபெறும் நிகழ்வு.”

“அன்று யானையின் பிறந்த தினம். யனை காட்டிலுள்ள தனது நண்பர்கள் இனத்தவர்கள் அனைவரையும் தனது பிறந்த தினம் என்று சொல்லாது தான் சிவலிங்கப் பெருமானுக்குப் பொங்கல் செய்யப் போகிறேன் என்று கூறிவரும்படி சொன்னது”

“யானை தனது பெரிய தந்தையின் வீட்டுக்குச் சென்று தான் பொங்கல் வைப்பதாகக் கூறி அவரைக் குடும்பத்தினருடன் வரும்படி கூறியது. யனையின் பெரிய தந்தையார் நன்கு கற்றவர். காட்டில் வாழும் மிருகங்கள் அனைத்தினதும் நன்மதிப்பைப் பெற்றவர். ஆனால் அவருக்குத் தனது பெறாமகனான யானையை அவ்வளவு பிடிப்பதில்லை. அதனால் பெரிய தகப்பனான யானை சற்றுக் கோபத்துடன் சொன்னது ; “உழைத்துச் சம்பாதித்து வீட்டைநல்லபடி கவனி. உழைப்பு முழுவதையும் கடவுளுக்குச் செலவு செய்தால் வாழ்வது எப்படி? உனது தந்தையார் நோயால் அவதிப்படுகிறார். அவரை நல்ல வைத்தியரிடம் அழைத்துச் செல். உனது சகோதரியின் பிள்ளைகள் கற்பதில்லை. அவர்களின் கல்வியில் அக்கறை கொள். கடவுளை மனதில் நினைத்துக்கொண்டு காரியமாற்றுபவன் தான் அறிவாளி. நீ பெரிய பக்தன் என்று மற்றவர்களை ஏமாற்றுகிறாய்” என்றது”

“யானை எதுவும் பேசவில்லை. அது வழமை போல வந்து தனது கடமைகளைச் செய்தது. அது குடும்பத்தை நன்கு கவனிக்கிறது. சகோதரர்களுக்கும் இனத்தவர்களுக்கும் உதவி

செய்கிறது. அதனால் அது அதைப் பற்றிக் கவலை கொள்ளாது பெரிய தகப்பன் சொன்னவற்றைச் சிவனிடம் சொல்லி விட்டுத் தனது கடமைகளைக் கவனித்தது"

"அன்று அது குதிரையின் வாழைத்தோட்டதிற்கு வாழைப்பழம் வாங்குவதற்காகச் சென்றது. யானையின் மீது குதிரைக்கு அபிமானம் அதிகம். யுானையைக் குதிரை சிவனென நினைத்து வணங்கும். யானையைக் கண்ட குதிரை சொன்னது ; "சிவனடியாரே, நான் சிவனுக்கென நேர்ந்து விட்ட வாழைக்குலையொன்று நன்றாகப் பழுத்து விட்டது. அதைக் கொண்டு வந்து தருகிறேன் சிவனுக்குப் படைத்து விட்டு சிவனடியார்களுக்குக் கொடும்" என்றது"

"குதிரையைப் போலப் பல காட்டு மிருகங்கள் யானையிடம் சிவனுக்குப் படைக்கப் பலவிதமான உணவுப் பண்டங்களைக் கொடுக்கும். யானை சிவனுக்குப் படைத்து விட்டுக் கோயிலுக்கு வருவோர்க்கு கொடுக்கும். அது மற்ற மிருகங்கள் கொடுக்கும் உணவுப் பண்டங்களைத் தனது வீட்டிற்குக் கொண்டு செல்வதில்லை"

"அன்று பன்றி மதுபானத்தைக் குடித்து விட்டு நிறைவெறியில் கோயிலுக்கு வந்து கண்டபடி புலம்பிக் கொண்டிருந்தது. அதைக் கண்ட யானை பன்றியின் அருகே

சென்று ; "சகோதரனே, கோயிலில் கண்டபடி கதைப்பது பாவம்" என்றது"

"யானையின் வார்த்தைகள் பன்றிக்குக் கோபத்தை உண்டாக்கியது. பன்றி குடித்துவிட்டு அட்டகாசங்கள் செய்யும் போது யானை அதற்குப் புத்திமதி கூறும். அதுவும் பன்றிக்குப் பிடிப்பதில்லை. அதனால் பன்றி கோபத்துடன் சொன்னது ; "நீ என்ன காட்டு ராசாவா..? சிவனைச் சாட்டி வயிறு வளர்க்கும் உன்னை இக்காட்டில் உள்ள அறிவில்லாத மிருகங்கள் பெரிய பக்திமானாக நினைக்கலாம். நான் அப்படி நினைக்க மாட்டன். காட்டு மிருகங்களை ஏமாற்றிப் பிழைப்பு நடத்துகிறாய். அது தான் மிகப்பெரிய பாவம். நீ கோயிற்பக்கம் வராமல் விடு. கோயில் நல்லபடி நடக்கும்" என்று வாய்க்கு வந்தபடி பன்றி பேசியது"

"யானை அதைப் பெரியதாக எடுக்கவில்லை. பூசை முடிந்து எல்லா மிருகங்களும் சென்ற பின் குதிரை கேட்டது ; " ஐயா, பன்றி தினமும் உங்களை அவமானப்படுத்துகிறது. அதற்குத் தகுந்த தண்டனை ஏன் கொடுக்காது இருக்கிறீர்கள்?

"நண்பா, கற்றவர்கள் கூட ஆராயாது பல இடங்களில் பேசக்கூடாதவற்றையெல்லாம் பேசுவதை நான் கண்டுள்ளேன். எனது பெரிய தந்தை நன்றாகக் கற்றவர். மதிக்கப்படுபவர். அப்படியிருந்தும் அவர் என்னைப் பற்றித் தவறாகக் கதைக்கிறார். அப்படியிருக்க அறிவில்லாத கீழ்ப்பட்ட குடியிற்

பிறந்த பன்றியினது பேச்சைக்கேட்டு நான் வருத்தமடையலாமா..?"என்று கேட்டது. ஆகவே அன்பானவர்களே, யார் எதைச் சொன்னாலும் அதற்காகக் கவலைப்படாதீர்கள். அவர்கள் சொல்வது உண்மையானால் திருந்துங்கள். பொய்யானால் அவர்களுக்காகப் பரிதாபப்படுங்கள். அவர்கள் காலப்போக்கில் திருந்துவார்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***நற்பால கற்றாரும் நாடாது சொல்லுவர்***
***இற்பாலர் அல்லார் இயல்பின்மை நோவதேன்?***
***கற்பால் இலங்கருவி நாட! மற்றியாரானும்***
***சொற்சோரா தாரோ இல்.***

சொற்சோர்வுபடுதல் என்பது பொதுவாக எவருக்கும் இயல்பானது. அதனால் கீழானவர்களின் பேச்சைக் கேட்டுத் துன்பப்படலாகாது. **"மற்றி யாரானும் சொற்சோரா தாரோ இல்"** என்பது பழமொழி.

**15** "அன்பானவர்களே, இறைவனுக்குப் பக்தியுடன் நாம் தொண்டுகள் செய்கிறோம். பொங்கிப் படைக்கிறோம். நெய்முழுக்குச் செய்கிறோம். ஆனால் எமக்கு எப்பொழுதும் அதனால் நன்மைகள் வந்தடைவதில்லை. பல சமயங்களில் தாங்கமுடியாததுன்பங்களும் வேதனைகளும் வந்தடைகின்றன. அப்பொழுது நாம் இறைவனைத் திட்டியதில்லை. கண்டித்ததில்லை. எல்லாம் விதிப்பயன் என்றே எண்ணி ஆறுதலடைகிறோம். இது போலத்தான் உறவினர்களால்

எப்பொழுதும் உதவிகள் செய்யமுடிவதில்லை. பலமுறை உதவியவர் சில நேரங்களில் உதவாது உதவி கோரிச் செல்பவனைத்திட்டி அனுப்புவார். அப்படி அவர் திட்டினாலும் உதவி பெறப் போபவன் கோபப்பட்டதில்லை. அது தனது விதி என்று நினைத்துக் கொள்வான்.'

"நந்தவனத்தில் வாழ்ந்த குதிரை ஒன்று காட்டில் வாணிபம் செய்து வந்தது. வாணிபத்தின் மூலம் அது பெரும் பொருள் சம்பாதித்தது. தான் சம்பாதித்த பொருட்களை அது பயனுள்ள வழிகளில் செலவுசெய்து வந்தது. கோயில்களில் அன்னதானம் செய்தல், கோயில் கட்டுதல், வாகனங்கள் வாங்கிக் கொடுத்தல் போன்ற செயல்களையும், வறியவர்களுக்குத் தேவையான உதவிகளையும் செய்து வந்தது.

"குதிரை தனது தங்கையைப் பெரும் பொருள் செலவு செய்து ஏராளமான பொருட்களைச் சீதனமாகக் கொடுத்துத் தனது மைத்துனனுக்குத் திருமணம் செய்து வைத்தது. மைத்துனன் ஊதாரி. கண்டபடி செலவு செய்வன். சோம்பேறி. அதனால் குதிரைகொடுத்த பொருளில் பெரும் பகுதி அழிந்து விட்டது. தனது சகோதரி கஷ்டப்படக் கூடாதென்பதற்காகக் குதிரை மைத்துனனுக்கு அடிக்கடி பொருள் கொடுக்கும்"

"அன்று பொருள்கேட்டுப் பலர் வந்திருந்தனர். குதிரை ஒவ்வொருவரின் பிரச்சினைகளையும் விசாரித்து அவர்களுக்கு

வேண்டிய உதவிகளைச் செய்து கொண்டிருந்தது. அப்போது குதிரையின் சகோதரியும் மைத்துனனும், குதிரையின் வீட்டுக்கு வந்தனர். குதிரையின் மைத்துனன் குதிரையிடம் வந்து "மச்சான், பிள்ளைகள் கற்கும் பாடசாலைக்கு அவர்கள் கற்பதற்கான பணம் இன்னும் கட்டப்படவில்லை. அதனால் இன்று அவர்கள் பாடசாலைக்குச் செல்லவில்லை" என்றது".

"அதைக்கேட்ட குதிரைக்கு அளவுக்கதிகமான கோபம் வந்தது ; "நீ என்னை நம்பியா பிள்ளைகளைப் பெற்றாய். பிள்ளைகளைப் பெற்றால் அவற்றை ஒழுங்காகப் பேணி வளர்த்தல் வேண்டும். நானில்லாத காலத்தில் என்ன செய்வாய்..? பிச்சை எடுப்பாயா? எதற்கும் ஓர் அளவு இருத்தல் வேண்டும். உனது குடும்பத்தேவைகள் அனைத்தையும் என்னால் செய்து தர முடியாது. நீ உழைக்க வேண்டும். உழைக்காமல் இருந்து உயிரை வாங்குகிறாய். உனக்கு மானம் வெட்கம், ரோசம், கூட இல்லையா..?" என்று ஏசியது"

"அங்கு உதவிகள் பெற வந்தவர்கள் திகைத்துப் போனார்கள். தமக்கும் இவ்வாறு ஏச்சு விழுமோ எனப் பயந்தனர். ஆனால் குதிரையின் மைத்துனன் அதைப் பெரிதுபடுத்தவில்லை ; "நீ பேசுவதைப் பேசு. ஆனால் காசைத் தா. காசு தராவிட்டால் பிள்ளைகள் நாளைக்கும் பாடசாலைக்குப் போகமாட்டார்கள்" என்றது. அதனால் அன்பானவர்களே, ஒரு முறை கொடுத்துதவியவன் மறுமுறை கொடுக்காவிட்டால்

வாங்கியவன் கோபிக்கமாட்டான். அப்படிக் கோபிப்பது தவறு என்று அவனுக்குத் தெரியும். அதனால் அன்பானவர்களே, உதவியவர்கள் மீண்டும் மீண்டும் உதவவில்லையே என்று கோவிப்பது தவறு” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

*தமனென்று இருநாழி ஈத்தவன் அல்லால்*
*நமனென்று காயினும் தான்காயான் மன்னே*
*அவனிவன் என்றுரைத்து எள்ளி, மற்றியாரே*
*நமநெய்யை நக்கு பவர்!*

ஒரு முறை உதவியவன் தொடர்ந்து உதவவில்லை என்று கோபிப்பது தவறு. “**யாரோ நம நெய்யை நக்குபவர்”** என்பது பழமொழி.

**16** “அன்பானவர்களே, பசு வளர்ப்போர் பால் கறக்கும் போது கன்றிற்குப் போதியளவு பாலை விட்டு விட்டுத் தான் கறப்பார்கள். ஏனெனில் கன்று ஒரு பெரும் முதலாகும். அது ஆரோக்கியமாக வளர்ந்தால் தான் அதிலிருந்து வருமானத்தைப் பெறலாம். கன்றுக்கு விடாது பாலைக் கறந்தால் கன்று செத்து விடும். அது பசு வளர்ப்பவனுக்குப் பெரும் நட்டத்தைக் கொடுக்கும். அதனால் பால் கறப்போர் கன்றிற்குப் பால் விட்டுத் தான் கறப்பர். அது போல நல்ல நண்பர்கள், குற்றம் செய்தாலும் அதைப் பெரிதாக எண்ணமாட்டார்கள். சிறு சிறு குற்றங்களுக்காக நல்ல நட்பைத் துறந்தால் கேடுவரும் என்று அவர்களுக்குத் தெரியும். அத்துடன் நல்ல நட்பு, பெருமையானது ; பாதுகாப்பானது. நல்ல நட்பு என்பது நண்பர்

நிலை தவறிச் செல்லும் போது கண்டித்து நல்லுரை கூறித் திருந்துவதற்காக அமைந்தது. துன்பங்கள் வரும்போது உதவி செய்து தாங்குவது"

"நாகராசா அருணாசலத்துடன் நட்புப்பூண்டிருந்தார். இருவரும் எந்த விடயத்திலும் ஒன்றுபட்டே செயலாற்றுவர். அவர்களுக்குள்க் கருத்து வேறுபாடு ஏற்படுவதில்லை. இருவரும் எந்த விடயத்திலும் ஒத்து நடப்பதோடு யாராவது ஒருவர் எதைச் செய்வதானாலும் மற்றவருடன் கலந்துரையாடித் தான் செய்வார்கள்"

"நாகராசாவின் பரம எதிரி சிவலிங்கம். ஊரில் உள்ள கோயிலிருந்து பல்வேறுபட்ட பிரச்சினைகளில் இருவரும் முரண்படுவார்கள். சில சமயம் வாய்த்தர்க்கம் முற்றிக் கைலப்பும் உண்டாகும். நாகராசா மிகுந்த கோபப்படும் வேளைகளில் அருணாசலம் தான் அவரைத் தேற்றிச் சமாதானப்படுத்துவார். அதனால் பலமுறை சிவலிங்கத்துடன் அருணாசலம் முரண்பட்டும் இருக்கிறார்"

"அருணாசலத்தின் மகள் சுரேந்தினி. ஆசிரியராகப் பணி புரிகிறாள். சிவலிங்கத்தின் மகன் கஜமுகன் வைத்தியராகப் பணி புரிகிறான். இருவரும் ஒரே பாடசாலையில் கற்றமையால் கஜமுகனுக்குச் சுரேந்தினியைத் திருமணம் செய்ய விருப்பம். அதைத் தனது தந்தையான சிவலிங்கத்திற்குத் தெரியப்படுத்தினான். சிவலிங்கத்தின் மனைவிக்குத் தனது

மகனுக்குச் சுவேந்தினியைச் செய்ய விருப்பம். அதனால் சிவலிங்கமும் மனைவியும் அருணாசலத்தின் வீட்டுக்குப் பெண்கேட்டு வந்தனர். தனது மகளுக்கு வைத்தியரைச் செய்ய அருணாசலம் விரும்பினார். எனினும் தனது உயிர் நண்பனான நாகராஜா கோபிப்பாரென அஞ்சினார். ஆனால் அருணாசலத்தின் மனைவி அத்திருமணத்தைச் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தினார்"

"சிவலிங்கமும் மனைவியும் அருணாசலத்தின் வீட்டுக்கு சென்று  திருமணம் பேசிய விசயம் நாகராசாவுக்குத் தெரிய வந்தது. அவர் புறப்பட்டு அருணாசலத்தின் வீட்டுக்கு வந்தார். நாகராசாவைக் கண்டதும் அருணாசலத்தின் நெஞ்சு கலங்கியது. நாகராசா முரட்டுத்தன்மை உள்ளவர். தான் நினைத்தது தான் சரியானதென்று வாதிடுபவர். இந்தத் திருமணத்தால் தமக்கிருக்கும் உறவு முறிந்து விடும் என்று அஞ்சினார்.

"வாடாப்பா... நான் உன்ரை வீட்டை வரப் புறப்பட்டனான். அதுக்கிடையிலை வந்திட்டாய்" என்றார் அருணாசலம்".

"நான் நல்ல ஒரு விடயத்தைக் கேள்விப்பட்டனான். அதனால் உடனே புறப்பட்டு வந்துவிட்டேன். சுரேந்தினி நான் தூக்கி வளர்த்த பிள்ளை. என்னைத் தனது தந்தையென நினைப்பவள். கஜமுகன் அருமையான பிள்ளை. அவனுக்குச்

சுரேந்திினியைச் செய்து வைத்தால் சுரேந்தினி குறைவில்லாமல் வாழ்வாள். எப்போ திருமணம்? என்றார் நாகராசா”.

“இன்றும் நாள் தீர்மானிக்கவில்லை. உங்களோடும் கலந்து பேசிவிட்டுத் தீரமானிக்கலாம் என்றிருக்கிறேன்” என்றார் அருணாசலம்.”

“நாகராசா குளிர்ந்து போனார். சிவலிங்கத்தைப் போல அவனது பிள்ளை இல்லை. சிவலிங்கத்தின் குணங்களுக்காக நாம் நல்லபிள்ளையை வெறுக்கக்கூடாது. விரைவாக நாளை எடுத்து முடிவுகட்டு. இல்லா விட்டால் பிரச்சினை” என்றார் நாகராசா”

“தன்னுடன் கோபிப்பார் என்று நினைத்த அருணாசலம் நாகராசாவின் மகிழ்வான பேச்சைக் கேட்டு அதிர்ந்து போனார் ;”. “என் உயிர் நண்பன் நீயடா. அதனால் நீ எதைச் செய்தாலும் நான் பொறுத்துக் கொள்வேன்” என்றார் நாகராசா. அருணாசலத்தின் உள்ளம் கலங்கிக் கண்கள் கண்ணீரைச் சொரிந்தன. அன்பானவர்களே, உண்மையான நண்பர்கள் பெரும் முரண்பாடுகள் ஏற்பட்டாலும் பிரிய மாட்டார்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***நண்பொன்றித் தம்மாலே நாட்டப்பட் டார்களைக்***
***கண்கண்ட குற்றம் உளவெனினும் காய்ந்தீயார்;***
***பண்கொண்ட தீஞ்சொல் பணைத்தோளாய்! யாருளரோ***
***தங்கன்று சாக் கறப்பார்.***

தம் கன்று சாவதால் தமக்கே நட்டம் வரும் என்று பசுவளர்ப்பவர்களுக்குத் தெரியும். அது போல உண்மையான நண்பனைப் பிரித்தால் பிரித்தவருக்கு நட்டமுண்டாகு மென்று பிரிபவருக்குத் தெரியும் அதனால் அவர்கள் தமக்கிடையே உண்டாகும் முரண்பாடுகளைத் தவிர்த்துக் கொள்வர். **"யாருளரோ தங்கன்று சாக்கறப்பார்"** என்பது பழமொழி.

17 "அன்பானவர்களே, தம்முடைய பல்வேறுவிதமான சிறப்புக்களையுடைய சுற்றத்தினையும், தாம் சம்பாதித்த பொருட்கள் அனைத்தையும் கேட்டவர்களுக்கெல்லாம் கொடுத்து விட்டுப் பற்றற்று வாழ்பவர்களிற் சிலர், சிலவற்றின் மீதுள்ள பற்றை விலக்க முடியாதவர்களாக வாழ்கின்றனர். உலகப் பற்றை முழுமையாகத் துறக்கவேண்டுமென்பதற்காகத் தமது இனிய உறவுகளையும் தாம்பாடுபட்டுத் தேடிய பொருட்களையும் துறந்தவர்களால் கூடச் சில பற்றுக்களைத் துறக்க முடிவதில்லை. அதனால் அவர்கள் வாழ்வில் பல சிக்கல்களை எதிர்நோக்குவார்கள். பற்றுக்களைத் துறந்தவன் ஞானி. அப்படிப் பற்றுக்களைத் துறந்து ஞானியாக வேண்டும் என்று வீட்டை விட்டுப் புறப்பட்டுக் காட்டுக்குச் சென்று அங்கு தவம் செய்பவர்கள்

கூடச் சில பற்றுக்களைத் துறக்க முடியாது அவதிப்படுகின்றனர். மனத்திடமுள்ளவன், மனம் ஒரு நினைப்பட்டவன். வீட்டிலிருந்தாலும் அவன் பற்றற்றவனாக இருப்பான். மனத்திடமில்லாதவன், அலையும் மனதை உடையவன் காட்டில் தனிமையாக இருந்தாலும் அவன் பற்றுக்களுக்கு ஆட்பட்டவனாகவே இருப்பான். இந்த நிலை யானை சென்ற துவாரத்தால் அதன் வால் செல்லாததைப் போன்றது”

“அம்பலவாணர் பெரும் தனவந்தர். அவரிடம் இல்லாத வசதிகள் எதுவும் இல்லை. இருப்பினும் அவரின் மனம் நிலை கொள்ளாது தவித்தது. தனது மன நிலையைப் பற்றித் தனது மானசீகக் குருவான சுந்தரலிங்கம் சுவாமியாருக்குச் சொன்னார். சுந்தரலிங்கம் சுவாமியார் பிரம்மச்சாரி அவர் அவ்வூர்ச் சிவன் கோயில் மடத்தில் வசிப்பவர். காலையில் எழுந்து காலைக்கடன்களை முடித்து விட்டுக் கிராமத்துள்ச் செல்வார். அங்கு சென்று மக்களைச் சந்தித்து அவர்களுக்கு ஆலோசனைகள் சொல்வார். சோதிடம் சொல்வார். பேய் பிசாசுகளை விரட்டுவார். அவர் சொன்னார் ; “மகனே, வயது வந்ததும் சிலருக்குப் பொருட்கள் மீதுள்ள ஆசை அற்றுப் போய்விடும். மனைவி பிள்ளைகளால் பிரச்சினைகள் உருவாகும். அப்படியானவர்கள் சாமியாராகப் போவதும் உண்டு. உனக்கு விருப்பமானால் என்னுடன் வந்து சிவன் கோயிலில் இரு” என்றார்”

“சில நாட்களின் பின் அம்பலவாணர் சிவன் கோயிலுக்கு வந்து சுந்தரலிங்கம் சுவாமியாருடன் சிவன் கோயில் மடத்தில் தங்கினார். அப்பலவாணர் பெரும் பணக்காரர் ; வசதியானவர். அறுசுவை உணவுண்பவர். மடத்தில் சுந்தரலிங்கம் சுவாமியார் தான் சமைப்பார். சோற்றுப் பானைக்குள் தனக்குக் கிடைக்கும் காய்கறிகளையும், மிளகாய்த் தூளையும் உப்பையும், புளியையும் போட்டுச் சமைப்பார். அதைத் தான் மூன்று நேரமும் தானும் உண்டு, பசியென்று வருபவர்களுக்கும் கொடுப்பார். இரண்டு மூன்று தினங்கள் சுத்தரலிங்கம் சுவாமியார் கொடுத்த உணவை வாங்கி உண்ட அம்பலவாணர் நாலாவது நாள்ச் சொன்னார் ; “ சுவாமி சோற்றையும் கறிவகைகளையும் தனித் தனியாகச் சமைக்க முடியாதா?”

“மகனே, தனது இனிய நெருங்கிய சுற்றத்தினரையும், தாம் பாடுபட்டுத் தேடிய சொத்துக்களையும் துறப்பது மட்டும் துறவல்ல. நாக்கு சுவையையும், காது இனிமையான மொழிகளையும், கண்கள் இரம்மியமான காட்சிகளையும், மூக்கு நறுமணங்களையும் துறப்பதே உண்மையான துறவு. பெரும் பொருள்களையும் இனிய சுற்றத்தையும் துறந்த உனக்கு சுவையைத் துறக்க முடியவில்லை. அதனால் தான் சுவையில்லாத உணவை ஒதுக்கி விட்டுச் சுவையான உணவின் மீது பற்றுக் கொண்டாய். அந்தப் பற்றையும் நீக்கவேண்டும்”

"முடியவில்லைச் சுவாமி. பொருள் பெரும் சுமையாக இருந்தது. பிள்ளைகளும் இனத்தவர்களும் அதன் மீது கொண்ட பற்றை என்மீது கொள்ளாமையால் தான் நான் அவற்றைத் துறந்தேன். ஆனால் உணவின் மீதுள்ள பற்றை என்னால் நீக்க முடியவல்லை". என்றார் அம்பலவாணர். ஆகவே அன்பானவர்களே,பற்றைத் துறக்க வேண்டும் என்று எண்ணுவோர் எல்லாப் பற்றுக்களையும் நீக்க வேண்டும். இல்லாவிட்டால் அதனால் எந்தப் பயனும் உண்டாகாது" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***சிறந்ததம் சுற்றமும் செய்பொருளும் நீக்கித்***
***துறந்தார் தொடர்பாடு எவன்கொல்? – கறங்கருவி***
***ஏனல்வாய் வீழும் மலைநாட! அஃதன்றோ***
***யானைபோய் வால்போகா வாறு.***

தன்னைச் சூழ்ந்துள்ள சிறப்பான சுற்றத்தவரையும்,தாம் பெரும் பாடுபட்டுத் தேடிய பொருட்களையும் விட்டு விட்டு துறவறம் பூண்ட சிலரால் சில பற்றுக்களை நீக்க முடிவதில்லை. இது யானை போய் வால் போகாததை ஒக்கும், **"யானை போய் வால்போகாத வாறு"** என்பது பழமொழி.

**18** "அன்பானவர்களே, வீரம் பொருந்திய பெரும் மன்னர்கள் யானையைக் கொண்டே யானையைப் பிடிப்பார்கள். அதுபோலப் பெரும் அறிஞர்கள் தம்மைப் போன்ற பெரும் அறிஞர்களைத் தான் நண்பர்களாக்கிக் கொள்வார்கள். அப்படி

ஆக்கிக் கொள்ளும் போது குலம், கோத்திரம் பார்க்க மாட்டார்கள். அறிவு ஒன்றையே பார்ப்பார்கள். பலம் தான் பலத்தை வசப்படுத்தும். அது போல அறிவு தான் அறிவை வசப்படுத்தும்"

"நந்தவனம் என்ற காட்டில் வாழ்ந்த யானை ஒன்று அறிவு தரும் பல நூல்களைக் கற்றுப் பேரறிஞனாகத் திகழ்ந்தது. அது கற்றவர்களை மட்டும் மதிக்கும். கல்லாதவர்களுக்குத் தனது வீட்டில் நடைபெறும் விஷேசங்களுக்குக் கூடச் சொல்லாது. இதனால் காட்டில் வாழ்ந்த பெரும்பான்மையான மிருகங்கள் யானை தலைக்கனம் பிடித்தது, திமிர் உள்ளது என்று பேசிக் கொள்ளும். யானை இதைப் பற்றியெல்லாம் கவலைப்படுவதில்லை. காட்டில் ஒரு பாடசாலையை நடத்தி வந்தது. அப்பாடசாலையில் நந்தவனத்தில் உள்ள மிருகங்களும் கல்வி கற்று வந்தன"

"கல்விகற்கும் மிருகங்களையும் அவற்றின் பெற்றோர்களையும் யானை மதித்தது. அதனால் காட்டில் உள்ள மிருகங்கள் பல யானையின் பாடசாலைக்கு வந்து கல்வி கற்றன. அக்காட்டில் வாழும் பன்றி யானையைப் போலப் பல நூல்களைக் கற்று அறிவாளியாக இருந்தது. அதனால் யானை தனக்கேற்படும் சந்தேகங்களைப் பன்றியிடம் வினாவி அறிந்து கொள்ளும்"

“யானையின் வீட்டிலோ அல்லது பாடசாலையிலோ நடக்கும் வைபவங்களைப் பன்றி தான் முன்னின்று நடத்தும். அது யானையின் இரத்த உறவினர்களுக்கும் ஏனைய சில மிருகங்களுக்கும் பிடிப்பதில்லை. அதனால் அவை யானையின் வீட்டில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு வருவதில்லை. அதைப் பற்றி யானையும் கவலை கொள்வதில்லை”

“யானையின் மகனுக்குத் திருமணம் நடை பெற்ற போது யானை தனது மனைவியையும் அழைத்துக் கொண்டு தனது மூத்த சகோதரனின் வீட்டிற்குத் திருமணத்திற்கு அழைப்பதற்குச் சென்றது. யானையையும் மனைவியையும் அதன்மூத்த சகோதரன், “உள்ளே வாருங்கள்” என்று அழைக்கவில்லை. வாசலில் வைத்துச் சொன்னது; “நீ சேற்றையும் மலத்தையும் உண்ணும். பன்றியை உனது வீட்டின் நிகழ்வுகளுக்குத் தலைமை தாங்க வைக்கிறாய். அதனால் பெரும் அவமானம் எமது குடும்பத்திற்கு ஏற்பட்டுள்ளது. அதனால் கீழ் சாதிப் பன்றி இருக்கும் இடத்திற்கு நான் வரமாட்டேன். நான் வரவேண்டுமானால் பன்றியைத் துரத்து” என்றது”

“அண்ணா, கற்றவர்கள் தான் உலகில் பெரியவர்கள். அதை விட அவர்கள் தாம் எடுக்கும் பிறவிகளில் கூடப் பெரியவர்களென மதிக்கப்படுவார்கள். அப்படியான அழிவல்லாத செல்வத்தைப் பன்றி பெற்றிருக்கிறது. கல்வியை மதிக்க வேண்டுமே தவிர அதைப் பெறாத பெரியவர்களை

மதிக்கக் கூடாது. கல்லாதவர்கள் உயிரோடு இருக்கிறார்கள் என்று சொல்லும் நிலையில் தான் இருக்கிறார்கள். அவர்கள் பயிர்கள் எதுவும் விளையாத உவர் நிலத்திற்குச் சமமானவர்கள். கல்லாதவர்களின் அழகிய தோற்றம் மண்ணாற் செய்யப்பட்ட அழகிய பொம்மை போன்றது. அது போலக் கல்லாதவனிடம் சேரந்த செல்வம் கற்றவர்களின் வறுமையை விடக் கொடுமையானது. அதனால் கற்றுயர்ந்த பன்றியே எனக்கு உயர்ந்தது. அதன் நட்பை விடுவதை விட கல்லாத மூடனான உனது உறவைத் துண்டிப்பது மேலானது” என்று கூறிவிட்டுத் திருமண அழைப்பிதழைக் கொடுக்காது தனது மனைவியையும் அழைத்துக் கொண்டு பன்றியின் வீட்டை நோக்கிச் சென்றது யானை. ஆகவே அன்பானவர்களே எப்பொழுதும் அறிவுடையவர்கள் இன்னொரு அறிவுடையவரைத் தான் மதித்துச் சுற்றமாக்கிக் கொள்வார்கள். பணம், பொருள், பதவி யாவும் வரும். ஆனால் போய்விடும். அவை போய் விட்டால் வைத்திருந்தவனுக்கு மதிப்பிராது. ஆனால் கல்வி வருமே தவிரப் போகாது இருந்து அவர்கள் போகுமிடமெல்லாம் அவர்களை மதிக்கச் செய்யும் என்பதை உணர்ந்து நடவுங்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

*ஆணம் உடைய அறிவானர் தந்நலம்*
*மானும் அறிவி  னவரைத் தலைப்படுத்தல்*
*மானமர் கண்ணாய்! மறங்கெழு மாமன்னர்*
*யானையால் யானையாத் தற்று*

யானையை யானையால் வசப்படுத்துவது போல அறிவால் அறிவாளரை வசப்படுத்த வேண்டும். **“யானையால் யானை யாத்தற்று”** என்பது பழமொழி.

19 “அன்பானவர்களே, நீங்கள் ஒருவரிடம் ஒன்றைப் பெறவேண்டுமானால் பெறப்போபவரின் மனம் வருந்தாமல் அதைப் பெறுதல் வேண்டும். தேனீயானது அழகான பூவின் மீது அது கசங்காமல், வருந்தாமல் மெதுவாக இருந்து தேனை எடுக்கும். தேன் எடுக்கும் போது பூவிற்கு எந்தக் கெடுதலையும் தேனீ செய்யமாட்டாது. தேனீ பூவில் தேன் எடுப்பது போலத் தான் மற்றவர்களை வருத்தாமல் எமது எண்ணங்களைப் பூர்த்தி செய்தல் வேண்டும். பூக்கள் தம் இன விருத்திக்காகத் தேனீக்களை விரும்பி அழைத்துத் தேனைக் கொடுப்பது போலக் கொடுப்பவரின் உள்ளம் நிறைவடைந்து மகிழுதல் வேண்டும். அவ்வாறு செயற்பட்டால் கொடுப்பவர்கள் மனமுவந்து கொடுப்பார்கள். அத்துடன் மீண்டும் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் கொடுப்பவர்களுக்கு உண்டாகும். இந்த வகையில் அரசர்கள் மக்களிடம் வரிகளை வசூலிக்கும் போது, மக்கள் மன மகிழ்வுடன் கொடுக்கத்தக்க வகையில் செயற்பட வேண்டும். அப்படிச் செயற்பட்டால் தான் அரசர் மீது மக்களுக்கு வெறுப்புண்டாகாது”

“முல்லை வனத்தின் அரசனான சிங்கம் தனது ஆட்சிக்குட்பட்ட மிருகங்களிடமிருந்து மிகவும் தந்திரமாக வரி

யைவசூல் செய்யும். அக்காட்டில் விவசாயம் செய்யும் மிருகங்களுக்கு நல்ல இன விதை தானியங்களை இறக்குமதி செய்து இலவசமாகக் கொடுக்கும். கொடுக்கும் போது தான் கொடுக்கும் தானியங்களை அறுவடை செய்த பின் தனக்கே தரவேண்டும் என்று நிபந்தனை விதிக்கும். மிகவும் சிறந்த ரக விதைகளை அது கொடுப்பதால் விளைச்சல் அதிகமாக இருக்கும். விளை பொருட்களைத் திரும்பவும் பெறும் போது சிங்கம் ஒரு குறிப்பிட்ட விலையில் கொள்வனவு செய்யும். தனிப்பட்ட வியாபாரிகள் கொள்வனவு செய்யாத வகையில் தானியங்களின் விற்பனை விலையை அறுவடை நாட்களில் குறைக்கும். அதனால் வியாபார நிலையங்களில் தானியங்களின் விலை குறைவாக இருக்கும். கொள்வனவு செய்து முடித்த சில நாட்களில் தானியங்களின் விலையைச் சிறிது சிறிதாக அதிகரிக்கும்"

"சிங்கம் தானியங்களைக் கொள்வனவு செய்யும் போது வரியென்று எதுவும் வசூலிப்பதில்லை. கொள்வனவு செய்யும் விலையில் வரி அடங்கியிருக்கும். இது மிருகங்களுக்குத் தெரிவதில்லை. சிலவேளைகளில் தனியார் வியாபாரிகளையும் தானியங்களைக் கொள்வனவு செய்யச் சிங்கம் அனுமதிக்கும். அப்பொழுது தனியார் வியாபாரிகளிடமும், விவசாயிகளிடமும் வரிசையைச் சற்று அதிகமாக வசூலிக்கும். தனியார் வியாபாரிகள் சிங்கம் கொள்வனவு செய்யும் விலையிலும் பார்க்க குறைந்த விலையிலேயே கொள்வனவு செய்வார்கள். அல்லது

சிங்கம் கொள்வனவு செய்யும் விலையிலும் சிறிது கூடுதலான விலைக்குக் கொள்வனவு செய்வார்கள். ஆனால் வரிப்பணம் அதிகமாக இருக்கும். அதனால் விவசாயிகள் சிங்கத்திற்கே தமது விளைபொருட்களை விற்பார்கள்"

"சிங்கம் கொள்வனவு செய்யும் விலைக்குள் வரிப்பணமும் அடங்குவதால் சிங்கத்திற்கு முழுமையாக வரிப்பணம் கிடைத்து விடும். வரிப்பணம் என்று சொல்லி வரிப்பணத்தை அறவிடாததால் விவசாயிகள் அரசனான சிங்கம் வரிப்பணத்தை வசூலிப்பதில்லை என்று நினைத்து மகிழ்ந்து சிங்கத்தைப் போற்றிப் புகழும். ஆகவே, அன்பானவர்களே, அரசர்கள் மக்கள் வரிப்பணத்தைச் சுமையெனக் கருதாது கொடுக்கும் வழக்கத்தை உண்டாக்குதல் வேண்டும். அது போல நீங்கள் இன்னொருவரிடம் உதவி பெறுவதனால் அவரை வருந்தாது பெறப் பழகிக் கொள்ளல் வேண்டும்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***பொருத்தம் அழியாத பூந்தண்டார் மன்னர்***
***அருத்தம் அடிநிழ லாரை – வருத்தாது***
***கொண்டாரும் போலாதே கோடல் அதுவன்றோ***
***வண்டூதா துவண்டு விடல்***

குடிமக்களை வருத்தாது வரியை அரசர்கள் தந்திரமாகப் பெறுதல் வேண்டும். இது வண்டு மலரை வருத்தாது தேன் உண்பதைப் போன்றது. "**வண்டூ தாதுவண்டு விடல்**" என்பது பழமொழி.

20

“அன்பானவர்களே, உடலை வருத்தி உழைப்பவர்கள் என்றும் இன்பமாக வாழ்வார்கள். உடலை வருத்தி உழைக்கச் சோம்பற்படுபவரின் குடும்பம் ஒரு போதும் முன்னேற்றமடைய மாட்டாது. தனது குடும்பத்தை மதிப்பு மிகுந்த சிறந்த குடும்பமாக மாற்றவிரும்புபவர்கள் சோம்பலில்லாது நல்ல முயற்சிகளை மேற்கொண்டு உற்சாகத்துடன் செயற்படல் வேண்டும். அழிக்கும் தன்மையைக் கொண்ட சோம்பலை உடையவனின் குடும்பம் அவனுக்கு முன்னாலேயே அழிந்து விடும். நாட்டை ஆளுகின்ற அரசன் வலிய வந்து உதவிகள் பலவும் செய்தாலும் சோம்பல் உள்ளவன் ஒருபோதும் முன்னேறமாட்டான். ஆனால் முயற்சியுள்ளவன் உதவுவார். இல்லாவிட்டாலும்தனது முயற்சியால் முன்னேறுவான்”

“நாவல் நகரின் அங்கஜன் என்றொரு சிறுவன் இருந்தான். அவன் பிறந்தவுடனே தாய் இறந்து விட்டாள். அவனுக்குப் பத்து வயதாகும் போது தந்தை விபத்தில் சிக்கி இறந்து விட்டார்.தாயின் சகோரியான காமாட்சி அவனைத் தன்னுடன் அழைத்து வந்தாள்”

“காமாட்சி வறியவள். அத்துடன் அவர்களுக்கு எட்டுப் பிள்ளைகள். அதனால் அங்கஜனின் தேவைகள் நிறைவேறவில்லை. அவனுக்கு வயிறாற உணவு கூடக் கிடைப்பதில்லை. காமாட்சியின் பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லாது வீட்டில் நின்றனர். அங்கஜன் படிப்பில் கெட்டிக்காரன்.

அவன் படிக்க விரும்பினான். ஆனால் வசதிகள் எதுவும் இல்லை. அதனால் அங்கஜன் அவ்வூரில் வியாபாரம் செய்த ஏகாம்பரத்திடம் சென்று வேலை கேட்டான். அவர் அவனது நிலையை உணர்ந்து வேலை கொடுக்கச் சம்மதித்தார்; " ஐயா, எனக்குப் படிக்க வேண்டும் என்ற விருப்பம் மனதில் உண்டு. நான் பாடசாலைக்குச் சென்று படித்து விட்டுப் பாடசாலை விட்ட பின் வந்து விடியும் வரை வேலை செய்கிறேன்" என்று கூறினான்".

"அவரின் வியாபாரத் தலம் இரவு பத்து மணிவரை திறந்திருக்கும்.அதனால் அவர், "பாடசாலை விட்ட பின்பு வந்து இரபு பத்து மணிவரையும் வேலை செய்" என்று சொன்னார். ஆரம்பத்தில் அங்கஜன் தனது சிறிய தாயாரின் வீட்டுக்குச் சென்று வந்தான். அதில் அவனுக்குப் பெரும் சிரமமிருப்பதை உணர்ந்த ஏகாம்பரம் அவனைத் தன்னுடன் தங்குமாறு கேட்டுக் கொண்டார். நேரம் கிடைக்கும் வேளைகளில் அங்கஜன் காமாட்சியின் வீட்டுக்குச் செல்வான். அங்கு வேலைகளின்றி விளையாடும் காமாட்சியின் பிள்ளைகளை ஏதாவது வேலை செய்து சம்பாதியுங்கள் அல்லது பாடசாலைக்குச் சென்று படியுங்கள் என்று சொல்வான். ஆனால் அவர்கள் அவனது சொல்லைக் கேட்பதில்லை"

"பத்து வருடங்கள் கழிந்தன. அங்கஜன் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானான். அவன் ஏகாம்பரத்தின்

வர்த்தக நிலையத்தில் தொடர்ந்து வேலை செய்து கொண்டு கற்றான். ஆரம்பத்தில் கூலிவேலைகள் கொடுத்த ஏகாம்பரம் பின் அங்கஜனின் திறமையை உணர்ந்து வர்த்தக நிலையத்தின் முகாமையாளராக்கினார். அதனால் அவனுக்குப் படிப்பதற்கு நேரமிருந்தது"

"அங்கஜன் முகாமையாளரான பின் ஏகாம்பரத்தின் வர்த்தக நிலையம் பெரு வளர்ச்சி கண்டது. ஏகாம்பரம், அங்கஜனின் திறமையை உணர்ந்து வர்த்தகத்தைப் பெருப்பித்தார். அவர் உள்நாட்டு வியாபாரத்துடன் வெளிநாட்டுகளுக்குப் பொருட்களை இறக்குமதி செய்தும் வந்தார். அதனால் அவர் பெரும் தனவந்தரானார்"

"அங்கஜனின் பல்கலைக்கழக் கல்வி முடிந்ததும் அங்கஜனுக்கு ஊரில் பெரியதொரு பதவி கிடைத்தது. அவன் வேலைக்குச் செல்வதற்காக ஏகாம்பரத்தின் வேலையை விட யோசித்தான். அதை அவன் ஏகாம்பரத்திடம் சொன்னபோது அவர் சொன்னார்; "மகனே. நீ அறிவுள்ளவன், முயற்சியுள்ளவன்; திறமைசாலி. நீ எங்கிருந்தாலும் நன்றாக இருப்பாய். என்னிடம் கோடிக்கணக்கான சொத்திருக்கு. எனக்கு ஒரே ஒரு மகள். அவளை நீ திருமணம் செய்யச்சம்மதித்தால் நான் மகிழ்ச்சியடைவேன். எனது சொத்துக்கள் யாவும் உனக்கே சேரும்" என்றார்".

“அங்கஜன் அதற்குச் சம்மதித்தான். திருமணம் நடைபெற்றது.அங்கஜன் கோடீஸ்வரனானான். அப்படியிருந்தும் அவன் அரசாங்கம் தனக்குக் கொடுத்த வேலையையும் செய்தான். சில வருடங்களின் பின் அவனுக்குத் தொழிலும் பதவி உயர்வு கிடைத்தது. காமாட்சியும் பிள்ளைகளும் முன்பு இருந்தது போலவே இப்போதும் இருக்கிறார்கள். அவர்களுக்கு அங்கஜன் தொழில்கள் கொடுத்தான். ஆனால் அவர்கள் சோம்பல் காரணமாக அத்தொழில்களைச் செய்யவில்லை. அதனால் அங்கஜன் அவர்களுக்கு அடிக்கடி உதவிகள் செய்து வருகிறான். ஆகவே அன்பானவர்களே, முயற்சி செய்தால் எதையும் அடையலாம். ஊக்கமும் ஒழுக்கமும் உள்ளவனுக்கு உதவி செய்யக் கடவுள் எப்போதும் தயாராக இருப்பார். அதனால் முயற்சி செய்யுங்கள். நீங்கள் நினைத்ததை எல்லாம் அடைவீர்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***வேளாண்மை செய்து விருந்தோம்பி வெஞ்சமத்து***
***வாளாண்மை யாலும் வலியராய்த் - தாளாண்மை***
***தாழ்க்கு மடிகேள் இலராய் வருந்தாதார்***
***வாழ்க்கை திருந்துதல் இன்று.***

முயற்சித்தால் நினைத்தவற்றை எல்லாம் அடையலாம் முயற்சியில்லாதிருப்பவர் முன்னேற்றம் அடைய மாட்டார். **“வருந்தாதார் வாழ்க்கை திருந்துதல் இன்று**” என்பது பழமொழி.

21 “அன்பானவர்களே, தம்மைவிட வலிமையுடையவர் களை விரோதித்தல் கூடாது. வலிமையில்லாதவர் தம்மை விட மேலோங்குவதையும் அனுமதிக்கக் கூடாது. வலிமையுள்ளவர்க ளைக் கண்டதும் பயமேலீட்டால் ஒருவன் அவரை மதித்து நடப்பான். அது இயல்பானது. அவன் பலவீனர்களைக் கண்டதும் எதிர்ப்பது தேவையில்லாத காலத்தில் வலிமையுடைவராக இருப்பதாகக் காட்டிக் கொள்ளும் தன்மையானதாகும். பலவீனர்களைத் தாக்கியழிப்பது தர்மத்திற்கு முரணானது. பல வானை எதிர்த்து அழிக்க முடியாதவர்கள் தான் பலவீனர்களிடத்தில் தமது வீரத்தைக் காட்டுவர். இது தர்மமில்லாத செயலாகும்”

“முல்லை வனம் என்ற காட்டிலே யானை ஒன்று வாழ்ந்து வந்தது. அது மிகவும் பலசாலி. அந்தக் காட்டின் அரசனான சிங்கம் சொல்வோர் புத்தி கேட்பது. அது தன்னைப் புகழும் மிருகங்களை அன்புடன் உபசரித்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யும். அக்காட்டில் வாழ்ந்த நரி ஒன்று சிங்கத்துடன் எந்நேரமும் இருக்கும். காரணமின்றிச் சிங்கத்தைப் புகழும். உபசாரங்கள் செய்யும். சிறியதொரு செயலுக்கும் பெரும் விழா எடுத்துப் பிரமுகர்களைக் கொண்டு சிங்கத்தைப் புகழ்ந்து பேசவைக்கும். மாலைகள் அணிவிக்கும் பொன்னாடைகள் போர்த்தும்”.

“இதனால் சிங்கம் நரியைத் தனது செல்லப்பிள்ளையாக வைத்திருந்தது. அதைப் பயன்படுத்தி நரி காட்டு மிருகங்களுக்குப் பல்வேறு விதமான துன்பங்களைச் செய்தது”

“யானை காலையில் எழுந்தவுடன் குளத்தில் நீராடி நன்றாக மலர்ந்திருக்கும் தாமரை மலர்களைக் கொய்து கூடையிலிட்டுக் கொண்டு வந்து சிவனுக்குச் சூடி வணங்கும். இவ்வாறு யானை தினமும் செய்யும். அன்று யானை குளித்து விட்டு நீறணிந்து பூக்கொய்து வைத்த கூடையுடன் கோயிலுக்குச் சென்று கொண்டிருந்தது. அப்பொழுது அந்த வழியால் வந்த நரி சிங்கம் கொண்டு வந்த பூக்கூடையைத் தட்டி விட்டது. பூக் கூடை நிலத்தில் விழுந்தமையால் பூக்கள் சிதறி மண்ணில் விழுந்தன”

“யானையோடு வந்த பன்றிக்கு நரியின் அச்செயல் கோபத்தை உண்டாக்கியது. அது யானையைப் பார்த்துக் கூறியது ; “அண்ணா, நரி வேண்டுமென்றே தாங்கள் கொண்டு வந்த பூக்கூடையைத் தட்டியது. நீங்கள் அதைப் பொறுத்துக் கொண்டீர்கள். நான் என்றால் அடித்திருப்பேன்” என்றது”

“யானை, பன்றியைப் பார்த்துச் சொன்னது; “நண்பனே, சிங்கத்துடன் கொண்ட நட்புக்காரணமாகத் தான் நரி அப்படிச் செய்தது. தன்னை விட வலியவனை மிகவும் அவதானமாகவே எதிர்க்க வேண்டும். நரிக்குத் துன்பஞ்

செய்தால் சிங்கம் கோபம் கொள்ளும். அதனால் தான் நான் எதுவும் செய்யவில்லை" என்றது"

"மறு நாள் யானை குளித்து விட்டு வரும் போது எருமை சேற்றில் படுத்திருந்தது. யானை அதன் அருகில் வந்ததும் தனது உடலை உலுப்பியபடி பின்னங் காலால் யானை கொண்டு வந்த பூக்கூடையைத் தட்டியது. பூக்கூடை நிலத்தில் விழுந்தது. யானையின் உடலெங்கும் சேறுபட்டது. யானை உக்கிரமாகப் பூக்கூடையைத் தூக்கியபடி எருமையின் அருகே சென்றது. எருமை பயந்து விட்டது. முன்பொரு முறை யானை புலியொன்றைத் தும்பிக்கையால் தூக்கி நிலத்தில் மோதியது. அது போலத் தன்னையும் தூக்கி நிலத்தில் மோதப் போகிறது" என்று எண்ணியது. யானை எருமையின் அருகே சென்று விட்டு அதைக் கவனிக்காதது போலச் சென்றது"

"யானையின் செயல் பன்றிக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. யானை எருமையைத் தூக்கி வீசப்போகிறது என்று நினைத்த பன்றி ஆச்சரியத்துடன் யானையைப் பார்த்தது. யானை சொன்னது; "நண்பா, வலியவர்களைக் கண்டால் விலகிக் கொள்ள வேண்டும். பலவீனர்களைப் பயமுறுத்தி வைத்திருத்தல் வேண்டுமே தவிரத் தனது பலத்தைக் காட்டக் கூடாது. நான் எருமையைத் தாக்கியிருந்தால், நரி தனக்குப் பயந்து தான் தன்னைத் தாக்கவில்லை என்று நினைத்துக் கர்வம் கொள்ளும். வலிமையானர்களைக் காலமறிந்த தான்

தாக்குதல் வேண்டும்” என்றது. எனவே அன்பானவர்களே, வலியவர்களைக் கண்டால் விலகிக் கொள்ளுங்கள். பலவீனர்களை வெருட்டுங்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***வலியாரைக் கண்டக்கால் வாய்வாளா ராகி***
***மெலியாரை மீதூரும் மேன்மை யுடைமை***
***புலிகலாம் கொள்யானைப் பூங்குன்ற நாட!***
***வலியலாந் தாயக்கு வலித்து***

வலியவர்களை எதிர்க்காது சந்தர்ப்பம் வரும் வரை காத்திருத்தல் வேண்டும். மெலியோரைத் தண்டிக்காது பயமுறுத்தி வைத்திருந்தல் வேண்டும். **“வலியலாந் தாயக்கு வலித்து”** என்பது பழமொழி.

**22** “அன்பானவர்களே, காற்றுக்கு வேலி அடைக்க முடியாது. அது போலக் காற்றைப் பிடித்து ஒ ரு பாத்திரத்தில் அடைக்கவும் முடியாது. அது கட்டுப்பாடற்றது. எதற்கும் அடங்காதது. சுதந்திரமானது. கண்களாற் காண முடியாதது. இது போலப் பயனில்லாத சொற்களைப் பேசித்திரிபவர்களையும் திருத்த முடியாது. பலரும் கேட்டு வெறுக்கக் கூடிய கொடிய வார்த்தைகளைப் பேசுவோர் எல்லோராலும் விலக்கி வைக்கப்படுவர் ; எல்லோரினதும் ஏளனத்திற்கு ஆளாவர். ஒருவன் தீயசெயல்கள் பலவற்றைச் செய்வதை விடப் பொருத்தமில்லாத வகையில் பயனில்லாத சொற்களைப் பேசுவது தீமையைத் தரும். பயனில்லாத சொற்களைப்

பேசுபவன், அறமில்லாதவன்; நேர்மையில்லாதவன் ; அறிவில்லாதவன், இவன் ஒரு போதும் திருந்த மாட்டான். இப்படியானவர்களைத் திருத்துவது அரிதாகும்"

"நந்தவனம் என்ற காட்டில் வாழ்ந்த நரி ஒன்று எப்பொழுதும் பயனில்லாத வார்த்தைகளையே பேசும். அதன் பேச்சு அதன் தந்தைக்குப் பெருந்துன்பத்தைக் கொடுத்தது. தந்தையான நரி, தனது மகனை அழைத்துச் சொன்னது; "மகனே, எப்பொழுதும் அடுத்தவர்களின் மனதைப் புண்படுத்தாத இனிய சொற்களையே பேசுதல் வேண்டும். உள்ளம் விரும்பி ஒருவருக்குப் பெரும் உதவிகள் செய்வதை விட, முகம் மலர்ந்து இனிய வார்த்தைகள் பேசுவது தான் அறமாகும். பொருள் கொடுத்தவனுடன் தகாத வார்த்தைகள் பேசினால், அவன் துக்கப்படுவான். எனது இயலாமையால் கேட்கக் கூடாத வார்த்தைகளை யெல்லாம் கேட்க நேர்ந்து விட்டதே. இனிமேல் இப்படியான கொடியவர்களிடம் பொருள் பெறக்கூடாது என்று நினைப்பான். இனிய சொற்கள் ஒருவனை மகிழ்ச்சிப்படுத்துவது மட்டுமல்ல, அவை அவன் செய்த பாவங்களையும் அழிக்கும். ஆகவே, மகனே இனிய வார்த்தைகளைப் பேசிப் பழகு" என்றது"

"நரி தனது தந்தையின் சொல்லைக் காதில் எடுத்துக் கொள்ளவில்லை. அது தொடர்ந்தும் தேவையில்லாத கதைகளைப் பேசித் திரிந்தது. அதனால் அதன் குருவான குதிரை அதை அழைத்துப் புத்திமதிகள் பலவும் கூறியது. நரி,

குதிரை புத்திமதி கூறும் போது ஊளையிட்டது. துள்ளிக் குதித்தது. அதனால் குதிரை கோபம் கொண்டு அதைத் தண்டித்தது. அதன் பின்பும் நரி திருந்தவில்லை. அது யானையைப் பற்றி மிகவும் கேவலமாகப் பேசியது. அதைக் கேட்டுக் கோபம் கொண்ட யானை, ஒரு நாள் புலிக்கு யானையைப் பற்றி மிகவும் கேவலமாகச் சொல்லிக் கொண்டிருந்த போது நரியைத் தனது தும்பிக்கையால் தூக்கித் தூர வீசியது".

"நரியின் இடது முன்கால் முறிந்து விட்டது. நரி வலியையும் பொருட்படுத்தாது சொன்னது ; "அற்ப யானையே, உனது முரட்டுக் குணத்தைப் பற்றித்தான் புலிக்குச் சொல்லிக் கொண்டிருந்தேன். அது உண்மை என்று நிரூபித்து விட்டாய். முரடா, நீ திருந்தமாட்டாயா..? சமபலமுள்ள வீரனுடன் தான் மோத வேண்டும். உனக்குப் பலமிருந்தால் புலியுடன் அல்லது சிங்கத்துடன் மோதிப்பார். கேவலமானவனே இனிமேலாவது திருந்து" என்று சொல்லியவாறு சென்றது".

"அதன் பின்பு தான் யானை தனது தவறை உணர்ந்தது. காட்டில் உள்ள மிருகங்கள் அனைத்தையும் நரி கேலி செய்யும். அதைப் பொறுக்க முடியாத சில மிருகங்கள் நரியைக் கடுமையாகத் தண்டிக்கும். சில மிருகங்கள் சிங்கத்திடம் அது பற்றி முறையிடும். தினமும் நரியைப் பற்றிய முறைப்பாடுகள் பலவும் வருவதால் சிங்கம் அதுபற்றி ஆராய்ந்து

விட்டு நரியை இரண்டு வருடங்கள் சிறையில் அடைத்தது. அப்படியிருந்தும் திருந்தாத நரியைத் தான் தண்டித்தது பிழை என்று நினைத்து யானை வருந்தியது."

"இப்போது அக்காட்டில் உள்ள மிருகங்கள் எவையும் நரியின் பேச்சைக் கணக்கில் எடுப்பதில்லை. நரியைக் கண்டதும் காட்டு மிருகங்கள் விலகிச் சென்று விடும். அதனால் அது மிருகங்களைப் பற்றிக் குறையாகத் தனது மனைவிக்குக் கூறும். நரியின் தொல்லையைத் தாங்க முடியாத அதன் மனைவி தனது பெற்றோரின் வீட்டுக்குச் சென்று விட்டது. அங்கு செல்ல நரிக்குப் பயம். மனைவியின் சகோதரர்கள் எல்லோரும் முரடர்கள். நல்லதைக் கதைத்தாலும் அதைத் தவறாகப் புரிந்து சிறிதும் யோசிக்காமல் கொடிய தண்டனைகள் தருவார்கள். இனிமேல் சாப்பாட்டுக்கும் கஷ்டம் தான்" என்று எண்ணியவாறு முயலின் அருகே சென்று தனது மனைவியைப் பற்றியும் அவளது சகோதரர்களைப் பற்றியும் கூறத் தொடங்கியது. அதைக் கேட்டுச் சகிக்க முடியாத முயல் வேகமாக ஓடியது. ஆகவே அன்பானவர்களே, வீண் பேச்சுப் பேசக்கூடாது. வீண் பேச்சுப் பேசிப் பழகினால் அதிலிருந்து மீள முடியாது" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

382 *கோவாத சொல்லும் குணனிலா மாக்களை*
*நாவா யடக்கல் அரிதாகும் - நாவாய்*
*களிகள்போல் தூங்கம் கடல்சேர்ப்ப! வாங்கி*
*வளித்தோட் கிடுவாரோ இல்*

பயனில்லாத வார்த்தைகளைப் பேசுவோரின் நாவை அடக்குவது அரிது. "**வளி த்தோட் கிடுவாரே இல்**" என்பது பழமொழி

23 "அன்பானவர்களே, முயற்சியுடையவன் சிறந்த செயல்களைச் செய்தானேயானால் அவன் மேலோரால் கௌரவிக்கப்படுவான். செயல்கள் எப்பொழுதும் போற்றப்படும். ஒரு செயலைச் செம்மையாகச் செய்யத் தெரிந்தவரிடம் ஆலோசனை பெற்று விடாது முயற்சித்தால் அரிய செயலென்று எவையும் இராது. தமக்கு இழிவு ஏற்படக்கூடாது, தன்னை எல்லோரும் மதிக்க வேண்டுமென்று நினைத்து எச்சரிக்கையோடு முயற்சி செய்பவன் ஆரம்பத்தில் தோற்றாலும் இறுதியில் வெற்றி பெறுவான். தளர்வில்லாத மனம், வெற்றி பெறுவேன் என்ற நம்பிக்கை, விடாமுயற்சி என்பன நினைத்தவற்றைச் சாதிக்க வைக்கும். அத்துடன் செய்யும் வழிகளை நன்கு ஆலோசித்து எவ்வாறு செய்ய வேண்டும் என்று திட்டமிட்டுச் செய்யப்படும் செயல் எப்பொழுதும் வெற்றியையே தரும்"

"முயற்சித்துப் பார்ப்போம் வெற்றி கிடைக்கும் என்று எண்ணிச் செய்ய வேண்டிய முறைப்படி செய்யபடாத செயல்கள் எப்பொழுதும் தோல்வியையே தரும். அம்முயற்சிக்குப் பலர் உதவி செய்தாலும் அச்செயல் பெரும்பாலும் தோல்வியையே தரும். இச்செயலானது சேற்றிலே தவறாமல் வண்டியை இழுத்துச் செல்லும் என்று நம்பிய எருது, சேற்றில் வண்டியை

இழுக்க முடியாது அதனுள் அகப்பட்டு இறப்பதற்குச் சமமானதாகும்”

“பிந்தாவனம் என்ற காட்டின் கிழக்குப் பகுதியில் உள்ள குடியிருப்புக்களில் அயல் காடான நந்தவனத்தின் மிருகங்கள் புகுந்து பயிர்களை நாசஞ் செய்தன. அத்துடன் அங்கு வாழும் மிருகங்களின் பொருட்களைக் கொள்ளையிட்டன. இது பிரிந்தாவனத்தின் அரசனான சிங்கத்திற்குப் பெருங் கவலையைக் கொடுத்தது. அதனால் அது படைத் தளபதிகளை அழைத்து ஆலோசனை செய்தது. வெகுநேரம் ஆலோசனை நடைபெற்றது. ஒவ்வொரு படைத் தளபதிகளும் ஒவ்வொரு யோசனை சென்னன. இறுதியில் எல்லைப் புறங்களில் காவலை அதிகரிப்பது என்று முடிவானது.”

“குதிரை தனது வீரர்களை அழைத்துக் கொண்டு பிருந்தாவனத்தின் கிழக்குப் பகுதிக்குச் சென்று காவலிலீடு - பட்டது. யானை தனது வீரர்களை அழைத்துக் கொண்டு பிருந்தாவனத்தின் கிழக்குப் பகுதிக்கு வந்து குதிரையைச் சந்தித்துச் சொன்னது ; “நண்பா, நீ வீரன். எமது காட்டின் கிழக்குப் பகுதியில் அடிக்கடி பயிரழிப்பும் கொள்ளையும் நடைபெறுகிறது. அதனால் காவல் காப்பதால் எந்தப் பிரயோசனமும் இல்லை. அரசர் இரக்க சுபாவம் மிக்கவர். மற்றயவர்களைத் துன்பப்படுத்துவதை விரும்பாதவர். அதனால் தான் நான் அரசர் ஆலோசனை கேட்கும் போது பேசாமல்

இருந்தேன். நாம் எவ்வளவு காலத்திற்குக் காவலில் ஈடுபடுவது. இன்று இரவு நந்தவனத்தினுள் நுழைந்து நந்தவனத்தின் அரசனைத் தாக்கி அந்நாட்டைக் கைப்பற்றுவோம். இதனால் எமது இனத்தவரின் துன்பம் ஒரு நாளில் முடிவுக்கு வந்து விடும்" என்றது"

"அது நல்லயோசனையாக இருந்தாலும் குதிரைக்கு அது பிடிக்கவில்லை. போர் செய்வதானால் போராட வேண்டும். அதில் சிலசமயம் உயிரையும் இழக்கலாம். பேசாமல் வீரர்களைக் காவலிலீடுபடுத்தி விட்டு நான் போய் வீட்டில் உறங்கலாமென நினைத்தது. ஆனால் யானை அதிகாரம் மிக்கது. அது சிங்கத்திற்குச் சொல்லாமலே பல செயல்களைச் செய்து முடித்து விடும். அதைச் சமயம் அறிந்து செய்யப்பட்ட நற்செயல் என்று சிங்கம் விழா வைத்துப் பாராட்டிப் பரிசுகளும் கொடுக்கும். அதனால் குதிரை அதற்கு மனமின்றிச் சம்மதித்தது"

"நந்தவனத்தினுள் புகுந்த யானையும் அதன் வீரர்களும் கடுமையாகப் போரிட்டு நந்தவனத்தின் அரசனான கரடியைக் கைது செய்தன. குதிரை தனது வீரர்களையும் போராடுமாறு கூறிவிட்டுப பின்னே நின்று கட்டளைகள் இட்டுக் கொண்டிருந்தது. அந்தப் போரில் யானை காயப்பட்டது"

"அன்று அரசசபை கூடியபோது காட்டில் வாழும் மிருகங்களும் சிங்கமும் யானையின் செயலையும் அதன்

நடவடிக்கைகளையும் பாராட்டின. சிங்கம் தனக்கு வயது சென்று விட்டதால் யானைக்கு முடிசூடப் போவதாக அறிவித்தது. பிரிந்தாவனத்தின் கிழக்குப் பகுதியில் வாழ்ந்த மிருகங்கள் பெரு மகிழ்ச்சியுடன் யானையைப் பாராட்டிப் பரிசுகள் வழங்கின. அத்துடன் உடனே நந்தவனத்தின் அரசனாக யானையை நியமிக்குபம்டி கோரின. அவற்றின் கோரிக்கையை ஏற்ற சிங்கம் நந்தவனத்தின் அரசனாக யானையை நியமித்து அதற்கு முடிசூட்டியது. இது குதிரைக்குப் பெரும் கவலையைக் கொடுத்தது. அது முதலமைச்சரான எருமையைச் சந்தித்துச் சொன்னது ; "நான் தான் நந்தவனத்தைக் கைப்பறினால் எமது காட்டின் கிழக்குப் பகுதியில் வாழும் எமது இன விலங்குகள் துன்பப்படாது என்று யானைக்குச் சொன்னேன். அத்துடன் யானையோடு சேர்ந்து மிகவும் உக்கிரமாகப் போராடினேன். அரசர் அதைப் பற்றி ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. பரிசும் தரவில்லை" என்று கலங்கியது"

"குதிரையாரே, நீர் அன்று நடந்து கொண்ட விதம் பற்றி உமது வீரர்கள் அரசருக்கு விபரமாகச் சொன்னதால் தான் அரசர் அப்படி நடந்து கொண்டார்" என்றது எருமை" ஆகையால் அன்பானவர்களே செயல்களைச் செய்து முடிப்பவர்களுக்குத் தான் பரிசுகளும் கௌரவங்களும் கிடைக்கும் என்பதை உணர்ந்து செயலாற்றுங்கள். செயலாற்றாமல் இருந்து விட்டுத் தமக்குப் பரிசும் கௌரவமும் கிடைக்கவில்லையே என்று கலங்காதீர்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***ஆற்ற வினைசெய்தார்  நிறபப் பலவுரைத்து***
***ஆற்றாதார்வேந்தனை  நோவது ;  சேற்றுள்***
***வழா  அமைக் காத்தோம்பி வாங்கும் எருதாங்கு***
***எழா அமைச் சாக்கா  டெழல்***

போரிலே வீரஞ் செய்தவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுவது முறை. அது தொன்று தொட்டு நடைபெற்று வருகின்றது. போரில் வீரம் காட்டாதவன் அரசரால் கௌரவிக்கப்படவில்லை என்று வருந்துவது தவறு. **"வாங்கும் எருதாங்கு ஏழா அமைச்சாக்கா டெழல்"** என்பது பழமொழி.

**24** அன்பானவர்களே, சிறந்த குதிரையானது பசியால் வாடியிருந்த போதும் சேனமிட்டவுடன் அந்த வாட்டம் நீங்கித் துடிப்புடன் செயலாற்றத் தயாராகும். அது அதன் பண்பு. பசியாய் இருக்கிறது என்று நினைத்து அது தனது கடமையைச் செய்யாது விடமாட்டாது. அது அதன் இயல்பு. இயல்பு எச்சந்தர்ப்பத்திலும் மாறுபாடு அடையாது. இது போலத் தன்னிடமுள்ளவற்றை மறைக்காது கொடுக்கும் தன்மை உள்ளவர்கள், தாம் வறுமையுற்ற போதும் தம்மால் இயன்றதை மனமகிழ்வுடன் கொடுப்பார்கள். கொடுப்பதால் மகிழ்ச்சியடைபவர்கள் மட்டுமே திரும்பத்திரும்ப உதவி செய்வார்கள். பயன்கருதாது தர்மம் செய்வதால் பெரு வாழ்வு வாழலாம் என்று நினைத்துத் திரும்பத் திரும்ப உதவிகோரும் வறியவர்க்கு உதவுபவன் பொருள் குறைவடைந்த போதும் மகிழ்வுடன் உதவி செய்வான். கொடுக்கத்தக்கவர்கள் யார் என

அறிந்தே வறியவர்கள் பிச்சை கேட்பார்கள். அதனால் கொடுத்துப் பழக்கப் பட்டவர்கள் திரும்பத் திரும்பக் கேட்டாலும் முகம் சுழிக்காது கொடுப்பார்கள்"

"பேரம்பலம் பெரும் பணக்காரர் அல்லர். இருப்பினும் தன்னிடமுள்ளவற்றை கேட்பவர்களுக்கு இல்லை என்று சொல்லாது இன்முகத்துடன் கொடுத்து விடுவார். அவரின் எதிரி இராமநாதன். இராமநாதனின் நெருங்கிய உறவினன் தான் பேரம்பலம். இருப்பினும் அவரை ஊர் மக்கள் போற்றிப் புகழ்வது இராமநாதனுக்குப் பொறாமையைக் கொடுத்தது. அதனால் இராமநாதன், பேரம்பலத்திற்கு அடிக்கடி தொல்லைகள் கொடுத்து வந்தார். பேரம்பலம் தன்னிடமுள்ள எதையும் மறையாது கொடுக்கும் தன்மை வாய்ந்தவர். அந்த ஊரில் வாழ்ந்த சின்னத்துரை என்ற ஏழை விவசாயி அடிக்கடி பேரம்பலத்திடம் உதவி பெறுவான்"

"அம்முறை விதைப்பதற்காகப் பேரம்பலம் விதை நெல் வைத்திருந்தார். விவசாயத்தை நம்பிப் பேரம்பலம் வாழ்பவர். அதனால் பேரம்பலத்தை விதைக்காமல் பண்ணினால் அவர் உணவுக்காகக் கஷ்டப்படுவார் என்று நினைத்த இராமநாதன் சின்னத்துரையிடம் சென்று சொன்னான் ; "சின்னத்துரை நீ நெடுகக் கூலி வேலையா செய்யப்போகிறாய். நான் இம்முறை நெல் விதைக்கவில்லை. எனது வயலில் நீ விதை. குத்தகையாக

ஊரார் கொடுக்கும் நெல்லை எனக்குத் தா. என்னிடம் விதை நெல்லு இல்லை. நீ பேரம்பலத்தைக் கேள் தருவார்" என்றான்"

"அதை நம்பிய சின்னத்துரை பேரம்பலத்திடஞ் சென்று நடந்த சம்பவத்தைக் கூறி விதை நெல் கேட்டான். அவரிடம் விதைப்புக்கு மேலதிகமாக இருந்த விதை நெல் முழுவதையும் அவர் கேட்டவர்களுக்குக் கொடுத்து விட்டார். அவரின் விதைப்புக்குப் போதுமான அளவு நெல்லே அவரிடம் இருந்தத. எனினும் மனம் வருந்தாது எல்லாம் இறைவன் செயல் என்று நினைத்துக் கொடுத்தார்"

"சின்னத்துரை, பேரம்பலத்திடம் வாங்கிய நெல்லைத் தனது வீட்டிற்குக் கொண்டு சென்றான். அதைக் கண்ட அவனது மனைவி மஞ்சுளாவும் மகன் சுந்தரனும் அவரைக் கண்டபடி ஏசினர்"

"அப்பா, பேரம்பலம் கடவுள். எங்களுக்கு எவ்வளவு உதவிகள் செய்தவர். இராமநாதன் தீயவன். அவன் தனது வயல் முழுவதிலும் நெல் விதைத்து விட்டான். உங்களை ஏமாற்றி நெல்லை வாங்குவித்தால் பேரம்பலம் விதைக்க மாட்டார் என்று நினைத்துத் தான் நாடகமாடியுள்ளான். நீங்கள் அவனது வீட்டுக்குச் சென்று பேரம்பலத்திடம் நெல் வாங்கி விட்டேன். வயலைத் தாருங்கள் என்று கேட்டுப் பாருங்கள். உண்மை விளங்கும்" என்றான்"

“சின்னத்துரை, இராமநாதனின் வீட்டுக்குச் சென்று தான் பேரம்பலத்திடம் விதை நெல் வாங்கியதைக் கூறித் தனக்கு விதைக்க வயல் தரும்படி கேட்டான்”

“நான் முழுவயலையும் விதைத்து விட்டேன். உச்சுவில் குளக்கரையில் உள்ள விதைத்த வயலை நான் உனக்குத் தருகிறேன். நீ பேரம்பலத்திடம் வாங்கிய விதை நெல்லைத் தா. உழவு கூலியையும் விதைப்புச் செலவையும் அறுவடையின் பின் தா. நீ உடனை வீட்டுக்குச் சென்று விதை நெல்லை எடுத்து வா” என்றான் இராமநாதன்.”

“சின்னத்துரைக்கு அப்பொழுது தான் யாவும் விளங்கியது, கடவுள் நல்லவர்கள் துன்பப்பட விடமாட்டார்” என்று நினைத்தவாறு வீட்டுக்குச் சென்று பேரம்பலத்திடம் வாங்கிய விதை நெல்லை எடுத்துக் கொண்டு பேரம்பலத்தின் வீட்டுக்குச் சென்று நடந்தவற்றைக் கூறி மன்னிப்புக் கேட்டு விட்டுத் தான் கொண்டு வந்த விதை நெல்லைப் பேரம்பலத்திடங் கொடுத்தார். அன்பானவர்களே. கொடுத்துப் பழக்கப்பட்டவர்கள் வறுமைப்பட்ட போதும் தன்னை நம்பி வந்து இரப்பவர்களுக்கு இல்லை என்று சொல்ல மாட்டார்கள். இது அவர்களது குணப்பண்பு. எனவே நீங்களும் எப்பொழுதும் மற்றவர்களுக்கு, உதவி செய்து வாழுங்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***கூஉய்கொடுப்பதொன் றில்லெனினும் சார்ந்தார்க்குத்***
***தூஉய்ப் பயின்றாரே துன்பந் துடைக்கிற்பார்;***
***வாய்ப்பத்தான் வாடியக் கண்ணும் பெருங்குதிரை***
***யாப்புள் வேறாகி விடும்.***

நல்ல பண்புகளை உடைய உயர்ந்த குடியில் பிறந்தவர்களது பண்பு, அவர்கள் வறுமையுற்ற காலத்திலும் மாறாது **"வாடியக் கண்ணும் பெருங்குதிரை யாப்புள் வேறாகி விடும்"** என்பது பழமொழி.

25 "அன்பானவர்களே, ஒரு போதும் இரப்பவர்களை வருத்தக் கூடாது. தன்னிடம் வசதியில்லாத விடத்து இல்லை என்று சொல்வது தான் மேலானது. அதை விடுத்துத் தனது கௌரவித்திற்காகப் பொய் கூறுவதோ, ஏமாற்றுவதோ கூடாது. தன் மனம் அறிய ஏமாற்றுபவன் உயர்ந்த தவக்கோலத்தை உடையவனாக இருந்தாலும் அதனால் பயனடைய மாட்டான். உள்ளதை மறைத்து புகழுக்காக வாழ்பவரின் வாழ்வு இன்பத்தைப் போலத் தோன்றினாலும், அது இறுதியில் பல துன்பங்களைக் கொண்டு வரும். உயர்ந்த குடியிற் பிறந்தவர்கள் ஒழுக்கம் மிக்கவர்களாகவும், உண்மை பேசுபவர்களாகவும், தீயவற்றைச் செய்யாதவர்களாகவும் வாழ்வர். இவர்கள் தமது காரியம் பார்ப்பதற்காகப் பிறரை ஏமாற்றமாட்டார்கள். தம்மால் இயலாதவற்றை இயலும் என்று சொல்லி ஏமாற்றவும்

மாட்டார்கள். மிகவும் வறுமைப்பட்ட ஒருவர் தனது துன்பத்தைப் பொறுக்க முடியாது வந்து உதவி கோரினால் உடனே கொடுத்துதவ வேண்டும். இல்லையாயின் இல்லையென்று சொல்லி விடல் வேண்டும். இதை விடுத்து அவருக்கு உதவி செய்வது போல நடித்து முடிவிலே அவருடைய ஆர்வமெல்லாம் கெட்டழியும்படி அவரை ஏமாற்றுவது மிகவும் கொடுமையானது. இது பசுவிற்குப் பச்சைப் புல்லைக் காட்டி அப்புல்லுக்கு ஆசைப்படும் பசுவைப்பிடித்துக் கட்டுவதற்குச் சமமாகும்."

"முல்லை வனத்தில் வாழ்ந்த யானையின் மகளுக்கு அடுத்த காட்டில் மிகவும் செல்வச் செழிப்புடன் வாழ்ந்து வரும் யானையின் மகனை நரி திருமணம் பேசி வந்தது"

"யானையாரே, மாப்பிளை பெரும் வர்த்தகன். கடல் வாணிபம் செய்பவன். ஐந்து சந்ததியினர் எத்தொழிலையும் செய்யாது இருந்த இடத்தில் இருந்து கொண்டே உண்ணக் கூடிய தரத்தில் இருப்பவன். அவர்கள் மதிப்புக்காகச் சீதனம் கேட்கிறார்கள். சீதனம் வேண்டாமென்றால் பெண் பகுதினர் மாப்பிள்ளைக்குக் குறையுள்ளது என்று நினைப்பார்கள். உற்றார், உறவினர்கள் மதிக்கமாட்டார்கள். அதனால் உங்கள் மகளுக்கு கொடுக்கக் கூடியவற்றைக் கொடுங்கள். காசாகப் பத்து இலட்ச ரூபாவை மாப்பிள்ளையின் தாயார் எதிர்பார்க்கிறார். நீங்கள் எனது உற்ற நண்பர் என்பதால் வந்து கேட்கிறேன்" என்றது நரி".

“யானை தனது மாப்பிளையின் குடும்பத்தினரைப் பற்றி விசாரித்துப் பார்த்தது. எல்லோரும் நல்ல இடம் என்றனர். யானையிடம் அவ்வளவு பணம் இருக்கவில்லை. அதனால் அது அக்காட்டின் பெரும் பணக்காரனாகிய குதிரையிடஞ் சென்று பணம் கேட்டது. குதிரை சொன்னது ; “யானையாரே, நீர் மிகவும் நேர்மையானவர். அதனால் நான் பணம் தருகிறேன். நீர் வட்டிப் பணம் தரவேண்டாம். இரண்டு நாட்களின் பின் வாரும்” என்றது”

“மகிழ்வுடனும் நம்பிக்கையுடனும் சென்ற யானை, நரிக்குச் சம்மதம் சொன்னது. மாப்பிள்ளை வீட்டில் திருமண வேலைகள் தடல்புடலாகத் தொடங்கின. யானையும் திருமண அழைப்பதழை அடித்தது”

“இரண்டு தினங்கள் கழிய யானை, குதிரையிடம் வந்த போது குதிரை சொன்னது ; “யானையாரே கையில் இவ்வளவு பணம் இல்லை. எருமை இரண்டு தினங்களில் தருகிறேன் என்று சொல்லிப் பத்து இலட்சம் ரூபா வாங்கியது. அது தந்ததும் தருகிறேன்” என்றது.

“யானை அதை நம்பிச் சென்றது. மேலும் சில தினங்கள் கழிந்தன. நரி யானையிடம் வந்து சொன்னது ; “யானையாரே, திருமணத்திற்கு முன் பணத்தைக் கொடுக்க வேண்டும். மாப்பிள்ளையின் தாய் பணம் வாங்காமல் தாலிகட்ட

விடமாட்டார். எனவே பணத்தைத் தயார் நிலையில் வைத்திரும். குதிரையின் பேச்சில் எனக்கு நம்பிக்கை இல்லை. எதற்கும் எருமையைச் சந்தித்துக் கேளும்” என்று சொல்லி விட்டுப் போனது. இருந்த போதும் யானை நம்பிக்கையை இழக்காது எருமையிடஞ் சென்று கேட்டது; யானையாரே, நான் கடன் வாங்குவதில்லை. குதிரை இப்படிப்பலருக்குச் சொல்லியுள்ளது. அதை நம்பியிருந்தால் நீர் உமது மகளுக்குத் திருமணம் செய்ய முடியாது. குதிரை மிக மோசமானது ; மற்றவர்களை ஏமாற்றுவது பொய்யும் புரட்டும் பேசுவது. அதனால் பணத்தை வேறுயாரிடமாவது மாறும். இல்லாவிட்டால் திருமணம் சில சமயம் தடைப்படலாம்” என்றது”

“யானைக்கு மூச்சு நின்றுவிடும் போல இருந்தத. அது மிகுந்த துக்கத்துடன் சொன்னது ; “எருமையாரே, திருமணத்திற்கு இன்னும் இரண்டு நாட்களே உள்ளன. தற்செயலாக குதிரை பணம் தராவிட்டால் நான் தற்கொலை தான் செய்தல் வேண்டும்” என்று அழுதது”

“யானையைப் பார்க்க எருமைக்குப் பரிதாபமாக இருந்தது. “நண்பா, துயரப்படாதே. நான் உனக்கு உதவி செய்கிறேன். இருப்பினும் நீ போய்க் குதிரையைக் கேள்” என்றது”

"யானை குதிரையின் வீட்டுக்குச் சென்று குதிரையைச் சந்தித்தது. குதிரை சொன்னது ; "மாப்பிள்ளைக்குக் கொடுக்கத் தானே உனக்குப் பணம் தேவை. நான் தருவன். திருமணத்திற்கு இன்னும் இரண்டு நாட்கள் இருக்கிறது தானே. பயப்படாதே.." என்றது"

"யானை குதிரையின் கதையை நம்பியது. இருப்பினும் கை காவலாக எருமையிடம் பணத்தை வாங்கி வைப்போம்" என்று நினைத்தது"

"திருமண நாளன்று குதிரை தான் அயலூருக்குச் சென்று வருவதாகச் சொல்லியனுப்பி விட்டுத் தலைமறைவானது யானை எருமையிடம் வாங்கிய பணத்தைக் கொடுத்துத் தனது மகளுக்குத் திருமணம் செய்து வைத்தது. அன்பானவர்களே, மற்றவர்களை ஏமாற்றாது வாழப் பழகுங்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***ஒற்கப்பட் டாற்றார் உணர உரைத்தபின்,***
***நற்செய்கை செய்வார்போல் காட்டி நசையழுங்க***
***வற்கென்ற செய்கை யதுவால், அவ்வாயுறைப்***
***புற்கழுத்தில் யாத்து விடல்***

பசுவுக்குப் புல்லைக் காட்டி அதை ஏமாற்றிக் கட்டுவது போன்றதே, இரப்போர்க்கு ஆசை காட்டி ஏமாற்றுவது. **"வாயுறைப் புற்கழுத்தில் யாத்து விடல்"** என்பது பழமொழி.

26 “அன்பானவர்களே, வீரர்கள் தம்முயிரைப் போக்கிக் கொள்வார்களே தவிரத் தம் கொள்கைக்கு மாறாக ஒரு போதும் நடக்க மாட்டார்கள் வாழைப்பழம் இனிக்குமே தவிர உப்பு உறைக்க மாட்டாது. அது போல வீரர்கள் அரசனுக்கும் அஞ்சமாட்டார்கள். நீதி எதுவோ அதன் பக்கம் நின்று போராடிச் சாவார்களே தவிர அரசனின் தர்மமில்லாத செயலுக்கு ஒத்துழைப்பு வழங்க மாட்டார்கள்.”

“அரசனின் கோரிக்கை அநீதியானதானால் அதற்கு வீரர்கள் இணங்க மாட்டார்கள். அது வீரர்களின் பண்பு அது.

“முருகவனத்தின் அரசனான யானை ஒரு நாள் சிவன் கோயிலுக்குச் சென்றது. அரசர் வருவார் என்று தெரிந்த காட்டு மிருகங்கள் யாவும் சேர்ந்து சிவன் கோயிலின் முன் பெரியதொரு மேடை அமைத்துக் கலைவிழா ஒன்று வைத்தன. குரங்குகள் மேளம் அடித்தன. மயில்கள் தமது அழகான தோகையை விரித்து ஆடின. குயில்கள் இனிமையாகப் பாடின. கரடிகள் சிலம்பாட்டம் ஆடின. குதிரைகள் அணிவகுத்து நின்றன. யானை மகிழ்வுடன் அவற்றைப் பார்த்துக் கொண்டு வந்தது. நிகழ்ச்சியைப் பார்க்கும் கூட்டத்தில் அழகான ஒரு பெண்யானைக் குட்டி நின்றது. அதைக் கண்ட அரச யானைக்கு அதன்மேல் காதல் உண்டானது. பெண் யானை நடந்து செல்லும் அழகை அரசனான யானை பார்த்து ரசித்தது. அதன் அழகான கண்கள் அரசனின் மனதைக் கவர்ந்தது. நடக்கும் போது நடனம்

ஆடிய அதன் தும்பிக்கையின் அசைவு அதை மெய்மறக்கச் செய்தது"

"மறு நாள் முதல் அமைச்சரை அழைத்து யானை தனது எண்ணத்தை வெளிப்படுத்தியது. அதைக் கேள்விப்பட்ட முதலமைச்சர் சொன்னார்; "அரசே, அந்தப் பெண் யானை பிருந்தாவனத்தில் உள்ள தனது மாமனின் மகனைக் காதலிக்கிறது. அதற்கு மூன்று ஆண் சகோதர்கள் இருக்கிறார்கள். மூவரும் எமது படை வீரர். நாட்டுப் பற்று மிகுந்த அவர்கள் போரில் எதிரிகளைப் பந்தாடுவதில் வல்லவர்கள். அவர்கள் இதை விரும்பமாட்டார்கள். அதனால் அந்த எண்ணத்தைக் கைவிடுவது தான் நல்லது" என்றார்".

"காதல் பித்து தலைக்கேறிய யானை வேறெருவரை அனுப்பிப் பெண் கேட்டது. பெண் யானையின் சகோதரர்கள் அரசனுக்குப் பெண்கொடுக்க மறுத்தனர். அதனால் அரசனான யானை வீரர்களை அழைத்துப் பெண் யானையைப் பிடித்து வரும் படி கூறியது. வீரர்கள் பெண் யானையின் வீட்டுக்கு வந்த போது பெண் யானையின் சகோதரர்கள் மூவரும் அரசனின் வீரர்களடன் போரிட்டனர். பெண் யானையின் சகோதரர்களை எதிர்க முடியாத போர் வீரர்கள் ஓடிச் சென்று விட்டனர். அரசனான யானைக்குக் கடுங்கோபம் வந்தது. சில வீரர்களடன் பெண் யானையின் வீட்டை நோக்கி வந்தது. இதை அறிந்த பெண் யானையின் சகோதரர்கள் மூவரும் தமது தங்கையை அழைத்துக் கொண்டு பிரிந்தாவனத்திற்குச் சென்றன. பின் சில

நாட்கள் செல்லப் பெரும் படையைத் திரட்டி வந்து முருகவனத்தின் அரசனைக் கொன்றன. அன்பானவர்களே, வீரர்கள் யாருக்கும் அஞ்சமாட்டார்கள். அவர்கள் எது நீதியென்று உணர்கிறார்களோ அதையே செய்வார்கள். ஆகவே நீங்களும் வீரர்களாக வாழப்பழகுங்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***இருகயல் உண்கண் இளையவளை வேந்தன்***
***தருகென்றாற் றன்னையரு நேரார் - செருவறைந்து***
***பாழித்தோள் வட்டித்தார் காண்பாம் இனிதல்லால்.***
***வாழைக்காய் உப்புறைத்தல் இல்.***

மன்னனே தம் தங்கையைத் திருமணம் செய்யக் கேட்டாலும், அவள் மறுத்தால் அவளுடைய அண்ணன்மார் போரிட்டு இறக்கவும் துணிவார்களே தவிரப் பணிய மாட்டார்கள். **“வாழைக்காய் உப்புறைத்தல் இல்”** என்பது பழமொழி.

27 “அன்பானவர்களே, நட்பென்பது ஒருவருக்கொருவர் சிரித்து மகிழ்வதற்காகக் கொள்வதன்று. நண்பர்கள் நிலை தவறிச் செல்லும் போது உண்மையை உணர்த்தி அவர்களை நல்வழிப்படுத்தவும், அவர்களுக்குத் துன்பம் வரும் போது அவரை வருந்தவிடாது அவர்படும் துன்பத்தை நீக்குவதற்காவும் பயன்படுவதே நட்பாகும். ஒருவரோடு முகம் மலரப்பழகாது மனமும் மலர்ந்து உள்ளன்போடு பழகுவது தான் உயர்ந்த நட்பு. அப்படியில்லாது அன்பின் மிகுதியால் நன்மை செய்வார் போல நடித்து, துன்பம் வந்த காலத்தில் விலகிச் செல்லும் நண்பர்களின் உறவைக் கைவிட்டு விடுதல் வேண்டும். சிலர்

தமக்குப் பயனுள்ள போது நட்பாக இருப்பார்கள். தமது காரியம் முடிவடைந்ததும் நட்பிலிருந்து நீங்கி விடுவதுமான தகுதியற்றவரின் நட்பு, இருப்பதை விட இல்லாமல் இருப்பதே நன்று. நட்பின் உயர்வை எண்ணாது அந்நட்பால் என்ன நன்மை கிடைக்கும் என்று பயனை எடைபோட்டுப் பார்த்துப் பழகும் நண்பரின் நட்பை விலக்கி விடுதல் வேண்டும்"

"முல்லை வனத்தில் வாழ்ந்த யானை எல்லா மிருகங்களுடனும் மிகவும் அன்பாகப் பழகி வந்தது. அது பெரும் வர்த்தகன். பிறநாடுகளுக்கு உள்ளூரில் உற்பத்தியாகும் தானியங்களைக் கப்பலில் கொண்டு செல்லும். பின் அங்குள்ள பொருட்களை வாங்கி வந்து உள் நாட்டில் மிகவும் மலிவாக விற்பனை செய்யும். அதனால் முல்லை வனத்து அரசரும் பிரதானிகளும் மக்களும் யானையை அன்புடன் நேசித்தனர்"

"யானைக்கு ஓர் அழகான மகள் இருந்தாள். யானை தனது ஒரே மகளை மிகவும் பாசத்துடன் வளர்த்து வந்தது. அதைத் திருமணம் செய்யப் பல பிரமுகர்கள் விரும்பினர். அக்காட்டில் ஒரு குதிரை வாழ்ந்து வந்தது. அது நெடுங்காலமாக யானையுடன் நட்புப் பூண்டிருந்தது. யானை வெளிநாட்டிலிருந்து கொண்டு வரும் பொருட்களில் பெரும் பகுதியைக் குதிரைக்குக் கடனாகக் கொடுக்கும். குதிரை அப்பொருட்களை கலப்படம் செய்தும், விலை கூட்டியும் விற்கும். பின் யானைக்குக் கொடுக்க வேண்டிய பணத்தைப் பகுதி பகுதியாகக் கொடுக்கும்"

குதிரை எப்பொழுதும் யானையைப் புகழும். அத்துடன் யானையுடன் மிகவும் நெருக்கமாகப் பழகும். அதனால் யானை, குதிரையைத் தனது உயிர் நண்பனாக மதித்தது”

“யானையின் மகளுக்கு அயற்காடான நந்தவனத்தில் வாழ்ந்த பெரும் வர்த்தகனின் மகனைத் திருமணம் பேசி முற்றாக்கினர். திருமண நாளும் குறிக்கப்பட்டது. யானை தனது மகளுக்குப் பெருந்தொகைப் பணத்தைச் சீதனமாகக் கொடுப்பதாகக் கூறியது. எனினும் மணமகனின் தந்தை சீதனம் பெறுவதில் பெரும் அக்கறை காட்டவில்லை. இருப்பினும் திருமணத்திற்கு முன் தான் கொடுப்பதாகக் கூறிய பணம் முழுவதையும் யானை கொடுக்கத் தீர்மானித்தது.”

“அன்று பொருட்களை ஏற்றிக் கொண்டு கடலிற் சென்ற யானையின் கப்லைக் காணவில்லை. காற்றுக்குத் திசை மாறிச் சென்று விட்டது என்றும், மூழ்கி விட்டது என்றும் பரவலாகப் பேசப்பட்டது. யானையிடம் அப்பொழுது பணம் இருக்கவில்லை. முழுப்பணத்தையும் அது வாணிபத்தில் ஈடுபடுத்தியிருந்தது. கப்பல் திருமண நாளிற்கு முன் வந்து விடுமென யானை எதிர்பார்த்தது. திருமண நாளுக்கு முன் பணத்தைக் கொடுத்து விட வேண்டும் என்பதற்காக யானை குதிரையிடஞ் சென்று கடனாகப் பணம் கேட்டது. தனது உயிர் நண்பனான குதிரை தனது கப்பல் தொலைந்ததைக் கேள்விப்பட்டதும் வந்து பணம்

தேவையா எனக் கேட்கும் என யானை எதிர்பார்த்தது. குதிரை வராததால் தான் அது குதிரையின் வீட்டுக்குச் சென்றது”

“குதிரை சொன்னது ; “நண்பா, என்னிடமிருந்த பணத்தை நான் வியாபாரத்தில் முதலீடு செய்து விட்டேன். உனக்கு நான் பொருட்கள் வாங்கிய வகையில் பணம் தரல் வேண்டும். கொஞ்ச நாட்கள் பொறுத்துக் கொள்” என்றது”

“யானை துயரத்துடன் வீட்டுக்கு வந்த போது அங்கே அதன் இன்னொரு நண்பனான கரடி இருந்தது ; “நண்பா, உனது விஷயம் கேள்விப்பட்டேன். உனது மகளின் திருமணத்திற்காக நான் தேவையான அளவு பணம் கொண்டு வந்துள்ளேன்” என்று கூறிக்க கரடி பணத்தைக் கொடுத்தது”

“திருமண நாளன்று மணமகளின் தந்தை சொன்னார் ; “ சம்மந்தி உங்களது கப்பல் தொலைந்த நிலையில் நான் உங்களிடம் பணம் பெறுவது சரியல்ல. பணம் எமக்குத் தேவையில்லை. பணம் தரவேண்டுமென்று விரும்பினால் பணம் வந்த பின் தாருங்கள்” என்றது”.

“யானைக்கு மிகவும் சந்தோசமாக இருந்தது. நன்மை செய்வர்களுக்கு எப்போதும் கடவுள் உதவி செய்வார் என்று யானை நினைத்தது. கப்பல் எந்தவிதமான சேதங்களுமின்றி வந்து சேர்ந்தது. அக்கப்பலில் வந்த பொருட்களை யானை

கரடிக்கு கொடுத்தது. ஆகையால் அன்பானவர்களே, நல்லவர்களைக் கடவுள் ஒரு போதும் கைவிடமாட்டார். ஒருவரை நுணுக்கமாக ஆராய்ந்து பாராமல் அவரின் வெளித்தோற்றத்தை நம்பி நட்புக் கொள்ளக் கூடாது” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***கண்டறியார் போல்வர் கெழீஇயின்மை செய்வாரைப்***
***பண்டறிவார் போலாது தாமும் அவரேபோல்***
***விண்டொரீஇ மாற்றி விடுதல், அதுவன்றோ***
***விண்டற்கு விண்டல் மருந்து.***

நண்பராகப் பல நாட்கள் பழகியும் கூட, ஆபத்து வந்த போது உதவாதவரின் நட்பைக் கைவிடுவதே சிறப்பானது “**விண்டற்கு விண்டல் மருந்து**” என்பது பழமொழி.

**28** “அன்பானவர்களே, பலரும் கேட்டு வெறுக்கத்தக்க சொற்களை ஒருவன் மறந்துங் கூடப் பேசக்கூடாது. அப்படிப் பேசினால் அவன் எல்லோருடைய ஏளனத்திற்கும் ஆளாவான். ஒருவன் தீய செயல்களைச் செய்வதை விட மற்றவர்கள் மீது பொறாமைப்பட்டு அவர்களைப் பழித்துப் பேசுவது தீயது. பிறரைப் பற்றிக் காரணமின்றிக் குறைகூறுவது அறமில்லாதவர்களது செயலாகும். இவ்வகையான சொற்களைப் பண்பில்லாமல் பலரிடம் பேசுவது என்றும் தீமையையே தரும். அதனால் பேசுவபனுக்குக் கேடு உண்டாகும். ஒருவர் அறமில்லாது நடந்தாலும், அவரை அன்பான வார்த்தைகளைக் கூறி அரவணைத்துத் திருத்த வேண்டுமே தவிரக் கண்டிக்கவோ தண்டனை கொடுக்கவோ முயலக்கூடாது. ஏனென்றால்

பயனில்லாத சொற்களைப் பேசுபவர் தான் பேசும் சொற்களாலேயே தண்டிக்கப்படுவார்"

"முல்லை வனத்தில் வாழ்ந்த குதிரை ஒன்று அக்காட்டில் வாழும் எல்லா மிருகங்களின் மீதும் அளவில்லாத அன்பு கொண்டிருந்தது. சிறப்புக்கள் பலவற்றைத் தருகின்ற பெருஞ் செல்வத்தைப் பெறுவதாயிருந்தாலும் கூட அது பிற மிருகங்களுக்குத் துன்பம் செய்யாது. பிற மிருகங்கள் பொறமைப் பட்டு பெருந் துன்பங்கள் செய்தாலும் அது தனக்குத் துன்பஞ் செய்யும் மிருகங்களுக்குத் துன்பம் செய்யாது. அவற்றிற்கு உதவிகள் பலவும் செய்யும்"

"வானத்திலே செல்லும் சூரியனைக் கைகளால் மறைப்பவர் யாரும் இல்லை. அது போலப் பெரும் செல்வச் சிறப்பும் ஆற்றலும் உடையவரின் மேற் பொறாமை கொண்டு அவர் மேற் பல பழிகளைச் சுமத்தி அவரது புகழ் வெளிப்படாதவாறு செய்யும் வல்லமை யாருக்கும் இல்லை"

"குதிரையின் மீது காரணமின்றி எருமை பொறாமைப்பட்டது. காட்டிலுள்ள மிருகங்கள் யாவும் குதிரையைப் பற்றியே எவ்வேளையிலும் பேசும். குதிரையின் கொடைச் சிறப்பையும், அதன் குணவியல்புகளையும் பாராட்டும்"

“அன்று குதிரையின் பிறந்த நாள். காட்டில் உள்ள மிருகங்கள் யாவும் பரிசுப் பொருட்களுடன் குதிரையின் வீட்டிற்கு வந்தன. எருமை எதுவும் கொண்டு வராமல் வந்தது. யானை பெரியதொரு பெட்டியில் பரிசுப் பொருட்களை அடுக்கி வைத்துச் சுமக்க முடியாமல் கஷ்டப்பட்டுச் சுமந்து வந்தது. அதைக் கண்ட எருமை சொன்னது ; “எல்லோரிடமும் பரிசுப் பொருட்கள் வாங்குவதற்காகத் தான் குதிரை நல்லவன் போலவும், பெரும் கொடையாளி போலவும் நடிக்கிறது. எல்லோருக்கும் அள்ளியள்ளிக் கொடுக்கும் குதிரை, தனது சகோரனுக்கு எதுவும் கொடுப்பதில்லை. அவன் சாப்பாட்டுக்கே கஷ்டப்படுகிறான். அத்துடன் அவனது மகள் வயது வந்தும் பொருளில்லாமையால் திருமணம் செய்யாதிருக்கிறாள். பேருக்கும் புகழுக்கும் கொடுக்கும் குதிரை இன்று அவற்றைத் திரும்பப் பெறவே தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறது” என்றது”

“யானை எதுவும் பேசவில்லை. அறிவில்லாத தீயவர்களுடன் பேசுவது தீமையைத் தரும்” என்று நினைத்தது”

“பயனில்லாத தீயசொற்களைப் பொறாமையால் பேசும் உன்னை எனக்குப் பிடிக்கவில்லை” என்றது முயல்”

“அறிவுள்ளவர்கள் தீயசெயல்களைச் சில சமயம் செய்தாலும், பயனில்லாத தீய சொற்களைப் பேச மாட்டார்கள். நீ

அறமில்லாது பேசும் பேச்சைக் கேட்டாலே பாவம் உண்டாகும்” என்றது பன்றி”

“ஐயா, எமக்கு உங்களின் அறிவுரை தேவையில்லை. தயவு செய்து எம்மை விட்டு விலகிச் செல்லுங்கள். தீய சொற்களைக் கேட்பதும் பாவம்” என்றது மான்”

“இனி குதிரையைப் பற்றி ஏதாவது கதைத்தாயானால் உன்னைத் தூக்கி வீசுவேன்” என்று கோபமாகச் சொன்னது யானை” அதன் பின் எருமை எதுவும் பேசவில்லை”

“எல்லா மிருகங்களும் பரிசுப் பொருட்களுடன் குதிரையின் வீட்டிற் கூடி நின்றன. அப்போது குதிரை சொன்னது; “நண்பர்களே இன்று எனது பிறந்த நாள். அது தெரிந்தால் நீங்கள் பரிசுப் பொருட்களுடன் வந்து விடுவீர்கள் என்று தெரிந்து அதை மறைத்தேன். அதை எப்படியோ யானை தெரிந்து கொண்டது. நீங்கள் எல்லோரும் எனக்குப் பெரும் கஷ்டத்தைக் கொடுத்துள்ளீர்கள். நான் எல்லோருக்கும் பிரதியுபகாரத்தை எதிர்பாராது தான் உதவி வருகிறேன். அந்த வகையில் எனது குணத்தை அறிந்து வெறுங்கையுடன் வந்த நண்பன் எருமையையே எனக்குப் பிடித்தது. அவரைப் போல நீங்களம் வந்திருந்தால் மகிழ்ச்சியடைவேன். இன்று எனது பிறந்த நாள்ப் பரிசாக உங்கள் எல்லோருக்கும் தங்க மோதிரம் ஒன்று பரிசளிக்க விரும்புகிறேன்” என்றது”

“ஐயா, நம்மிற் பலர் ஓர் உதவியும் தங்களுக்குச் செய்யாத போதும், தாங்கள் எமது தேவையை உணர்ந்து எமக்குப் பல உதவிகள் செய்தீர்கள். அதை நாம் உயிருள்ள வரை மறக்க மாட்டோம்” என்றது யானை”

“ஐயா, தேவைப்படும் காலத்தில் ஒருவர் செய்த உதவிக்கு நிகர் எதுவுமில்லை. எனது மகன் மருத்துவக் கல்லூரிக்குத் தெரிவான போது நீங்கள் செய்த பண உதவி அளப்பரியது” என்று கண்கலங்கியது மான்”

“இவ்வாறு ஒவ்வொரு மிருகங்களும் குதிரையைப் புகழ்ந்தன. எருமைக்கு வெட்கமாக இருந்தது. எனினும் குதிரை கொடுத்த தங்க மோதிரத்தை வாங்கிக் கொண்டு எதுவும் பேசாது சென்றது. ஆகையால் அன்பானவர்களே, நற்குணம் மிகுந்த பெரியவர்கள் மீது பொறாமை கொண்டு கண்டபடி பேசாதீர்கள். அப்படியானவர்கள் பேசும் பேச்சை யாரும் கேட்க மாட்டார்கள். அது பேசுவோருக்கே அவமானத்தைக் கொடுக்கும்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***பரந்த திறலாரைப் பாசிமேல் இட்டுக்***
***கரந்து மறைக்கலும் ஆமோ? – நிரத்தெழுந்து***
***வேயிற் றிரண்டதோள் வேற்கண்ணாய்! விண்ணியங்கும்***
***ஞாயிற்றைக் கைம்மறைப்பார் இல்.***

புகழுடையவர்களைப் பழித்துப் பேசும் தீயவர்களை மக்கள் மதிக்க மாட்டார்கள். **“விண்ணியங்கும் ஞாயிற்றைக் கைம்மறைப்பார் இல்”** என்பது பழமொழி.

29 “அன்பானவர்களே, நாணம் இல்லாவிட்டால் பெண்மை சிறப்படைய மாட்டாது. சுவை மிகுந்த சத்தான உணவை உண்ணா விட்டால் உயிர் வாழ்க்கை நிலைக்காது. அது போல கைப்பொருள் இல்லாமல் செயல்கள் முடிவுறாது. நல்ல வித்தை விதைக்கா விட்டால் பெரும் விளைச்சல் உண்டாக மாட்டாது. இந்த வகையிற் பார்க்கும் போது கையில் முதலில்லாதவன் செய்யும் தொழில் போதிய இலாபத்தைத் தராது. ஒரு பொருளாய் மதிக்கத்தகாதவரையும் மதிப்பு மிக்கவராகச் செய்யும் தன்மை செல்வத்திற்கு மட்டுமே உண்டு. எல்ல நன்மைகளும் இருப்பவராக இருந்தாலும் பொருள் இல்லாதவர் மதிக்கப்பட மாட்டார். எந்த நன்மையும் அற்றவர்களாக இருந்தாலும் பொருள் உடையவர்கள் மதிக்கப்படுவார்கள். ஒரு முயற்சியை ஆரம்பிப்பவனுக்கு முதல் வேண்டும். முதலில்லாத தொழிலறிவால் பயனில்லை”

“முல்லை வனம் என்ற காட்டில் வாழ்ந்த மான் பெரும் வணிகனான யானையிடம் விற்பனை உதவியாளராகப் பணி புரிந்தது. மானின் நடத்தை, குணவியல்புகள், அறிவு யாவும் வியாபாரத்தை அதிகரிக்கப் பண்ணின. யானை, எந்தவொரு

செயலைச் செய்தாலும் மானிடம் ஆலோசனைகளப் பெற்ற பின்பே செய்யும். மான் கூறும் ஆலோசனைப் படி யானை நடந்ததால் யானைக்குப் பெரும் இலாபம் உண்டாகும். ஆனால் யானை மானுக்குச் சம்பளத்தைக் கூட்டிக் கொடுக்காது. யானையிடம் நூற்றுக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்து வந்தனர். மானுக்கு மட்டும் சம்பளத்தைக் கூட்டிக் கொடுத்தால் தன்னிடம் வேலை செய்யும் தொழிலாளர்கள் அனைவரும் ஊதிய உயர்வுப் போராட்டம் நடத்துவர் என்று மானுக்கு அடிக்கடி யானை சொல்லும்"

"மானின் சகோரனும் யானையிடம் வேலை செய்தான். அவன் தனது சகோரனின் அறிவால் தான் யானை அதிகமாகச் சம்பாதிக்கிறது என்று நினைத்துச் சொன்னான்; "அண்ணா, உனது அறிவுத் திறமையால் தான் யானை பெரும் இலாபம் சம்பாதிக்கிறது. அதற்காக உனக்கு அது சம்பளத்தைக் கூட்டிக் கூடத் தருவதில்லை. அதனால் நீ தனியே வர்த்தகம் செய்வாயேயானால் கூடியகெதியில் பணக்காரனாகி விடுவாய்" என்றது"

"உண்மை தான் தம்பி. வர்த்தகம் செய்யப் பெருந்தொகையான பணம் தேவை. பணமில்லா விட்டால் முதலீடுகளைச் செய்ய முடியாது. முதலீடு இல்லா விட்டால் இலாபம் கிடைக்காது. யானையிடம் ஏராளமான பணம் இருக்கிறது. அதனால் தான் அது பெரும் இலாபம் பெறுகிறது.

அறிவும் ஆலோசனையுடன் முதலும் இருந்தால் தான் இலாபம் பெறலாம்" என்றது மான்"

"அண்ணா, அறிவையும் ஆலோசனையையும் கடன் வாங்க முடியாது. ஆனால் பணத்தைக் கடன் வாங்கலாம். எமது காட்டில் வசிக்கும் குதிரை வட்டிக்குப் பணம் கொடுக்கிறது. அதனிடம் பணத்தைப் பெற்று சிறுவியாபாரமாகத் தொடங்கிப் பின் பெருப்பிக்கலாம்" என்றது"

"அதன்படி மான் குதிரையிடம் பெருந்தொகையாகப் பணத்தைப் பெற்று வர்த்தக நிலையமொன்றை ஆரம்பித்தது. சில வருடங்களின் பின் மானின் வர்த்தக நிலையம் பெரும் இலாபத்தைக் கொடுத்தது. மான் குதிரையிடம் வாங்கிய பணத்தையும் அதற்கான வட்டிக் காசையும் கொடுத்தது. குதிரை வட்டிப் பணத்தை வாங்கிக் கொண்டு தனது பணத்தை முதலீடு செய்யுமாறு கூறியது. மான் அதற்குச் சம்மதித்தது. மேலும் சில வருடங்களில் மான் பெரும் வர்த்தகனானது. ஆகவே அன்பானவர்களே, முதலுள்ளவனுக்கு ஆதாயம் பெருகும் என்பதை நினைவில் வைத்துச் செயற்படுங்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***நாணின்றி ஆகாது பெண்மை; நயமிகு***
***ஊணின்றி ஆகாது உயிர்வாழ்க்கை – பேணுங்கால்***
***கைத்தின்றி ஆகாத் கருமங்கள்; காரிகையாய்!***
***வித்தின்றிச் சம்பிரதம் இல்!***

முதலில்லாதவன் செய்யும் தொழில் விருத்தியாக மாட்டாது. **“வித்தின்றிச் சம்பிரதம் இல்”** என்பது பழமொழி.

30

“அன்பானவர்களே, உயிருக்குரியராகப் பழகுகின்ற நண்பனுக்கோ அல்லது அன்புடன் நேசிக்கும் உறவினர்களுக்கோ, ஒரு செயலைப் பற்றிச் சொல்வதானால் மிகவும் அவதானமாகவும், அவரின் மனம் நோகாமலும், அவர் உணர்ச்சி வசப்பட்டுச் சொல்லத்தகாத வார்த்தைகளைச் சொல்லாதிருக்குமாறும் சொல்லல் வேண்டும்”

“ஒரு செயலைச் சொல்லுமுன் அதனால் வரப்போகும் நன்மை, தீமைகளை நன்கு ஆராய வேண்டும். நன்கு பழகுபவரானாலும் சில சமயம் சொல்லும் சொற்களால் அவர் உணர்ச்சி வசப்பட்டுத் தன்னை மறக்கவும் கூடும். அதனால் தீய விளைவுகள் வரும். அதை எதிர்பார்த்தே கூறவிரும்புவதைக் கூறுதல் வேண்டும். சொல்ல நினைப்பவற்றைப் பக்குவமாகக் காலத்தையும் இடத்தையும் அறிந்தே சொல்லுதல் வேண்டும். அறிவுடையவர்கள் எந்த விடயத்தையும் அவசரப்பட்டு முடிவெடுக்க மாட்டார்கள். தான் அறிந்தது உண்மையா என ஒரு முறைக்குப் பலமுறை ஆராய்ந்து அறிந்த பின்பே சொல்ல முற்படுவார்கள்”

“யானைக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. அதன் உயிர் நண்பனான குதிரையின் மகள் அக்காட்டில் ஒழுக்கமில்லாது வாழும் குதிரையொன்றைக் காதலித்து வருகிறாள். அதை விட அவர்கள் இருவரும் தனிமையில் சந்திக்கின்றனர். அவள் காதலிக்கும் குதிரை தீய செயல்கள் அனைத்தையும் தயக்கமின்றிச் செய்வது. பல பெண் குதிரைகளுடன் தொடர்புடையது. ஆனால் யானையின் நண்பனான குதிரை ஒழுக்கத்தை உயிரிலும் மேலாகக் கருதுவது யானை குளித்து விட்டு வரும் போது இருவரும் ஒரு பாழடைந்த மண்டபத்துள் நுழைந்தனர். யானை சந்தேகத்துடன் அவர்கள் செல்வதைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது யானையின் நண்பனான கிளி பறந்து வந்து யானையின் முதுகில் அமர்ந்திருந்து சொன்னது ; “நண்பரே, உமது நண்பரின் பெண் அந்தத் தீயவனுடன் நெருங்கிப் பழகுவதை நான் பலமுறை கண்டுள்ளேன். அதை எப்படி உங்களுக்கோ அல்லது குதிரைக்கோ சொல்வது என்று பயப்பட்டேன். இன்று நீர் கண்டுவிட்டீர். அதனால் பயமில்லாமற் சொல்கிறேன். அவன் தீயவன். பாவம் உமது நண்பர் இதைக் கேள்விப்பட்டால் துடிதுடித்துப் போவார். மிகவும் பக்குவமாகக் காலமறிந்து விரைந்து சொல்லுங்கள்” என்று கூறிவிட்டுக் கிளி பறந்து சென்றது”

“யானைக்கு யோசனையாக இருந்தது. மிகுந்த மனவருத்தத்துடன் யானை குதிரையின் வீட்டுக்குச் சென்றது.

குதிரை, யானையை அன்புடன் வரவேற்றது. அதன் மனைவி பெரிய ஒரு பலாப்பழத்தைக் கொண்டு வந்து கொடுத்து விட்டு ; "இது எமது பலாமரத்தில் காய்த்த இனிமையான பழம். உண்ணுங்கள்" என்றது".

"யானை எதுவும் பேசாமல் குதிரை கொடுத்த பலாப்பழத்தை உண்டது. அப்பழம் இனிக்கவில்லை. இருப்பினும் நல்ல இனிமையான பழம் என்றது"

"நண்பா, என்னைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்" என்று கேட்டது யானை"

"குதிரை எதுவும் புரியாது யானையைப் பார்த்தது. பின் ; "பல வருடகாலமாகப் பழகும் நீ இன்று இப்படிக் கேட்பது எனக்குத் துக்கத்தை உண்டாக்குகிறது" என்றது குதிரை"

"நான் உன்னை உயிரிலும் மேலாக நேசிக்கின்றேன். உனது பிள்ளைகளை எனது பிள்ளைகளாகவே நான் கருதி வாழ்கிறேன்..." என்று யானை பேசிக் கொண்டிருக்கும் போது குதிரை குறுக்கிட்டுச் சொன்னது ; "இதை ஏன் சொல்கிறாய்? நீ என் மீதும் நான் உன்மீதும் உயிரையே வைத்திருக்கிறோம். எனது நம்பிக்கைக்குரியவன் நீ. ஆகையால் புதிர்பேசுவதை விட்டு விட்டுச் சொல்ல நினைப்பதைச் சொல்" என்றது"

“யானை சிறிது நேரம் யோசித்து விட்டுச் சொன்னது ; “நண்பா, உனது மகள் காட்டில் உள்ள ஒரு தீயவனுடன் பழகுகிறாள். அதனால் எனக்கும் மானக்கேடு. அதை விடத் தாங்க முடியாத துக்கம்…” யானை விம்மி விம்மி அழுதது”

“குதிரை அதை எதிர்பார்க்கவில்லை. எனினும் குதிரை யானை சொன்னதை முழுமையாக நம்பியது ; “ நண்பா, நீ உத்தமன்; உயர்ந்தவன்; நம்பிக்கைக்கு உரியவன். அதனால் தான் என்னிடம் பக்குவமாகச் சொன்னாய். வேறு யாரென்றாலும் இப்படிச் சொல்ல மாட்டார்கள்” என்று அழுதது குதிரை”

‘நண்பா உனது மகளை முல்லை வனத்தில் இருக்கும் எனத சகோரனின் வீட்டில் கொண்டு சென்று விடுவோம். அங்கு வேறு வனத்தைச் சேர்ந்த மிருகங்கள் செல்ல முடியாது. குதிரை சென்றால் அங்கு காவல் காக்கும் வீரர்கள் அதைப் பிடித்துச் சிறையில் அடைத்து விடுவார்கள். பயப்படாதே. நான் உனக்கு என்னாலான உதவிகள் அனைத்தும் செய்வேன்’ என்றது யானை. குதிரை உணர்ச்சி வசப்பட்டுப் பேசமுடியாது தவித்தது. ஆகையால் அன்பானவர்களே, எந்த ஒரு விடயத்தையும் காலமறிந்து சொல்ல நினைப்பவரின் மனதை அறிந்தே சொல்லுதல் வேண்டும்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***புரையக் கலந்தவர் கண்ணும் கருமம்***
***உரையின் வழுவா துவப்பவே கொள்க;***
***வரையக நாட! விரையிற் கருமம்***
***சிதையும்; இடராய் விடும்.***

உயிர் நண்பராக இருந்தாலும் கூட ஒரு காரியத்தை ஆற அமர இருந்து ஆலோசித்து அவரின் மனநிலையை அறிந்து பக்குவமாக எடுத்துச் சொல்லல் வேண்டும்” **“விரையிற் கருமம் சிதையும்”** என்பது பழமொழி.

**31** “அன்பானவர்களே, பெருமைக்குரிய குணம் கொண்டவர்கள் தீயவர்களைக் கண்டால் அஞ்சுவார்கள். இழிகுணங் கொண்ட தீயவர்கள். தீயவர்களையே தமது சுற்றமாக்கிக் கொள்வார்கள். மனதின் தூய்மையும், செயலின் தூய்மையும் ஒருவன் சேர்ந்த இனத்தின் தூய்மையைப் பொறுத்தே அமையும் என்று தெரிந்து கொண்ட பெரியவர்கள், தீயவர்களின் முன்னாலேயே வெறுப்பின்றி தம் கருத்தைக் கூறிச் சென்று விடுவார்கள். இது வில்லின் மேல் இருக்காமல் பறந்து போகும் காக்கையின் அறிவுள்ள செயலுக்கு ஒப்பானதாகும். வில்லின் மேல் இருந்தால் அதன் நாண் அறும் போது காக்கை உயிரிழக்கவும் கூடும். தீயவர்கள் எதைச் சொன்னாலும் அதைக் கவனத்திலெடுக்காது பெரியவர்கள் சென்று விடுவார்கள்”

“நந்தவனம் என்ற காட்டிலே ஒரு நரி வாழ்ந்து வந்தது. அது தீய மிருகங்களோடு சேர்ந்து தீய செயல்கள் பலவற்றையும் செய்யும். மற்றைய மிருகங்களைக் கேலி செய்யும். இதனால் நல்ல மிருகங்கள் நரியைக் கண்டதும் விலகிச் செல்லும். அப்போது நரி அவற்றைக் கேலி செய்யும். நரி சம்பந்தப்பட்டவர்

இல்லாதவிடத்து அவர்களைக் கேலி செய்யும். அவர்களைக் கண்டால் புகழ்ந்து பேசும்"

"ஒரு நாள் யானை ஒன்று அருவியில் நீராடி விட்டுச் சிவனுக்குப் பூப்பறித்து கூடையில் இட்டுக் கொண்டு வந்து பெரியதொரு ஆலமர நிழலில் இருந்து மாலை கட்டிக் கொண்டிருந்தது. அப்போது அவ்வழியால் வந்த நரி யானைக்கு அருகே வந்து அமர்ந்து; " நண்பரே, நான் உம்மோடு சேர்ந்து மாலை கட்டுகிறேன்" என்றது"

"யானை அதை விரும்பவில்லை; "நீ வேண்டுமானால் பூப்பறித்து வந்து மாலை கட்டு. நான் பறித்து வந்த பூக்களைத் தொடாதே" என்றது"

"ஏன் நான் சாதியில் குறைந்தவன். மாமிசம் உண்பவன் என்பதாலா பூக்களைத் தொடவேண்டாம் என்கிறாய்' என்று கேட்டது நரி"

"அப்படி நான் நினைக்கவில்லை. நான் விரதமிருந்து நேர்த்திக்காகக் கட்டுகிறேன். அதற்கு இன்னொருவர் உதவக் கூடாது. வேண்டுமானால் நீ நாளைக்கு வந்து உதவி செய்" என்றது யானை"

“யானையின் பேச்சுக்கு எதிர்ப்பேச்சுப் பேச நரியால் முடியவில்லை. நரி தேவையில்லாத வார்த்தைகளைப் பேசி மற்றைய மிருகங்களைச் சண்டைக்கு இழுக்கும். அச்சண்டையின் போது பேசக் கூடாத வார்த்தைகளையெல்லாம் நரி பேசும். நரியைப் போன்ற தீயவர்கள் மிகவும் மோசமான வார்த்தைகளால் திட்டுவர். பல சமயங்களில் வாய்ச் சண்டை முற்றிக் கைலப்பாகும். அது பின் சிங்கத்திடம் முறையீடு செய்யப்படும். சிங்கத்திற்கு நரி நல்ல நண்பன். அதனால் சிங்கம் எப்போதும் நரியின் பக்கமே சார்ந்து நின்று தீர்ப்புக் கூறும். அதை அறியாத மிருகங்கள் நரியுடன் சண்டைக்குப் போய்ப் பிரச்சினைப்படும். அதனால் பல வருட காலம் நீதி மன்றத்திற்குச் சென்று பெருந்தொகைப் பணத்தைச் செலவு செய்யும். இதை அறிந்த யானை புத்திசாதுரியமாகப் பேசி நரியை அனுப்பியது. அதனால் அன்பானவர்களே, அறிவுள்ள பெரியவர்களைப் போல ஒரு போதும் தீயவர்களின் பசப்பு வார்த்தைகளுக்கு மதிப்பளிக்காமல், அவர்களின் தொடர்பைத் தந்திரமாக அறுத்து விடுங்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***தீப்பால் வினையினைத் தீரவும் அஞ்சாராய்க்***
*காப்பாரே போன்றுரைத்த பொய்குறளை – ஏய்ப்பார்முன்*
***சொல்லோ டொருப்படார் சோர்வின்றி மாறுபவே***
***வில்லொடு காக்கையே போன்று.***

தீயவர்களின் பசப்புவார்த்தைகளுக்குப் பெரியவர்கள் செவி சாய்க்காது அவர்களின் தொர்பை அறுத்து விடுவர். “**வில்லோடு காக்கையே போன்று”** என்பது பழமொழி.

32 “அன்பானவர்களே, நன்கு பழகிய நண்பர் ஒருவர் உரிமையோடு கூறும் வார்த்தைகளைக் கேவலமாக எண்ணுவது பேதைமையாகும். பேதைமை என்பது கெட்டதைப் பிடித்து வைத்துக் கொண்டு நல்லவற்றைக் கைவிட்டு விடுவதாகும். நட்புக்கு உறுப்பாவது நண்பர்கள் உரிமையோடு செய்யும் செயல்களைத் தாம் செய்ததாகக் கருதி ஏற்றுக் கொள்வது. அது அறிஞர்களின் செயல். உரிமையுடன் பழகுபவர்கள் கண்டிப்பார்கள். நண்பன் ஏற்றுக் கொள்வான் என்று நினைத்து விளையாட்டாகக் கேலியும் செய்வார்கள். அவை பிடிக்காவிட்டாலும் அதை ஏற்றுக் கொள்ளல் வேண்டும். பெரும் துன்பத்தைத் தருகின்ற செயல்களை நண்பர்கள் செய்தால் அதற்கு அறியாமை மட்டும் காரணமன்று, தம்மிடம் அவருக்குள்ள உரிமையும் காரணம் என்று எண்ண வேண்டுமே தவிரப் பகைத்தல் கூடாது. அப்படிப் பகைத்து அவரின் தொடர்பைக் கைவிட்டு விடுவது தவறு. அப்படிச் செய்வது எலி எரியும் விளக்கின் திரியைக் கொண்டு கூரையில் ஏற, அதன் காரணமாக அவ்வீடே தீப்பற்றி எரிந்து எலியும் அழிவதை ஒக்கும்”

“முல்லை வனம் என்ற காட்டில் வாழ்ந்த மானும் எருமையும் உயிர் நண்பர்களாக வாழ்ந்து வந்தன. எருமை மானுடன் கலந்தாலோசிக்காமல் எந்தக் கருமத்தையும் செய்யாது. அத்துடன் எருமை புதிதாக எப்பொருளைக் கண்டாலும் அதைத் தனக்கும் தனது குடும்பத்தினருக்கும்

வாங்கும். அது போல மானின் குடும்பத்தினருக்கும் வாங்கும். மானின் மகளுக்குத் திருமண வயது வந்து திருமணப் பேச்சு நடைபெற்றது. எருமை தனக்கு நன்கு தெரிந்த மானின் மகனுக்குத் தனது உயிர் நண்பனான மானின் மகளைப் பற்றிக் கூறித் திருமண ஏற்பாட்டைச் செய்து விட்டு மானிடம் வந்து கூறியது. அதை மான் ஏற்றுக் கொள்ளவில்லை. பின் சில வருடங்கள் கழிந்தும் மானின் மகளுக்குத் திருமணம் முடியவில்லை. அதனால் அது மானைக் கேட்காது இன்னோர் இடத்தில் திருமணம் பேசி மானின் மனைவியின் உதவியோடு திருமணம் செய்து வைத்தது. அதனால் மான் எருமையோடு சிலகாலம் கோபித்துக் கதைக்காமல் இருந்தது. எனினும் எருமை வழமை போல மானின் வீட்டுக்கு வந்து போனது. மானின் மனைவியும் பிள்ளைகளும் எருமை மீது அளவில்லாத பற்று வைத்திருந்தனர். எருமை தேர்ந்தெடுத்த மாப்பிளை பெருந்தனவந்தனின் மகன். அதனால் மானின் மகள் மிகவும் வசதியாக வாழ்ந்தது”

“அன்று எருமை மானின் வீட்டுக்கு வந்த போது மான் எருமையைக் கண்டு கொள்ளதது போல இருந்தது. அதனால் எருமை சொன்னது ; “மகள் நல்ல வசதியாக இருக்கிறாள் என்ற பெருமையில் இப்ப என்னை மறந்து விட்டாய்”

“பொல்லாத மருமகன். கலியாணம் செய்தவர்கள் உழைத்து முன்னேறத்தானே வேண்டும்” என்றது மான்”

“நீ கலியாணம் செய்து என்ன முன்னேற்றத்தைக் கண்டனீ. ஐந்து குட்டிகளை ஈன்றது தான் மிச்சம்” என்று சிரித்தது எருமை”

“மானுக்குப் பெருங்கோபம் வந்தது. அதனால் அது சொன்னது; “உனது மாப்பிளை சம்பாதிக்கவில்லை. தகப்பனாரின் சொத்தில் வாழ்கிறார். அதற்கு மதிப்பு மரியாதை கொடுக்க வேணுமோ…? நீ வருவதால் எனது குடும்பத்தினர் என்னை மதிக்கிறார்களில்லை. இனிமேல் நீ இங்கு வரவேண்டாம்” என்று கோபித்தது மான்”

“எருமை சிரித்துக் கொண்டு சொன்னது; “ நான் விளையாட்டாகத் தான் சொன்னேன். அதற்கேன் கோபிக்கிறாய்? என்னுடன் முப்பது வருடமாகப் பழகும் உனக்கு என்னைப் பற்றித் தெரியாதா?” என்றது”

“மான் எருமையின் சொல்லைக் கேட்காது “ நீ இங்கு வந்தால் நான் வீட்டை விட்டுப் போகிறேன்” என்றது”

“அதன் பின் எருமை மானின் வீட்டுக்கு வருவதில்லை.அதை அறிந்த மானின் மாப்பிள்ளை தனது மனைவியைத்தாய் வீட்டில் விட்டு விட்டுத் தனது வீட்டுக்குச் சென்று விட்டது”

“இதனால் கவலைப்பட்ட மானின் தாயும் சகோதரர்களும் மாப்பிள்ளையின் வீட்டுக்குச் சென்று சமாதானம் பேசினர். மாப்பிள்ளை சொன்னது. “எருமை மாமாபற்றி மான் மாமா பேசிய தவறான பேச்சுக்கு மன்னிப்புக் கேட்டால் தான் நான்கு மனைவியுடன் சேருவேன். இல்லா விட்டால் நான் சேர மாட்டேன் என்றது. மான் தான் தவறு செய்யவில்லை. அதனால் மன்னிப்புக் கேட்க மாட்டேன் என்றது. எருமை மானிடமும் மாப்பிள்ளையுடனும் பலமுறை பேசிப் பார்த்தும் அவை சம்மதிக்கவில்லை. ஆகையால் அன்பானவர்களே, நண்பர்கள் விளையாட்டாக எதையும் சொன்னால் கோபிக்காதீர்கள். வீணான கோபம் தீமைகள் பலவற்றைத் தரும்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***எய்தா நகைச்சொல் எடுத்துரைக்கப் பட்டவர்***
***வைதாராக் கொண்டு விடுவர்மன்; அஃதால்***
***புனற்பொய்கை ஊர! விளக்கெலி கொண்டு***
***தனக்குநோய் செய்து விடல்***

விளையாட்டாகப் பேசும் வார்த்தைகளைக் கோபத்துடன் கூறியதாக நினைத்துச் சொன்னவரைக் கோபிப்பதால் தீமைகள் பல உண்டாகும். ‘**விளக்கெலி கொண்டு தனக்கு நோய் செய்து விடல்”** என்பது பழமொழி.

33 "அன்பானவர்களே, பொருள் உள்ளவர்களைத் தான் எல்லோரும் மதிப்பார்கள். ஈன்ற தாய், கட்டிய மனைவி,பெற்ற பிள்ளைகள் யாவும் பொருளுள்ள சுற்றத்தைத் தான் நேசிப்பர். பணம் இல்லாதான் பிணம், காசேதான் கடவுளடா என்று தற்கால அறிஞர்கள் கூறியுள்ளனர். ஒருவன் எவ்வளவு முயன்று பணத்தைத் தேடினாலும் அதைச் செலவு செய்யாமல் பாதுகாத்தால் தான் தனவந்தனாக முடியும். பொருள்தான் எண்ணிய இடமெல்லாம் சென்று எண்ணியவ்றையெல்லாம் செய்து முடிக்கும். பொருளைச் சேர்க்கும் வழியறிந்து சேர்க்க வேண்டும். அப்படி அறவழியில் தேடிய செல்வத்தை அறவழியில் செலவு செய்தல் வேண்டும். மிகுதியைக் கவனமாகப் பாதுகாத்தல் வேண்டும். செல்வம் தான் பகைவருடைய செருக்கை அடக்கும் வலிமையான ஆயுதம். அத்துடன் செல்வத்தை மிகுதியாக வைத்திருப்பவனுக்கு அறமும், இன்பம் அழைக்காமலே வந்து சேரும். பெரும் சிறப்புக்களை கொண்ட செல்வத்தை அநீதியான செயல்களுக்குச் செலவு செய்தால் அது அழிந்து விடும். அத்துடன் தேடிய செல்வதைத்தைச் செலவு செய்து விட்டுப் பின்பும் தேடிக் கொள்ளலாம் என்று நினைப்பது அறிவீனம். அது மயிலின் தலை மேல் வெண்ணெயை வைத்து, அது சூரிய ஒளியில் உருகி அதன் கண்களை மறைத்தபின் அதைப் பிடிக்கலாம் என்று நினைப்பதைப் போன்றதாகும்"

"முல்லை வனத்தில் வாழ்ந்த மான் ஒன்றின் தந்தை மிகவும கஷ்டப்பட்டு உழைத்துப் பெரும் செல்வத்தைச் சேர்த்து

வைத்திருந்தது. மானின் தந்தைக்கு வயதானதும் அது செய்த தொழிலையும் தான் தேடிய பணத்தையும் தனது பிள்ளையான மானுக்குக் கொடுத்தது. மான் நல்ல உழைப்பாளி. அதனால் அதுவும் பெருந்தொகையாகப் பணம் தேடியது. அத்துடன் செல்வத்தைக் கண்டபடி செலவு செய்தது.”

“ஆடம்பரமாக வாழ்ந்த தனது மகனை அழைத்துத் தந்தை மான் சொன்னது; “மகனே, முன்பு நான் பெரும் செல்வத்தைத் தேடினேன். இனியும் தேடுவேன் என்று நினைத்துக் கண்டபடி செலவு செய்தல் ஆகாது. ஒருவனுக்குச் செல்வம் வளர்பவதற்கு விதி முயற்சியை உண்டாக்கும். அதேவிதி செல்வத்தை அழிப்பதற்குப் பல வழிவகைகளையும் உருவாக்கும். இப்பொழுது நீ தர்மமில்லா முறையில் செல்வத்தைச் செலவு செய்கிறாய். இதனால் செல்வம் அழிந்து விடும். பொருள் இழப்பதற்குக் காரணமான விதி ஒருவனை அறிவற்றவனாய் ஆக்கும். அது தான் இப்பொழுது நடைபெறுகிறதென்று நான் நினைக்கிறேன். நீ இப்பொழுது இலாபம் தராத முயற்சிகளில் ஈடுபடுகிறாய். அது ஆபத்தையே தரும். பொருளைச் சேர்ப்பவன். அதிலொரு பகுதியைப் பாதுகாத்தால் தான் அது பெருகும். எனவே அவதானமாக நடந்து கொள். தேடிய பொருள் அழிந்தால் தேடுவது கஷ்டம்’ என்றது”

“மான் குட்டி, தந்தையின் சொல்லைக் கேட்கவில்லை அது ஆராயாமல்  செலவு செய்தது. அப்படிச் செய்யும் போது

அது” எனது உடலில் வலு உள்ளது. நான் சம்பாதிப்பேன்” என்று கூறும். சில வருடங்களில் மான் தேடிய செல்வம் குறைந்து விட்டது. அதனால் மான் கடும் முயற்சி செய்ததது. அதனால் அது நோயாளியானது. அதனால் எழுந்து நடக்ககூட முடியவில்லை. அத்துடன் சேர்ந்து தொழில் செய்தவர்கள் விலகிச் சென்றனர். உதவி செய்தவர்கள் மானைக் கண்டும் காணாதவர்கள் போலச் சென்றனர். மானால் தொழிலைக் கவனிக்க முடியவில்லை. அதன் பிள்ளைகள் சிறுவர்களாக இருந்தனர். மனைவி கல்வி கற்காததால் அவளுக்கு எதுவும் செய்யத் தெரியவில்லை”

“தகப்பன் மான் சொன்னது ; “நான் உனக்கு எத்தனையோ முறை புத்திமதி கூறியும் நீ கேட்கவில்லை. இப்பொழுது நான் தள்ளாத வயதில் தொழில் செய்கிறேன். இனியாவது கவனமாக இரு” என்றது. ஆகையால் அன்பானவர்களே, பொருளைத் தேடலாமென்று நினைத்து உள்ள பொருளை ஆராயாது செலவு செய்யாதீர்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***முன்னை யுடையது காவாது இகந்திருந்து***
***பின்னையஃதாய்ந்து கொள்குறுதல் - இன்னியல்***
***மைத்தடங்கண் மாதாய்; - அஃதாதல் வெண்ணெய்மேல்***
***மைத்து மயில் கொள்ளுமாறு***

கொக்கின் தலையில் வெண்ணைய் வைத்துப் பிடிப்பது என்றும் ஒரு முதுமொழி உண்டு. உள்ள செல்வத்தை ஆராயாது செலவு

செய்பவர்கள் பிற்காலத்தில் துன்பப்படுவர். **“வெண்ணெய் மேல் மைத்து மயில் கொள்ளுமாறு”** என்பது பழமொழி.

**34** “அன்பானவர்களே, ஒருவன் இன்னொருவரோடு பகை கொள்ளக்கூடாது. பகை என்று சொல்லப்படுகின்ற பண்பற்ற தீய செய்கை ஒருவனின் குடும்பத்தை மட்டுமன்றி அவனது பரம்பரையையும் அழித்து விடும். தான் தனியே இருந்து கொண்டு பலரையும் பகைப்பவன் பித்துப் பிடித்தவனை விடக் கேவலமானவன். முட் செடி மரமாக வளர்வதற்கு முன் அதை வெட்டி அழித்து விட வேண்டும். அது போலப் பகையையும் அது வளர்ந்து பெருகு முன் தீர்த்து விடல் வேண்டும். எள்ளின் பிளவைப் போலப் பகை சிறிதாக இருந்தாலும், அது குடியை அழிக்க வல்ல பல கேடுகளை உண்டாக்கும். அதை விட ஒருவர் தன்னைவிட வலியற்ற கோளைகளிடம் கொள்ளும் பகை, கொள்வோரை அவருடைய தகுதியளவிற்குக் குறைத்து விடும்”

“மாரி காலமல்லாத காலத்தில் பெய்யும் மழையும் பெரு வெள்ளத்தைத் தரும். முல்லை வனத்தில் வாழ்ந்த எருமை ஒன்று தனது நண்பனின் திருமண விழாவுக்குச் சென்று கொண்டிருந்தது. அது புதிய விலையுயர்ந்த பட்டு வேட்டியும் பட்டுச் சட்டையும் பட்டுச் சால்வையும் அணிந்திருந்தது. அதன் முன்னால் சேற்றில் குளித்த பன்றி ஒன்று சென்று

கொண்டிருந்தது. பன்றியிலிருந்து துர்நாற்றம் வீசியது. அதனால் எருமை பன்றியின் உடலில் படிந்துள்ள சேறு தனது பட்டாடையில் பட்ட விடுமோ என அஞ்சியது. முன்னே சென்று கொண்டிருந்த பன்றி திடீரென்று தனது உடலை உலுப்பியது. அதனால் பன்றியின்மேற் படிந்திருந்த அழுக்கு மண்ணின் சிறு பகுதி எருமையின் பட்டு வேட்டியில் பட்டது”

“அதனால் எருமைக்குக் கோபம் பீறிட்டது. தகாத வார்த்தைகளாற் பேசியவாறு பன்றியைத் தாக்கியது. அதனால் எருமையின் வேட்டி முழுவதும் அழுக்கானது. இதைப் பன்றி எதிர்பார்க்கவில்லை”

“அற்ப பயலே, எனது புதியபட்டு வேட்டி மீது அழுக்குப் பிரட்டிவிட்டாய்” என்று தாக்கச் சென்றது”.

“ஐயா, பாதையால் சென்று கொண்டிருந்த என்னை ஏன் தாக்கினீர்கள். நீங்கள் தாக்கியமையால் தான் உங்கள் வேட்டி அழுக்கடைந்தது. நான் எதுவும் செய்யவில்லை” என்றது பன்றி”

“பன்றியின் சொல்லைக் கேளாது மீண்டும் மீண்டும் பன்றியைத் தாக்கியது எருமை. பன்றி பெருங் குரலெடுத்த அழுதது; “ஐயா, வீணாக என்னைத் தாக்காதீர்கள். நீங்கள் உயர்ந்தவர் ; பெரும் வீரர் என்பது எனக்குத் தெரியும். அதனால் தயவு செய்து சென்று விடுங்கள்” என்று அழுதது பன்றி”

“எருமை திமிருடன் சென்று தான் செய்த செயலைப் பெருமையாகக் கூறியது. அதைக் கேட்டுக் கொண்டிருந்த யானை சொன்னது; “எருமையே, பலவீனர்களைக் காரணம் கருதிக் கூடத் தாக்கக் கூடாது. பலவீனர்கள் வேண்டுமென்று பலமானவர்களுக்குக் கேடு செய்ய மாட்டார்கள். அவர்கள் தம்மையறியாது சில தவறுகளைச் செய்தால், பலமுள்ளவர்கள் அதைப் பொறுத்துக்கொள்ள வேண்டுமே தவிர அவர்களைத் தண்டிக்கக் கூடாது. பலவான்கள் நூறு அடி அடித்தால் பலவீனர் சில சமயம் ஒரு அடி அடிப்பர். இல்லாவிட்டால் தரக்குறைவாகப் பேசுவர். அதனால் பெரும் அவமானம் உண்டாவதோடு பலவீனர்களின் தரத்திற்குப் பலவான்களும் வந்து விடுவர்” என்றது”

“எருமை எதுவும் பேசவில்லை. யானையைக் காரணமின்றி எதிர்த்துக் கதைத்தால் யானை தன் தும்பிக்கையால் பலமாக அடித்து விடும் என்று நினைத்தது”

“அப்போது அங்கே வந்த முயல் சொன்னது ; “ பெரும் சண்டியன் நிற்கிறார். உமது சண்டித்தனத்தை பன்றியிடம் காட்ட வெட்கமாயில்லையா உனக்கு? பாவம் பன்றி நீதாக்கியதால் காலுக்கு மருந்து கட்டியுள்ளது. பெரிய வீரர்”. என்று கேலி செய்தது. எருமைக்குக் கோபம் வந்தது. எனினும் அதைக் காட்ட முடியாது அவதிப்பட்டது. முயல், யானையின்

உயிர் நண்பன். முயலுக்கேதாவது நடந்தால் யானை தூக்கி வீசிவிடும்”

“உனது வீரத்தை என்னிடங் காட்டு...” என்றது முயல். எருமை எதுவும் பேசாமல் நின்றது”

“பலவீனர்களுடனும், ஆள் உதவியில்லாதவர்க – ளுடனும் தான் நீ சண்டித்தனம் காட்டுவாய். முடிந்தால் என்னிடம் காட்டு” என்று கேலியாகச் சிரித்தது முயல். அங்கு கூடி நின்ற மிருகங்களைப் பார்க்க எருமைக்கு வெட்கமாக இருந்தது. ஆகையால் அன்பானவர்களே, பலவீனர்களை மன்னித்து விடுங்கள். பலமானவர்களை நண்பராக்கிக் கொள்ளுங்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***வன்பாட் டவர்பகை கொள்ளினும் மேலாயர்***
***புன்பாட் டவர்பகை கோடல் பயமின்றே***
***கண்பாட்ட பூங்கழிக் கானலந் தண்சேர்ப்ப!***
***வெண்பாட்டம் வெள்ளந் தரும்.***

தகுதி குறைந்தவரிடம் கொள்ளும் பகை பல மாணவர்களின் தரத்தைக் குறைத்து விடும். பின் யாரும் மதிக்கமாட்டார்கள் “ **“வெண்பாட்டம் வெள்ளந் தரும்”** என்பது பழமொழி.

**35** “அன்பானவர்களே, ஒரு செயலைப் பற்றி முழுமையாக அறியாது அதைத் தொடங்குவது தீமையையே தரும். உதாரணமாகக் குதிரையில் ஏறிச் சவாரி செய்யத் தெரியாத

ஒருவன் குதிரைமேல் ஏறி அதனை அடித்தால் அது அவனைத் தள்ளி நிலத்தில் விழுத்தி விட்டு ஓடி விடும். அது போலத் தீயவர்கள் தமது தீய குணத்தால், தமக்கு நன்மை செய்பவர்களையும் பகைத்துக் கொள்வார்கள். அதனால் ஒரு செயலைச் செய்யுமுன் அச்செயலைச் செய்யலாமா என் நன்கு ஆராய்ந்த பின்பே செய்தல் வேண்டும்"

"முருக வனத்தில் வாழ்ந்த பன்றி ஒன்று மிகவும் வறியது. அது பதினாறு குட்டிகளை ஈன்றது. குட்டிகளை ஈனும் போது தாய்ப் பன்றி இறந்து விட்டது. அதனால் குட்டிகள் பாலின்றி வருந்தின. அதைக் கண்ட காட்டுப்பசு ஒன்று பன்றிக்குட்டிகளுக்குத் தினமும் காலையும், மாலையும் பால் கொடுத்து வந்தது. அதனால் குட்டிகள் கொழு, கொழுவென்றிருந்தன. அத்துடன் பசுவையே தமது தாயென நினைத்து அத்துடன் எந்நேரமும் திரிந்தன; விளையாடின. தாய்ப்பசுவிற்கு இரண்டு கன்று இருந்தன. மூத்தது பெண்பிள்ளை. சாதுவான தன்மையும் இரக்கமும் கொண்ட அப்பிள்ளைபன்றிக் குட்டிகளைத் தனது சகோதர்களாக நினைத்துப் பழகி வந்தது"

"பன்றிக்குட்டிகள் நடக்க முடியாதிருந்த போது தாய்ப்பசு தினமும் காலையிலும், மாலையிலும் வந்து பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுத்து விட்டுப் போகும். பசு சென்ற பின் பன்றிக்குட்டிகள் பசுவின் அன்பைத் தேடிக் கத்தும்.

அவ்வேளைகளில் தந்தையான பன்றி தனது குட்டிகளை அணைத்து வைத்திருக்கும். மாலையானதும் பசு வரும் பன்றிக் குட்டிகள் அன்போடும் ஆசையோடும் பசுவை நோக்கி ஓடும். பின் அவை நடக்கத் தொடங்கியதும் பசுவின் பின்னால் செல்லத் தொடங்கின. இரவானாலும் அவை பாசத்துடன் அரவணைக்கும் பசுவுடனும் அதன் கன்றுகளுடனும் தங்க ஆரம்பித்தன. இது பன்றிக்குப் பிடிப்பதில்லை. அதனால் அது பசுவுக்குச் சொன்னது; "பால் கொடுக்கும் சாட்டில் எனது பிள்ளைகளைச் சேர்த்து வைத்திருக்கிறாய். அவை என்னை மறந்து உன்னுடன் சேர்ந்து விட்டன. எனது குட்டிகள் இப்போது வளர்ந்து விட்டன. இனி நீ பால் கொடுக்கத் தேவையில்லை. அதனால் எனது பிள்ளைகளைக் கலைத்து விடு. இனிமேல் அவை உன்னை நாடி வந்தாலும், அவற்றைச் சேர்க்காதே" என்றது"

"பன்றியாரே, அன்போடு நேசித்து என்னை நாடி வருபவர்களை என்னால் வெறுக்க முடியாது. இன்னும் சில நாட்கள் சென்றதும் உனது குட்டிகள் உன்னைப் புரிந்து கொண்டு உன்னிடம் வந்து விடும். அதுவரை பொறுத்திரு" என்றது"

"பன்றி அதைக் கேட்கவில்லை; "நீ எனது பிள்ளைகளை அபகரிக்க நினைக்கிறாய். அத்துடன் அவற்றின் உழைப்பையும் எடுக்க நினைக்கிறாய். அதனால் தான் எனக்குப் போலிச் சமாதானம் சொல்கிறாய். இனி மேலும் உன்னுடன்

எனது பிள்ளைகளை விட முடியாது” என்று கூறித் தனது குட்டிகளைப் பல வந்தமாக இழுத்துச் சென்றது”

“மறு நாட்காலை பன்றி நித்திரை விட்டெழுந்த போது குட்டிகளைக் காணவில்லை. அவை பசுவை அணைத்தபடி நித்திரை செய்து கொண்டிருந்தன. அதைக் கண்ட பன்றிக்குக் கோபம் வந்தது. அது தனது குட்டிகளைத் தண்டித்து அழைத்துச் சென்றது. அப்படியிருந்தும் பன்றிக் குட்டிகள் பசுவிடம் சென்றன”

“அதைப் பொறுக்க முடியாத பன்றி தனது நண்பனான புலியிடம் சென்று பசுவைக் கொன்று தின்னுமாறு கூறியது. அதற்குப் புலி சொன்னது; “நண்பரே, இரத்தம் தான் பாலாகமாறுகிறது. அதனால் அதைக் குடித்த உனது குட்டிகள் தாய்ப் பாசம் கொண்டுள்ளன. அதை மாற்ற முடியாது. அதை நீ அனுசரித்துப்போவது தான் முறை. பசு பால் கொடுக்கா விட்டால் உனது குட்டிகள் என்றோ இறந்திருக்கும். பசு பாசம் சொரியுமே தவிர வேறு எதையும் எதிர்பாராது. ஏனென்றால் தாயானவள் எப்பொழுதும் பிள்ளையின் நலத்தையே விரும்புவாள். அதனால் நன்மை செய்த பசுவுக்குத் தீமை செய்ய விரும்பாதே. பசு எனது குடும்ப நண்பர். அதனால் அதனுடன் ஒத்துப் போ. காலப்போக்கில் எல்லாம் சரிவரும். பன்றி ஒரு போதும் பசுவாகாது” என்றது இருப்பினும் பன்றியின் மனம் மாறவில்லை. அது ஓயாமல் பசுவுக்குத் தீமை செய்து கொண்டிருந்தது. ஆகையால் அன்பானவர்களே, உங்களுக்கு நன்மை

செய்வோருக்கு ஒரு போதும் தீமை செய்ய நினைக்கக் கூடாது” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***குலத்துச் சிறியார் கலாந்தணிப் பான்புக்கு***
***விலக்குவார் மேலும் எழுதல் - நிலத்து***
***நிலையழுங்க வேண்டிப் புடைத்தக்கால் வெண்மாத்***
***தலைக்கீழாக் காதி விடல்.***

குதிரை ஏற்றம் அறியாதவன், குதிரையின் மீது ஏறி அதை அடித்துத் தலை குப்புறவிழுவது போலத் தீயவர்கள் தமக்கு நன்மை செய்பவர்களுக்கும் தீமையையே செய்வார்கள் ; “ **“வெண்மாத் தலைக் கீழாய்க் காதி விடல்”** என்பது பழமொழி.

36 “அன்பானவர்களே, நீங்கள் உங்கள் வாழ்வில் பல்லாயிரக் கணக்கான மனிதர்களுடன் பழகுவீர்கள். அவர்களில் சிலர் நல்லவர்களாக இருப்பார்கள். பலர் தமது காரியங்களைப் பார்ப்பதற்காக நல்லவர்கள் போல நடிப்பார்கள். உலகில் வாழும் மனிதர்கள் பல்வேறுபட்ட குணாதிசயங்களை உடையவர்கள். அதனால் பழகும் போது மிகவும் அவதானத்துடன் பழகுதல் வேண்டும். அத்துடன் பழகுபவர்களின் குணவியல்புகளைத் தெரிந்து அதற்கேற்ற படி பழகுதல் வேண்டும். இல்லாவிட்டால் ஏமாற்றமும் அவமானமும் உண்டாகும். சிலர் அடுத்துக் கெடுக்க நினைப்பார்கள். சிலர் நண்பர்கள் போல உறவாடித் தகவல்களை அறிந்து எதிரிகளுக்கு அறிவிப்பார்கள். சிலர் தமது காரியம் பார்ப்பதற்காக

நண்பர்களைப் போல நடிப்பார்கள். உதவி செய்பவர்களுக்கு உதவிகள் செய்தல் வேண்டும். தனக்கு வேண்டாதவற்றைச் செய்பவரை அவர் அறியாத வகையில் ஒதுக்கி வைத்தல் வேண்டும். பொருளைப் பேணிச் செயலை முடிப்பவர்களிடத்து அவர் அறியாதவாறு அவருக்கு உதவி செய்து அவரைத் தூண்டுதல் வேண்டும்"

"முல்லை வனத்தில் வாழ்ந்த யானை ஒன்று அங்கு வாழும் மிருகங்களுடன் மிகுந்த அன்பு பூண்டு வாழ்ந்து வந்தது. மிருகங்கள் பலவும் தமது தேவையை அதனிடத்தில் கூறி ஆலோசனைகளும் பொருளுதவியும் பெறும். அதனால் பெரும்பாலான மிருகங்கள் அதன் நற்செயலைப் புகழ்ந்தன. அது அக்காட்டில் வாழ்ந்த குதிரைக்கு எரிச்சலைக் கொடுத்தது. அதனால் அது மற்றயை மிருகங்களுக்கு யானையைப் பற்றி மிகவும் தரக்குறைவாகக் கூறும். இது யானைக்குத் தெரியும். இருந்தும் அது கோபிக்காது குதிரை கேட்கும் உதவிகளை அன்புடன் செய்யும். யானை செய்யும் உதவிகளைக் குதிரை பெரிதாக மதிப்பதில்லை. யானையின் முன்னால் அதைப் போற்றிப் புகழும். பின் அதை இகழும். இதனால் கோபங்கொண்ட பன்றி, யானையிடம் வந்து குதிரையைப் பற்றிக் கூறி அதற்கு உதவி செய்ய வேண்டாம் என்று கூறியது"

"நண்பரே, உதவி கோரி வருபவர்களுக்கு நல்லவர்கள் உதவி செய்தல் வேண்டும். அதன் நன்மை

தீமைகளை உதவி பெறுவோர் உணரத்தவறினால் அதற்கு என்னால் எதுவும் செய்ய முடியாது. எனக்கு உதவி செய்து பழக்கமே தவிர இல்லையென்று சொல்லமுடியவில்லை” என்றது யானை”

“சில நாட்கள் செல்ல அயற்காடான முருகவனத்தில் வாழ்ந்த பெரும் தனவந்தனான குதிரை தனது மகனுக்கு முல்லை வனத்தில் வாழும் குதிரையின் மகளுக்குத் திருமணம் செய்ய விரும்பி யானையிடம் வந்து தனது எண்ணத்தைச் சொன்னது. யானை வெகுநேரம் வரை யோசித்து விட்டு; “விசாரித்து விட்டுச் செய்” என்றது”

“அந்தப் பதிலைக் குதிரை எதிர்பார்க்கவில்லை. அதனால் அது சொன்னது ; “நண்பா, நீ எனது உயிர் நண்பன். பல காலமாக நாம் உரிமையுடன் பழகி வருவதால் தான் கேட்டேன். உன்னைத்தவிர இக்காட்டில் விசாரிக்க யார் இருக்கிறார்கள்” என்று கேட்டு விட்டுச் சென்று விட்டது”

“ மாலைவேளை முல்லை வனத்தில் வாழ்ந்த குதிரை யானையின் வீட்டிற்கு வந்து சொன்னது ; “நண்பரே, எனது மகளுக்கு முருகவனத்தில் வாழும் பெருந் தனவந்தரின் மகளைக் கேட்கிறார்கள். அவர் உங்கள் நெருங்கிய நண்பர். அவரிடம் என்னைப் பற்றி நன்றாகச் சொல்லி இந்த திருமணத்தை நடத்தி வையுங்கள்” என்று கேட்டது”

“காலையில் முருகவனத்தில் வாழும் எனது நண்பனான குதிரை வந்து அனைத்தையும் சொன்னது. நான் விபரமாகக் கூறினேன். நீர் முருகவனத்திற்குச் சென்று கதையும். எல்லாம் நல்லபடி நடக்கும்” என்றது”

“குதிரை மிகுந்த மகிழ்வுடன் சென்றது. ஆனால் முருக வனக் குதிரை வேறு இடத்தில் தனது மகனுக்குத் திருமணம் செய்துவைக்க முடிவு செய்தது”.

“பன்றி எப்பொழுதும் யானையுடன் இருக்கும். அது யானையைத் தன்னுயிராக நினைத்து வந்தது. அதனால் யானை பன்றியுடன் அன்பாகவும் நம்பிக்கையுடனும் பழகி வந்தது. பன்றியின் மகளுக்குத் திருமணம் பேசப்பட்டது. மாப்பிள்ளை பகுதியினர் தோட்டக்காணி வேண்டாம் என்று சொல்லிப் பணமாகக் கேட்டனர். அதனால் பன்றி தான் செய்த தோட்ட நிலத்தை விற்க நினைத்து விலை பேசியது. அதை அறிந்த யானை மாப்பிள்ளை வீட்டார் கேட்ட பணம் முழுவதையும் பன்றிக்குச் சொல்லாமல் கொண்டு சென்று மாப்பிள்ளையின் தந்தையிடம் கொடுத்தது. அதனால் மாப்பிள்ளை பகுதியினர் தமக்குப் பணம் வேண்டாம் என்று பன்றிக்குச் சொன்னனர். திருமணம் முடிந்த பின்பு தான் யானை தனது மாப்பிள்ளையின் தந்தைக்குப் பணம் கொடுத்த விஷயம் பன்றிக்குத் தெரிய வந்தது. அன்பானவர்களே, புத்திசாதுரியமாக

நடத்தல் வேண்டும். தீயவனான குதிரைக்கு உதவாது விசாரித்துப் பார்க்கும்படி சொன்னதால் முருகவனக் குதிரை விசாரியாமல் பிரச்சினையை உணர்ந்து கொண்டது. விசுவாசமான பன்றிக்குத் தெரியாமல் யானை உதவி செய்தது. இதுபோல நீங்களும் புத்தி சாதுரியமாக நடந்து கொள்ளுங்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***செந்நீரார் போன்று சிதைய மதிப்பார்க்கும்,***
***பொய்ந்நீரார் போன்று பொருளை முடிப்பார்க்கும்,***
***அந்நீரவரர்க்குத் தக்காங்கு ஒழுகுபவே,***
***வெந்நீரில் தண்ணீர் தெளித்து.***

தம்முடன் பழகுவோரின் குணவியல்புகளை அறிந்து அதற்கேற்றப நடத்தல் வேண்டும். " **ஒழுகுபவே வெந்நீரில் தண்ணீர் தெளித்து ஒழுகுபர்"** என்பது பழமொழி.

37 "அன்பானவர்களே, முதலில் தனது குறை குற்றங்களை நீக்கி விட்டுத் தான் பிறருடைய குறை குற்றங்களை நீக்க முயல வேண்டும். அப்படிச் செய்பவர்களுக்கு எந்தக் குறை குற்றங்களும் வந்து சேராது. பொருளின் மீது அளவு கடந்த ஆசை கொண்டு அதற்காக மக்களை ஏமாற்றிப் பிழைப்பு நடத்துவது பெரும் பாவமாகும். நம்பி வரும் மக்களை ஏமாற்றக்கூடாது. அத்துடன் நன்மை தராத செயல்களை ஒரு போதும் செய்யவும் கூடாது"

“சிறப்பைத் தருகின்ற பெருஞ் செல்வத்தைப் பெறுவதாய் இருந்தாலும் கூடப் பிறருக்குத் துன்பஞ் செய்யாமல் வாழ்வதே சான்றோரின் குணமாகும். மற்றைய உயிர்களுக்கு உண்டாகும் துன்பங்களைத் தனக்கு ஏற்பட்ட துன்பமாகக் கருதி அதை நீக்க வேண்டுமே தவிர அதைச்சாட்டாக வைத்துப் பணம் சம்பாதிக்க கூடாது”

“முல்லை வனத்தில வாழ்ந்த எருமை, அக்காட்டில் வாழும் மிருகங்களுக்கு வைத்தியம் செய்தது; சோதிடம் பார்த்தது; பேய் விரட்டியது ; கழிப்புக் கழத்தது. அதனால் அக்காட்டில் உள்ள மிருகங்கள் மட்டுமன்றி அயற்காடுகளில் வாழும் மிருகங்களும் வந்து வைத்தியம் செய்தன; சோதிடம் பார்த்தன; பேய் பிசாசை விரட்டின; கழிப்புக்கழித்தன. இதனால் எருமைக்குத் தினமும் நல்ல வருமானம் வந்து கொண்டிருந்தது”

“எருமை வைத்தியம் படித்ததில்லை. எருமையின் பாட்டனார் நாட்டு வைத்தியர். அவர் இறந்த பின் அந்த வைத்தியத்தை எருமை செய்து வந்தது. எருமை திருமணம் செய்து பல வருடங்கள் கழிந்தபோதும் அதற்குப் பிள்ளைகள் இல்லை. ஆனால் எருமை பிள்ளைகள் இல்லாத தம்பதிகளிடம் பெருந்தொகைப் பணத்தைப் பெற்றுக் கொண்டு வைத்தியம் செய்யும். அதனால் பிள்ளைகள் இல்லாத மிருகங்கள் எருமையிடம் வந்து வைத்தியம் செய்தன”

“முல்லை வனத்தில் வாழும் குரங்கு ஒன்று திருமணம் செய்து இரண்டு வருடங்களாகியும் அதற்குக் குட்டிகள் பிறக்கவில்லை. அது குரங்கின் தாய்க்கு மிகுந்த கவலையைக் கொடுத்தது. அதனால் அது தனது மகனையும் மருமகளையும் எருமையிடம் சென்று வைத்தியம் செய்யும் படி வற்புறுத்தியது. அப்போது குரங்கு சொன்னது ; “அம்மா, வைத்தியம் செய்யும் எருமைக்கே பிள்ளைகள் இல்லை. எருமை மற்றவர்களுக்குச் செய்யும் வைத்தியத்தைத் தனக்குச் செய்திருக்கலாம் தானே. நான் திருமணம் செய்து கொஞ்ச நாட்கள் தான் ஆகிறது. அதனால் இன்னும் சில மாதங்கள் செல்ல அதைப் பற்றிச் சிந்திக்கலாம்” என்றது”

“அதைத் தாய்க்குரங்கு கேட்கவில்லை. அது ஓயாது சொல்லிக்கொண்டேயிருந்தது. தாயின் கரைச்சலைத் தாங்க முடியாத குரங்கும் அதன் மனைவியும் எருமையிடம் சென்றன”

“எருமை தனக்குப் பெரும் பணம் வந்து சேரப்போகிறது என்ற மகிழ்வுடன் குரங்கிற்கும் அதன் மனைவிக்கும் என்னென்ன செய்ய வேண்டும், என்னென்ன உணவு வகைகளை எப்படி உண்ண வேண்டும் என்று விபரமாகக் கூறியது. பின் மருந்தைக் கொடுத்து அதை எவ்வாறு உண்ண வேண்டும் என்று மிகவும் விரிவாகச் சொன்னது. எருமை சொன்னவற்றை மிகவும் அவதானமாகக் கேட்ட குரங்கு ; சொன்னது; “ஐயா, உங்கள் வைத்திய முறைகளைப் பற்றியும்

மருந்து உண்ணும் முறைகளைப் பற்றியும் அதற்கான உணவு முறைகளைப் பற்றியும் கூறினீர்கள். அதன்படி நடந்தால் குழந்தை கிடைக்குமா…? என்று கேட்டது".

"கட்டாயம் கிடைக்கும்.நான் கூறியபடி இருவரும் நடவுங்கள். மருந்து வகைகளை நேரந்தவறாமல் உண்ணுங்கள் மூன்று மாதங்களின் பின் வாருங்கள்" என்றது"

"குரங்கு சிரித்து விட்டுச் சொன்னது; "ஐயா, உங்கள் வைத்தியத்தைப் பற்றி இக் காட்டில் உள்ளவர்களும், அயற்காடுகளில் உள்ளவர்களும் புகழ்கின்றனர். ஆனால் எனக்கு உங்கள் வைத்தியத்தில் நம்பிக்கை இல்லை. வாத நோயால் பீடிக்கப்பட்ட ஆடொன்று தனது நோயைத் தீர்க்காது, ஏனைய மிருகங்களுக்கு வந்த வாத நோய்க்கு மருந்து செய்ததாக ஒரு பழைய நூலில் வாசித்துள்ளேன். அது போலத்தான் நீங்களும் வைத்தியம் செய்கிறீர்கள். முதலில் நீங்கள் ஒரு பிள்ளையைப் பெறுங்கள்" என்றது. அங்கு வைத்தியம் செய்ய வந்தவர்கள் கேலியாகச் சிரித்தனர். அன்பானவர்களே, முதலில் தனது குறைபாடுகளை நீக்கிய பின்பே மற்றவர்களது குறைபாட்டைத் தீர்த்து வைத்தல் வேண்டும்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***தங்குற்றம் நீக்கல ராகிப் பிறர்குற்றம்***
***எங்கேனும் தீர்த்தற்கு இடைப்புகுதல் - எங்கும்***
***வியனுலகின், வெள்ளாடு தன்வளி தீராது***
***அயல்வளி தீர்த்து விடல்.***

தனது குறைகளைப் போக்காத ஒருவர், பிறருடைய குறைகளை நீக்க முயலக்கூடாது. **“வெள்ளாடு தன்வளி தீராது அயல் வளி தீர்த்து விடல்”** என்பது பழமொழி.

38 “அன்பானவர்களே, தனது கடமையை உணர்ந்து போற்றும் நல்ல குணமுடையவர்கள் தனக்குத் தேவையானவற்றை யாருக்கும் தெரிவிக்க மாட்டார்கள். அவர்களது நிலையை உணர்ந்த பெரியவர்கள் அவரின் தேவையை உணர்ந்து தேவையானவற்றைக் கொடுத்துதவுவார்கள். சான்றோர்களின் சிறப்பு என்று கூறப்படுவது அவர்களின் குணங்களின் சிறப்பே தவிர வேறு எதுவும் இல்லை. இத்தகைய பெரியவர்கள் அன்பு, நாணம், உதவும் தன்மை, இரக்கம், உண்மை ஆகிய ஐந்து பண்புகளையும் உடையவர்களாக இருப்பார்கள். அவர்கள் எப்பொழுதும் அடக்கத்துடன் இருப்பார்கள். வறுமையுற்ற காலத்திலும் அவர்கள் தமது பண்புகளை விடமாட்டார்கள். இதனால் அவர்கள் வாழும் காலம் முழுவதும் மக்களாற் போற்றப்படுவார்கள். தம்மைவிடத் தாழ்ந்தவர்களிடத்தும் அன்பாகவும் அடக்கமாகவும் நடந்து கொள்வார்கள். தமக்குத் துன்பஞ் செய்தவர்களையும் மகிழ்வுடன் வரவேற்று உதவி செய்வார்கள். இவர்களது மனம் எப்பொழுதும் மகிழ்ச்சியால் நிறைந்திருக்கும்”

“சுந்தரவனத்தில் ஒரு யானை வசித்து வந்தது. அது மேற்கூறப்பட்ட பண்புகளை உடையது. அது அறத்தையும் மற்றவர்களது நலத்தையும் பெரிதும் விரும்பிப் பலருக்கும் உதவி செய்து வந்தது. அதனால் அது அக்காட்டில் உள்ள மிருகங்கள் எல்லாவற்றாலும் போற்றப்பட்டது”

“அது வசதியானதல்ல. தன்னிடமுள்ள பொருட்கள – னைத்தையும் அது இரப்பவர்களுக்கு இல்லை என்று கூறாது கொடுத்து விடும். ஆதனால் அடிக்கடி அதன் குடும்பத்தில் வறுமை காரணமாகப் பிரச்சினைகள் வரும்”

“அதற்கொரு அழகான மகள் இருந்தாள். தகப்பனைப் போல மகளும் நற்குணவதி. அதனால் அதையும் மிருகங்கள் நேசித்தன. அதற்குத் திருமண வயது வந்தது. யானை அதற்குத் திருமணம் செய்து வைக்க விரும்பியது அதனால் அது தனது வீட்டைத் திருத்தத் தொடங்கியது. யானை வீட்டைத் திருத்தி வர்ணம் பூச ஆரம்பித்ததும் காட்டு மிருகங்கள் யானையின் வீட்டில் ஒரு சுபகாரியம் நடக்கப் போவதாக நினைத்து அவை யாவும் யானையின் வீட்டுக்கு வந்து பலவகையான உதவிகளைச் செய்தன”

“அக்காட்டின் அரசன் கஜமுகன் என்ற யானை. அதற்கு யானையின் மகள் மீது அளவில்லாத பாசம் இருந்தது. அதனால் இளவரசனான தனது மகனுக்கு யானையின்மகளைத் திருமணம் செய்ய விரும்பி வந்து யானையைக் கேட்டது. யானை

மகிழ்வுடன் சிரித்ததே தவிர வேறு எதுவும்சொல்லவில்லை. அதனால் கஜமுகன் சொன்னது ; “யானையாரே, உமது மகிழ்வான சிரிப்பிலிருந்த உமது எண்ணத்தைப் புரிந்து கொண்டேன். ஏழையான நீர் இளவரசனுக்குச் சீர்வரிசை கொடுக்க முடியாதென்று நினைக்கிறீர். உமது பண்பும், உமது மகளின் பண்பும் தான் பெருஞ்சீர்வரிசை. அதை வேறு எங்கும் எவரும் பெறமுடியாது. அடுத்த முகூர்த்ததத்தில் திருமணத்தை வைப்போம்” என்று கூறிச் சென்றது”

“யானையின் மகனின் திருமணச் செய்தியை அறிந்த மிருகங்கள் ஒவ்வொன்றும் தம்மால் முடிந்தவற்றைச் செய்தன. அலங்காரங்கள், வானவேடிக்கைகள், நாட்டியங்கள், மேளக் கச்சேரிகள் யாவும் அரசனின் வீட்டை விடப் பெரிதாக நடைபெற்றன. அதனால் அன்பானவர்களே, சான்றோராக வாழுங்கள். அப்படி வாழ்ந்தால் நீங்கள் நினைத்தவை யாவும் நினைத்தபடி நடைபெறும். எல்லோரும் நீங்கள் கேளாமலே உதவி செய்வார்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***ஆண்டகை மன்னரைச் சார்ந்தார்தாம் அல்லுறினும்***
***ஆண்டொன்று வேண்டுதும் என்பது உரையற்க***
***பூண்தாங்கு மார்ப! பொருடக்கார், வேண்டாமை***
***வேண்டிய தெல்லாம் தரும்.***

மதிப்பு மிக்க சான்றோர்கள் தமக்கு வேண்டியவற்றை யாருக்கும் சொல்ல மாட்டார்கள். அவர்களது வாழ்க்கை முறை அவர்களுக்குத் தேவையான அனைத்தையும் அவர்

விரும்பியபடி கொடுக்கும். **“வேண்டாமை வேண்டியதெல்லாம் தரும்”** என்பது பழமொழி.

39 “அன்பானவர்களே, பிரதியுபகாரத்தை எதிர்பாராது ஏழைகளுக்குக் கொடுப்பதே ஈகையாகும். ஏனைய கொடுப்பனவுகள் யாவும் தனக்கு வரும் இலாபத்தை எதிர்பார்த்துக் கொடுப்பதேயாகும். பொருள் இல்லாதவர்களின் பசியைப் பொருள் உள்ளவன் போக்க வேண்டும். அதுவே பொருள் உள்ளவன் அதை வைப்பதற்குரிய சிறப்பான இடமாகும். வறுமைப்பட்டவர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுத்து அதன் மூலம் புகழ்பெறுதல் வேண்டும். அந்தப் புகழ் இம்மையிலும் மறுமையிலும் நிலைத்து நின்று இன்பத்தைக் கொடுக்கும். ஈகைப் பண்புடைய ஒருவரின் செல்வம் குறையக் குறையப் புகழ்வளரும். அவரின் உடம்பு அழிந்த பின்பும் அப்புகழ் நிலைத்து நிற்கும். ஒரு பொருளாய் மதிக்கத் தகாதவரையும் மதிப்பு மிக்கவராகச் செய்வது செல்வம். அச் செல்வத்தைப் பயனுள்ள அறவழியிற் செலவுசெய்து வாழ்பவர்கள் சொர்க்கத்தில் வாழ்பவர்களைப் போல எந்த விதமான குறைகளுமின்றிப் பூமியில் வாழ்ந்து பின் சொர்க்கத்தை அடைந்து அங்கும் இன்பமாக வாழ்வார்கள். அவர்களுக்கு இரண்டு உலகங்களிலும் தினமும் விருந்துணவு கிடைக்கும்”

“கடம்ப வனத்திலே ஒரு யானை வாழ்ந்து வந்தது. அது எந்நேரமும் மிக்க மகிழ்வுடன் இருக்கும். யார் வந்து இரந்தாலும் தன்னிடம் உள்ளதை ஒளியாது கொடுக்கும். எல்லோருடனும் இனிய சொற்களைப் பேசும். பிறரை ஒருபோதும் இழிவாக எண்ணாது. தன்னை நாடி வரும் விருந்தினரை அன்போடு வரவேற்று அவர்களுக்கு நல்ல சுவையான உணவு வகைகளை முகமலர்வுடன் கொடுக்கும். அதன் பின் மிஞ்சும் உணவைத் தானும் தன் மனைவியும் பிள்ளைகளும் பகிர்ந்துண்ணும். வந்த விருந்தினர் உணவு உண்டு சென்றபின், வரப்போகும் விருந்தினரை ஆவலோடு எதிர்பார்த்துத் தினமும் காத்திருக்கும்”

“அதனால் அக்காட்டில் வாழும் மிருகங்கள் யாவும் யனை மீது பேரன்பு வைத்திருந்தன. அக்காட்டில் வாழும் மிருகங்களின் வீடுகளில் சுபநிகழ்வுகள் நடைபெற்றால் மிருகங்கள் யானையின் வீட்டுக்குச் சென்று அழைத்துச் செல்லும். அது சம்பந்தப்பட்டவர்களின் வீடுகளுக்குச் சென்றால் வீட்டுக்காரர் நிறைகுடம் வைத்து, ஆராத்தியெடுத்து, மாலை அணிவித்து வரவேற்பர். பின் சுவையான உணவு வகைகளைக் கொடுப்பர். இதனால் யானைக்கு எந்நாளும் விருந்துணவு கிடைக்கும். அது வீட்டாருடன் இன்பமாகப் பொழுதைக் கழித்து விடை பெறும்”

“அயற்காடுகளில் உள்ள மிருகங்களும் யானையை மிக்க அன்புடன் வரவேற்கும். அத்துடன் கடம்பவனத்திலும் அயல் வனங்களிலும் வாழும் மிருகங்களுக்குப் பிள்ளைகள்

பிறந்தால், அவற்றை யானையிடம் கொண்டு வந்து காட்டி ஆசீர்வாதம் பெறும். சில மிருகங்கள் தமது பிள்ளைகளுக்கு யானையைக் கொண்டே பெயர் சூட்டும்”

“கடம்பவனத்திலே ஒரு சாமியார் இருந்தார். அவருக்கு யானையின் மீது பிரியம் அதிகம். அவர் சொல்வார் ; “வாழ்பவர்கள் யானையைப் போல வாழப் பழகுங்கள். யானை தனது நல்ல செயல்களால் செல்லுமிடங்களிலெல்லாம் சிறப்பாக வரவேற்கப்பட்டு கௌரவிக்கப்படுகிறது. அதற்கு நல்ல உணவு வகைகள் கிடைக்கிறது. இப்பிறப்பில் நாம் அனுப்பியவை தான் எமக்கு மறுமையிலும் கிடைக்கும். ஆசை, அவா, பொறமை, காரணமாகப் பிறரின் சொத்தை அபகரிப்போர் இப்பூமியில் மிகுந்த துன்பத்தை அடைகின்றனர். இவற்றால் இவர்களுக்கு நல்ல உணவு கூடக் கிடைப்பதில்லை. பற்றின்றி அறவாழ்வு வாழ்ந்து தான தருமம் செய்வோர் மறுபிறப்பிலும் அதையே செய்வர். அதனால் அவர்களுக்கு மறு பிறப்பிலும் புகழும் நல்ல உணவும் கிடைக்கும்” என்பார். ஆகவே அன்பானவர்களே, நல்ல செயல்களைச் செய்யுங்கள். அறநெறிப்படி வாழுங்கள். அப்படி வாழ்ந்தால் அடுத்த பிறப்பிலும் அவ்வாறாக வாழ்வீர்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***ஈனுலகத் தாயின் இசைபெறூஉம்; அஃதிறந்து***
***ஏனுலகத் தாயின் இனிததூஉம்; - தானொருவன்***
***நாள்வாயும் நல்லறம் செய்வாற்கு இரண்டுலகும்***
***வேள்வாய்க் கவட்டை நெறி***

தான தர்மம் செய்து பற்றின்றி வாழ்பவர்கள் எடுக்கும் பிறவிகள் தோறும் இன்பமாக வாழ்வர். “**இரண்டு லகும் வேள்வாய்க்கவட்டை நெறி** “ என்பது பழமொழி.

40 “அன்பானவர்களே, தமது தகுதியைத் தெளிவாக அறியும் திறனற்றவர்களின் பகைமையைப் பொருள் கொடுத்து நீக்குவதே சிறந்ததாகும். அறநெறியை அறியாது தம் மனம் போன போக்கில் தீமையான செயல்களைச் செய்து வாழ்வோருக்கு அறத்தை உணர்த்த முடியாது. பலரும் வெறுக்கத்தக்க வகையில் மானமிழந்து வாழ்வோர் எல்லோரும் ஏளனம் செய்தாலும் அதைப் பொருட்படுத்தமாட்டார்கள். தண்டனைகள் கொடுத்தாலும் திருந்த மாட்டார்கள். அவர்கள் தேவையில்லாது பகை கொள்வார்கள். பணத்தின் மீது ஆசை கொண்டு பிறரின் தூண்டுதலால் நல்லவர்களுக்கு ஓயாது துன்பஞ் செய்வார்கள். அதனால் வரும் இன்ப துன்பங்களைப் பற்றி எண்ணிப் பார்க்க மாட்டார்கள்.இவர்களைத் தண்டிப்பதை விடுத்து வெகு மானம் கொடுத்துப் பகையை விலக்குதல் வேண்டும்”

“முல்லை வனத்தில் ஒரு நரி வாழ்ந்து வந்தது. அது என்னென்ன தீய செயல்களைச் செய்ய முடியுமோ அவற்றையெல்லாம் செய்து வந்தது. அது பன்றி செய்யும் பண்ணைக்குள்ச் சென்று பன்றிக்குட்டிகளைப் பிடித்து உண்ணும்; காயப்படுத்தும். அதனால் கோபம் கொண்ட பன்றி

தனது பணியாட்களைக் கொண்டு பொறி வைத்து நரியைப் பிடித்து மரத்துடன் கட்டி வைத்து அடித்தது. அதனால் வருந்திய நரி ; “ இனிமேல் நான் பண்ணைப் பக்கம் வரமாட்டேன்” என்று கூறியது. அதனால் பன்றி அதை விடுவித்தது. அதன் பின் சிலகாலம் பன்றியின் பண்ணைக்குச் செல்லாமல் இருந்த நரி பின் அங்கு செல்லத் தொடங்கியது”

“நரியின் வீட்டுக்குப் பக்கத்தில் உள்ள காணியில் குரங்கு ஒன்று விவசாயம் செய்து வந்தது. குரங்கு மிகவும் கஷ்டப்பட்டு விவசாயம் செய்தமையால் பயிர்கள் செழித்து வளர்ந்தன. இரவில் நரி சென்று அங்கு முற்றியிருக்கும் காய் கனி வகைகளையும் பழங்களையும் பறித்துச் சென்று விற்று விடும். இவ்வாறு தினமும் நரி களவெடுப்பதால் குரங்கிற்குப் பெரும் நட்டமேற்பட்டது. அதனால் குரங்கு நரியை அழைத்துச் சொன்னது ; “நரியே, எருமை எனது பகைவன். நீ அதன் சொற்படி எனது தோட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களையெல்லாம் திருடுகிறாய். இது நீதியான செயல் அல்ல. அதனால் மாதா மாதம் உனக்கு ஆயிரம் ரூபா தருகிறேன் எனது கமத்தைக் காவல் செய். அதன் பின் திருடினால் நான் கமச் செய்கையை விட்டு விடுவேன்” என்றது”

“ஈட்டி எட்டிய வரை பாயும். ஆனால் பணம் பாதாளம் வரை பாயும். மாதா மாதம் ஆயிரம் ரூபா என்றதும் நரியின் மனம் குளிர்ந்தது. நானே திருடன். நான் திருடாவிட்டால் திருட்டு

நடைபெறாது. வேலை செய்யாமலே இருந்து பணம் சம்பாதிக்கலாம்” என்று நினைத்தது நரி”

“விஷயத்தை அறிந்த எருமை, நரியிடஞ் சென்று குரங்கின் தோட்டத்தை அழிக்கும் படி பலமுறை கூறியும் நரி கேட்கவில்லை. அது எருமையின் தோட்டத்திற்குச் சென்று திருட ஆரம்பித்தது”

“குரங்கு, நரிக்கு மாதாந்தம் ஆயிரம் ரூபா கொடுப்பதை அறிந்த குரங்கின் நண்பனான கரடி, குரங்கிடம் வந்து கேட்டது; “ நண்பா, வீணாக ஏன் மாதாமாதம் நரிக்குப் பணம் கொடுக்கிறாய்? காவல்துறையினரிடம் முறையிட்டால் அவர்கள் பார்த்துக் கொள்வார்கள் தானே” என்றது”

“நண்பா, காவல் துறையிடம் முறையிட்டாலும் தீயவர்கள் திருந்தமாட்டார்கள். அவர்களைத் திருந்த எனது எதிரிகளும் விடமாட்டார்கள். நெடு நாளாக எருமை என்மீது தேவையில்லாமல் பகை கொண்டு நரி மூலம் எனக்குத் தொந்தரவுகள் செய்கிறது. பகைவரை அடக்கப் பணம் தான் சிறந்த வழி. பொருளுக்கு மயங்காதவர் எவருமில்லை. அதனால் தான் நான் நரிக்குப் பணம் கொடுத்தேன். இப்பொழுது நரி எருமைக்குப் பல வழிகளாலும் தீங்கு செய்கிறது. நான் தனவந்தன். எருமை பரம ஏழை. அதனால் நரிக்குப் பணம் கொடுக்க எருமையால் முடியாது. எனது எதிரியை அடக்க நினைத்தேன். அதற்குப் பணம் பேருதவி செய்தது” என்றது

குரங்கு. ஆகையால் அன்பானவர்களே, எதிரியை அடக்கும் ஆயுதம் பணம் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்' என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

*தெருளா தொழுகும் திறனிலா தாரைப்*
*பொருளால் அறுத்தல் பொருளே – பொருள் கொடுப்பின்*
*பாணித்து நிற்கிற்பார் யாருளரோ? வேற்குத்தின்*
*காணியின் குத்தே வலிது.*

பணத்தால் எதிரிகளை வெற்றி கொள்ளலாம். வேலினால் குத்துவதை விடப் பணத்தால் குத்துவதே வலிமையுடன் எதிரியின் உள்ளத்தைத் தாக்கும். **"வேற்குத்தின் காணியின் குத்தே வலிது"** என்பது பழமொழி.